உ

கடவுள் துணை.

அப்பர் பர்மா

# த்தவிலாசம்.

இஃது

[illegible] பண்டிதரின் மாணாக்களி லொருவராகிய [illegible] நிவாஸியாகியும் சென்னை சுதேச [illegible] 25-வது பட்டாளத்து போர்ச்சேவகருமாகிய [illegible] ப்ராஞ்சிஸ் அவர்களால்

இயற்றப்பட்டு,

[illegible] பட்டாளத்தின் பென்ஷன் ஜெமேதார் வெங்கடசாமி நாயகர் குமாரரும் பெங்களூர் [illegible], தமிழ் உபாத்தியாயருமாகிய [illegible] வெங்கட்ராம் நாயகரவர்களால்

[illegible] க்களும், விருத்தங்களும், சேர்க்கப்பட்டு

—:o:—

[illegible] பஸ்ட்மட்ருஸ்பைனீர் போர்ச்சேவகன் காளேஸ்திரி.

[illegible] ர்கள்குமாரரும் சி. இயாகோபு அவர் களின் மாணாக்களி லொருவராகிய ஷை பைனீர் தமிழ் உபாத்தியாயர்,

[illegible] வரியப்ப னவர்களால்

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு,

பெங்களூர்,

[illegible] ஸ்வாமி ஆசாரியா ரவர்களது

[illegible] ரியா அச்சுயந்திர சாலையில்

பதிப்பிக்கப் பட்டது.

கஅஅஅ-வரு.



## விளம்பரம்.

—◈—

இதனால் சகலமான கனவான்களுக்குத் தெரிவிப்பதியாதெனில் பெங்களூர் கன்டோன் மென்ட் தண்டு சிக்கபஜார் பிளேக் அள்ளியிலிருக்கும், விக்டோரியாபிரஸ் மானேஜர், ப-நாராயணஸ்வாமி ஆசாரியாரிடத்திலேயும் மேல்கண்ட இடத்திலிருக்கும், 25-வது பட்டாளம் 4-வது கம்பனி சிப்பாய் ஜோநத்தன், பிராஞ்சீஸ் என்பவரிடத்திலேயும். விலை சரசமாய். இப்புஸ்தகம் பெற்றுக் கொள்ளலாம். புஸ்தகம் ஒன்றுக்கு ஆப்பயிண்டிங் டபால் கூலி உட்பட 7½. அணா வாகவும் உள்ளூருக்கு- 6½ அணா வாகவும் ஸ்டிப்கவர் டபால் கூலீ உட் . 4½-அணா வாகவும் உள்ளூருக்கு 4-அணா வாகவும். 10-புஸ் ஒரேதடவை மொத்தமாய் வாங்குபவருக்கு. ஒரு புஸ்தகம் ...கவும் கொடுக்கப்படும்.



...by V. I. SUBRAHMONEY PILLAY, Bangalore.

# முகவுரை.

இவ்விலாசத்தை இயற்றியவரின் கருத்து யாதெனில், பலமதஸ்தரும் பொதுவாய் விலாசத்தை பாடும்படியாக கேட்டுக்கொண்டபடியால் பலமதஸ்தருக்கும் ஒவ்வும்படி இப்புத்தக காப்புதனிலேயே "அருமறைதனக்கெட்டாதஐயனருள்காப்பதாமே" என்று பொதுவாகப் பாடப்பட்டிருக்கிறது. அதன்றி அப்பர்பர்மா வென்னும் பேலாணபர்மா ஆவாமாண்டலி என்பது பூர்வீகத்தில் ஆவா விசேஷம், அதற்குபின் மாண்டலிபட்டணம் தலைமையானதின் பிறகு ஆவாமாண்டலி என்று தங்கள் வீட்டுப்பெயருடன் வழங்கி இதுபரியந்திரம் ஆவாவென்றே அப்பர்பர்மாவிற்கு பேர்வழங்கி வருகிறது. இப்போது இந்த பர்மாவிலாச சண்டையானது பொழிப்புறையாக மாத்திரம் சரித்திரம் சுருக்கிபாடப்பட்டிருக்கிறது. சரித்திர முழுமையுமாக பாடவேண்டுமானால் இராமாயணம், பாரதம்போல் நீளும், ஆதலால் பொருளுக்குத்தக்கபடி சுருக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால்கற்றோருக்குமுன் சிற்றறிவான் சொன்ன செய்யுள்குற்றமசொற்குற்றம்எழுத்தின்பிழை வசனபேதமுமானபலதப்பிதங்களையும் கற்றவர்கள்பொறுப்பதுதங்கள்பாரமெனபிரார்த்திக்கின்றேன். அதன்றி அப்பர்பர்மாவை ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டது சிலபேப்பர்காரர்கள் நியாயமல்லவென்றுசொல்லிவந்தமையால் என்கருத்தின்படி அந்நாட்டை ஆங்கிலேயர்பிடித்தது நியாயமேயென்று இப்புத்தகத்தை எழுதி ரூபித்தேன். இனியும் அவ்வரசன் செய்துவந்த எல்லாஅனியாயத்தையு மெழுதிமுடிக்க வேண்டுமானால் சரித்திரம் நீளும். ஆதலால்சுருங்கசொல்லல் விளங்கவைத்த லென்பதைபோல் முடித்திருப்பதாக் கண்டுக்கொள்ளக் கோறுகிறேன்.

## கைபொப்க்கனவானகளின் பெயர்கள்.

J. பாஸ்டியன் ஜெமைசார் அஜிடன் 1ST M. P.
D. டெனீஸ் சப்-ஒவர்சியர், பல்லாரி.
மாணிக்கம்பிள்ளை ரங்கூன்.
T. M. முத்துசாமி பிள்ளை Commissariat Department Rangoon.
ப. ஜான் உபதேசி கந்தனூர்.
இ. பெருமாள் சிப்பாய் 25TH M. I.
A. மெக்கேல் சிப்பாய் 25TH M. I.
தே. மதுரநாயகம் ஐயா.
J. M. வாக்கர் ஐயர் பட்லர் V. சாமுவேல் பிள்ளை.
J. M. வாக்கர் ஐயர் மேட்டி அந்தோனி.
தே. பிச்சைமுத்து ஐயா,
J. A. பிரான்சீஸ்.
அ. சிமோன் சிப்பாய் 25TH M. I.

## சாற்றுக்கவிகள்.

25-வது பட்டாளம் 4-வதுகம்பெனி சிப்பாய்
இராயவேலூர்,
வி. பழனியாண்டி புலவர்பாடிய
ஆசிரியவிருத்தம்.

தாலமதிலுயர்ந்த வப்பர்பர்மாதேசந்
தனையாண்ட தீபோனின்சரிதையாவும்
கோலமுறுவிலாசதமி ழதனூல்செய்து
குற்றமறபுலவர்களா லாய்ந்துக்கொண்டு
சீலமுளஇராகலேயை கியானத்தோடு
சீராகப்பாடியச்சிற் பதித்துத்தந்தான்
சாலவல்லமலேயாளக்கந்நனூர்வாழ்
தகமைபெருஞ்ஜோநத்தன்பிராஞ்சீஸ்மாதோ.

---

பஸ்ட்டுமைனீர் தமிழ் உபாத்தியாயர்
சி. சவரியப்பனவர்களா லியற்றிய
ஆசிரியவிருத்தம்.

கனமுடன்பர்மாவாண்டநற்றீபோன்
கருதருஞ்சரிதைதயைநல்ல
இனமுடன்விலாசமாகவேசெய்து
இணையிலாப்புகழினையடைய
மனமுவப்பாகும் ஜோநத்தன்பிராஞ்சீஸ்
வண்கவிவாணரைக்கொண்டு
தனதுடன்திருத்தியச்சிட்டான்யாருந்
தரையினில்மதித்திடத்தானே.

---

வே. ஐ. சுப்பிரமணி பிள்ளை யவர்களாலியற்றிய
ஆசிரிய விருத்தம்.

சீரிலகு மப்பர்பர்மா தேசராஜ
தீபோனின்மீது சேனைசய்னயத்தோடு
பேரிலகுமிங்லீசு மன்னர்யுத்தம்
புரிந்ததொரு சரிதையலாம்புகட்ச்சியாக
நேரிலகுங்கவிவாண ருதவியாலே
நீணிலத்தில் பாடியச்சிற்பதித்துதந்தான்
ஏரிலகுமலேயாளக் கந்நனூர்வாழ்
இனியகுண ஜோநத்தன் பிராஞ்சீஸ்தானே.

---

25 வது பட்டாளத்து சிப்பாய் அ. சிமோன் அவர்களால்
பாடிய நேரிசை வெண்பா.

அப்பர் பர்மாவில் அமர்புரிந்த வாறனைத்தும்
செப்பரு விலாசமதாய் செய்யவே-இப்புவியில்
ஆனபுலவரைக் கொண்டாய்ந் தச்சிலிட்டளித்தான்
ஜோநத்தன் பிராஞ்சீஸிதோ.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 8 | 17 | டழிக்கும் ... | டளிக்கும் |
| 8 | 25 | கழித்து ... | களித்து |
| 12 | 18 | க்க ... | வைக்க |
| 13 | 25 | தண் டளை ... | தணட்ளை |
| 16 | 3 | எத்த னை நானை .. | எத்தனை நாளை |
| 16 | 18 | வசனல் .. | வசனம் |
| 16 | 29 | வரியின்கீழ் ... | வசனமெனக்காண்க |
| 21 | 31 | உருதி ... | உறுதி |
| 24 | 27 | இவ்வடத்தில் ... | இவ்விடத்தில் |
| 32 | 28 | மதலை என்பது .. | கப்பலெனக்கொள்க |
| 32 | 35 | வல்லயை ... | வல்லமை |
| 47 | 21 | கிருய்ச்சுடி ... | கிருய்ச்சுட்டி |
| 55 | 37 | வஞ்சினங்கள் ... | வஞ்சிரங்கள் |
| 56 | 34 | போர்க்கலம் ... | சண்டைகப்பலாம் |
| 67 | 24 | பகரித்து .. | மபகரித்து |
| 67 | 32 | மரக்கலமென்பது .. | கப்பலெனக்கொள்க |
| 71 | 28 | ஆலேயர் ... | ஆஙகிலேயர் |
| 73 | 18 | வாரக ... | வாராக |
| 74 | 16 | எஙளகரசி .. | எங்களரசி |
| 77 | 29 | ஆக்கிலேயர் ... | ஆங்கிலேயர் |
| 79 | 6 | தந்திரமசய் ... | தந்திரமாய் |
| 80 | 10 | செம்வோ ... | செய்வோ |
| 80 | 29 | விங்த ... | விதங் |
| 88 | 5 | களளின்று ... | களின்று |
| 92 | 23 | சந்தணர் ... | வந்தணர் |
| 92 | 23 | களுக்கும் ... | கட்கும் |

உ

கடவுள் துணை.

# அப்பர் பர்மா யுத்தவிலாசம்.

காப்பு—நாட்டை.

விருத்தம்.

திருநின்றந்தொளிசெய்ஆவா தேசமாள்தீபோராஜன்
பெருமையுமிங்கிலாண்டர் பெலத்தையுமறிந்தமட்டும்
இருநிலத்தவர்கொண்டாட வெழில்செய்நாடகமாய்ப்பாட
அருமறைதனக்கெட்டாத ஐயன்ருள்காப்பதாமே.

அவையடக்கம்.

விருத்தம்,—இராகம், தோடி.

தோகைமயிலாடுதற் கிணையென்றுவான்கோழி
தொல்லுலகிலாடல்போலும்
சோமன்முன் மின்மினிப்போலவுஞ்சோரிமுன்
சொரிகின்றபனிபோலவும்
வாகுசெரிமாளிகை தனக்குநிகராய்ச்சிறுபெண்
மணல்வீடுகட்டல்போலும்
மண்டலந்தனிலறிஞர் முன்புகலையோராத
வண்மையோன்மாண்டலியையாள்
ஈகைமிகுராசாதி ராசன்தீபோவரசன்
எழிலிங்கிலாண்டருடனே
எதிருத்தமாய்க்கலக மெய்திட்டவளமையான்
எண்ணரியநாடகமதாய்
ஓகையொடுகூறினேன் புலவர்முதல்யாவரும்
உதவியாய்ப்பிழைகள்நீக்கி
உல்லாசமாகவுந் தரணிமிசைநீடூழி
யோங்கிடச்செயல்வேண்டுமே.

## கட்டியக்காரன் வருகும்.

விருத்தம்,—கலியாணி.

சிரமதிற்சரிகைப்பாகைச்சிரந்துமேபளபளென்ன
உரமதில்மணிபதித்த உச்சிதப்பதக்கமின்ன
கரந்தனில்வாளுமேந்திக் கட்டியக்காரன்றீபோ
அரசனிற்சபையைநாடி அழகுடன்வருகின்றனே.

கட்டியன்வருகிற தருவு, இ-ம். தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே ஒய்யாரமாக (கட்டி)

அநுபல்லவி.

மட்டிலாக்கீர்த்திப்பெற்ற மாண்டலியாளுமன்னன்
சட்டமிகுகொலுவைச் சார்ந்துகெற்சித்துகெட்டி (கட்டி)

சரணங்கள்.

1. சரிகைப்பொன்னுருமாலை தலையிற்றகதகென்ன
தங்கப்பதக்கமார்பில் தளதளவென்றுமின்ன
கருதரும்பாஜிபந்து கங்கணங்களுந்துன்ன
கண்டவர்கள்மனது கலங்கிமிகவுங்குன்ன
முடுக்கு காசினியோர்புகழ் பேசிடுமாண்டலி
காவலனிச்சபை மேவுகிறார்நீங்கள்
கண்டபடிவாயினாலே துண்டவார்த்தைப்பேசுவோர்கள்
தண்டனைக்குள்ளாவாரெனக் கண்டிதமாயெச்சரித்து (கட்

வசனம்.

அகோதெப்படியென்றால் சிறப்புற்றோங்கிய இப் பூமண்டலத்தில் பர்மாவைச்சார்ந்த ஆவா மாண்டலியென்னும் நகரத்தை மகாநீதியுந் தருமமுங்குறைவில்லாமல் நடத்திவரும்படி செங்கோல்செலுத்தும் மஹாராஜ ராஜனுமாகிய தீபோஅரசன் கொலுவுக்கு வருகிர விதங்காண்க.

## தீபோ ராஜன் தன்கொலுவுக்கு வருதல்.

பொது விருத்தம்.

அலைகடல்சூழுமிந்த அவனியிலென்னாட்டிற்கும்
நல்லருமைப்பர்பர்மா நாட்டினையாளுமிக்க
வலவனென்றெவருஞ்சொல்லு மன்னனாந்தீபோராஜன்
சொலிமிகும்பணிகள்பூண்டு சொகுசுடன்வருகின்றனே.

தரு-இராகம்-கலியாணி-ஆதிதாளம்.

---

பல்லவி.

ராஜாதிராஜன்மஹா ராஜன் தீபோவெனும்
ராஜமார்த்தாண்டன்வந்தான் — கொலுவிருக்க (ராஜா)

அநுபல்லவி.

தேசதேசத்ததிபர் தினம்வந்தடிவணங்க
மாசிலாநவமணி மகுடந்தலையிலங்க (ராஜா)

சரணங்கள்.

1. மார்பிற்றரளஆரம் வரிசையாகவேமின்ன
வச்சிரக்கல்லிழைத்த வாகுவலயந்துன்ன
சிருறுஆடையும் விசித்திரமாய்ப்பளிச்சென்ன
சிந்தைமிகக்களித்து தினகரன்வாரானென்ன (ராஜா)

2. மதிமிகுடயிடாசவுங்கா மந்திரிமார்புடைசூழ
மாதரசானயிரு மனவிமாருமகிழ
அதிகபயத்துடனே அமைச்சரெதிரிற்றெழ
அஞ்சலிசெய்துதேசத் தரசர்கீர்த்திப்புகழ (ராஜா)

3. மத்தளதாளமேளம் வழுவாமலேயடிக்க
மாதரெதிரேநின்று வாகுடனேநடிக்க
உத்தமபுங்கிவேதமுறைத்தருகில்நடக்க
உன்னதமுத்துக்குடை உயர்வாகவேபிடிக்க (ராஜா)

இராஜன், கடவுள்வணக்கம்.

---

விருத்தம்.

ஆதியேபோற்றி போற்றி அருமறைப்பொருளேபோற்றி
நீதியாயெவ்வுயிர்க்கு ணிறைந்ததற்பரனேபோற்றி
பூதலத்தவரும்விண்ணோர் பூசிக்குந்தேவேபோற்றி
ஏதமில்லாதவெந்த னிடர்கடிந்தாள்வாய்போற்றி.

டயிடா வென்னு முதல்மந்திரி போற்றி

---

விருத்தம்.

அரசர்க்குமரசேபோற்றி அப்பர்பர்மாவைநாளும்
தருமமாயரசுசெய்யுந் தன்னியாபோற்றியிந்த
இருநிலந்தன்னில்யாரும் இணையில்லாவீராபோற்றி
தருநிகாரசேயுந்தன் றாளிணைபோற்றிபோற்றி.

சவங்காவென்னும் இரண்டாம் மந்திரி போற்றி

## விருத்தம்.

வரைநிகர்புயத்தாய்போற்றி மாநிலந்தன்னையாளும்
மருமன்னற்கேறுபோன்ற வாளுடைகையாபோற்றி
தரணியிலெவருமெச்சுஞ் சற்குணநிபுணபோற்றி
குறைவிலாநிதிபடைத்தக் கொற்றவாபோற்றிபோற்றி.

## பொது விருத்தம்.

கொற்றவன்தீபோராஜன் கொலுவினில்மந்திரிமார்கள்
பெற்றியாய்ப்பணிந்துயேற்றிப் பீடுசெய்திருக்கும்வேந்தன்
முற்றிலுஞ்சபையைநோக்கி முன்னின்றமந்திரிமாரை
வெற்றிகொள்ளரசன்றேச விசாரணைசெய்கின்றனே.

## அரசன் தேசவிசாரணை, கன்னிகள்—ஆரபி.

வினு. மாதமும்மாரிபெய் தெமதுநாட்டின்பயிர்கள்
வளமாயிருக்குதா மந்திரிமாரே,

விடை. வேதியர்செபத்திலு மும்மதுதர்மத்தில்மழை
மிகபயிர்கள் நலமாச்சுதெங்களரசே.

வினு. தேவாலயங்களுக் கனுதினம்பூசனைகள்
சிறப்பாய்நடக்குதா மந்திரிமாரே,

விடை. காவலாநினது கட்டளையினாலனுதினங்
கரவாதுசெய்குரா ரெங்களரசே.

வினு. ஆசிலொருகடமையூரார் தரச்சேமநிதி
அழியாதிருக்குதா மந்திரிமாரே,

விடை. கூறுமேவாமாராமல் திரைகொண்டுச்சேமநிதி
குறையாமல்வளர்கின்ற தெங்களரசே.

வினு. சத்திரந்தனிலன்ன தானங்கள்சீறுடன்
சரியாய்நடக்குதா மந்திரிமாரே,

விடை. அத்தனேயுமது உத்திரவினுற்றருமங்கள்
அழியாதுசெய்குரோ மெங்களரசே.

போது வசனம்.

அகோதெப்படியென்றால் ஆங்கிலேய ஏற்றுக்காரனான வர்த்தகன் தீபோ ராஜனிடத்தில் தேக்குமரங்களுக்காக மனுக்கொடுக்க வருகின்ற விதங்காண்க.

வியாபாரி ஏற்றுவான் வருகிற

விருத்தம்.

இந்தநற்சமயந்தன்னி லேற்றுவானெனும்வியாபாரி
இந்தியாவிட்டுக்கப்பலேறி வியாபாரஞ்செய்ய
சிந்தையில்நினைந்துமாண்டலா தேசத்திற்குபிரயாணம்
விந்தையாய்ச்செய்தேமிக்க விரைவுடன்வருகின்றானே.

தருவு - இராகம் - மோகனம் - சாப்புதாளம்.

பல்லவி.

வருகிறானேற்றுக்காரன் வியாபாரஞ்செய்ய-வருகிறான்.

அநுபல்லவி.

வருகிறான்மாண்டலி மன்னனைக்கண்டுதேக்கு
மரங்கள்வாங்கவென்று மனக்களிப்புடனின்று (வரு)

சரணங்கள்.

1. காலில்சட்டையுமாட்டி கையில்பிரம்புமேந்தி
மேலில்கோட்டையுடுத்தி விரைவுடனேநடந்து (வரு)

2. தொப்பிதலையில்வைத்து ஜோப்பில்லேஞ்சியுமிட்டு
கப்பலிலேறிபணங் கையில்ரொக்கமாய்கொண்டு (வரு)

3. இந்தியாவில்கிடையா தெழிலாந்தேக்குமரங்கள்
தந்திரமாகவாங்கித் தான்லாபம்பெறவென்றே (வரு)

இந்தியா ஏற்றுக்காரன் தீபோ அரசனுடன் மனுவெழுதி கொடுக்கும்

வசனம்.

ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரராகிய ஆவாமாண்டலி நகரத்தையாளுகின்ற அரசனே யானாகிய ஆங்கிலேய ஏற்றுக்கரான் ஒருமனுவெழுதி தங்களுக்குக் கொண்டுவந்தே னிறைவனே.

இராசன் முதல் மந்திரிக்கு சொல்

வசனம்.

கேளும் முதற்மந்திரியே இந்தியாவர்த்தகனானவன் மனுவுகொண்டுவந்ததை வாங்கிவாசியும் பிள்ளாய் மந்திரியே.

முதல் மந்திரி வசனம்.

இதோவாங்கி வாசிக்கிறேனையா.

மந்திரி எற்றுக்காரனுக்கு சொல்

வசனம்.

ஆரப்பா இந்தியாவர்த்தகனே உன் மனுவை என்னிடம் தாரும் பிள்ளாய் எற்றுக்காரா.

வர்த்தகன் மனுவைக்கொடுக்கும்

வசனம்.

இதோ அடியேனுடைய மனுவையா மந்திரியே.

---

மந்திரி மனுவை வர்த்தகனிடம் வாங்கிவாசிக்கும்

சீட்டுகவி.

மாட்சிமையடைந்தகுயின் விக்டோரியாஎம்ப்பிரஸ்
மதிவதனியாளுகைக்குள்.
மதிராசெனும்பெரிய நகரேற்றுவானோலை
மாண்டலியையாளுமரசன்
காட்சிநிறைதீபோ வெனுந்தீரன்வாசித்து
கானகந்தன்னில்தேக்கு
காட்டரசன்மூலம் யான்பெரபத்துலட்சமெழில்
கவின்பத்து லட்சரூபாய்
ஆட்சியொடுயென்னிடம் நீயேற்றுகாகிதம்
அன்புடன் றரவேண்டுமாய்
ஆசித்துவந்தனன் ஆகையாலிவ்வுதவி
யருள்புரியவெண்டுமையா
நீட்சியொடுநின்னுலகை நீடூழியாளுவாய்
நீதிபரனுகவென்றும்
நினைநம்பிவந்தவென் னுசைநிரைவேற்றுவாய்
நிபுணனேகோடிசரணம்.

---

மனுவை வாசிக்கக்கேட்ட அரசன்

வசனம்.

ஆ! ஆ! அப்படியே ஆகட்டும், அப்படியே ஆகட்டும், மகாசந்தோஷம் பிள்ளாய் எற்றுக்காரா.

இராஜன் மந்திரிக்கு சொல்

விருத்தம், தோடி.

மந்திரிகேளாயிந்த வர்த்தகன்தேக்குமாக்கள்
சொந்தமாய்பத்துலட்சங் தொகைதனக்களவாய்வெட்ட
சிந்தையாயிவன்றனக்கு சீட்டதையழித்தோமின்று
சுந்தரமானகாட்டின் துரையிடத்தேகச்சொலவாய்.

வசனம்.

ஆ! ஆ! இந்தஆஸ்தானத்துக்கேற்ற மந்திரியே இதோ இந்த ஏற்று க்காரனுக்கு பத்து லட்சங் தேக்குமரங்கள் வெட்டிக்கொள்ளும்படி இச் சீட்டை காட்டரசனிடத்துக்கு கொண்டுபோனால் அக்காட்டரசனவ ன் வர்த்தகனுக்கு ஏற்றமரங்களை வெட்டிகொள்ள சொல்லுவான் இச் சீட்டை வர்த்தகனிடம் கொடும்பிள்ளாய் மந்திரியே.

மந்திரி அரசனுக்கு சீட்டைவாங்கி சொல்

வசனம்.

அப்படியே வர்த்தகனுக்கு சீட்டை அழித்து அனுப்புகிறேனையா ஆண்டவனே.

மந்திரி வர்த்தகனுக்கு சீட்டைகொடுக்கும்

வசனம்.

ஆரையாவர்த்தகனே உனக்கு இராசன் இச்சீட்டை எழுதிகொடுத் தார் இதை காட்டரசனிடத்தில் கொடுத்தீரேயானால் அக்காட்டரசன் உமக்கு ஏற்ற தேக்குமாக்களை வெட்டிக்கொள்ளும்படி உத்தாரங்கொ டுப்பார் உன்கோரிக்கையை நிரைவேற்றிக்கோள்ளும் வர்த்தகனே.

வர்த்தகன் மந்திரிக்கு சீட்டைவாங்கிசொல்

வசனம்.

அப்படியே மகாபாக்கிய மையா மந்திரியே.

---

காட்டரசன் வருகிற பொது

விருத்தம்.

திடமுடன்மாண்டலியென்னுங் தேசத்தையாளுமன்னன்
அடவியைஆண்டுகார்க்கு மரசெனயாருஞ்சொல்லும்
தடமிகுமார்பகான தன்யன்காட்டரசனின்று
இடையினில்கத்திகட்டி இனிதுடன்வருகின்றனே.

---

தருவு - இராகம் - கலியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

காட்டரசன்வந்தான் பராக்கிரம காட்டரசன்வந்தான்

அநுபல்லவி.

காட்டரசனவந்தான் கண்டவர்கள்நடுங்கி
வாட்டங்கொண்டிடவெகு வகிழ்வாய்மீசைமுருக்கி (கா)

சரணங்கள்.

1. உச்சிக்கொண்டையுவெகு உன்னதமாய்க்காண
கச்சிதமாய்நாளுங் காட்டையாண்டிடும்வல்ல (கா)
2. அடவியில்மரங்களில் அணுவாகிலும்போக்குக்
கிடங்கொடாமலேநாளும இனிதுடன்காத்திடும் (கா)
3. கூற்றுவன்போல்வாள்கைக் கொண்டுதனையெதிர்த்த
மாற்றலரைவெட்டி மடியச்செய்திடுந்தீர (கா)
4. ஆரடாகாட்டிலெனை யறியாமலேவந்தோன்
கூரடாவென்றுமிக குதித்துயதட்டிகொண்டு (கா)

——o——

இந்தியயேற்றுக்காரன் காட்டரசனுக்கு சீட்டழிக்கும்

விருத்தம்.

ஐயனே அடவிகாக்கு மரசனேதீபோராசன்
கையெழுத்துடனேயிந்த கடிதம்நீபார்த்துக்கொண்டு
ஐயமில்லாமலுந்த னடவியில்தேக்குமாக்கள்
பையவேபத்துலட்சம் பாங்குடனளித்திடாயே

வசனம்.

கேளுமையா அடவியைக்கார்க்கின்ற அரசனே இதோ தீபோ அரசனனவர் கொடுத்த தன் கையொப்பான கடிதம் இதை உமக்களித்து பத்து லட்சம் தேக்குமாக்களை வெட்டிக்கொள்ளும்படி சொன்னார் எதுஞ் சந்தேகப்படாமல் மரங்கள்வெட்டும்படிக்கு உத்தாரங்கொடுமையா காட்டரசரே.

தீபோ இராஜன் சீட்டைவர்த்தகனிடம்வாங்கி காட்டரசன் வர்த்தகனுக்குசொல் விருத்தம்,

உத்தரவளித்தேனியு முண்மையாயடவிதன்னில்
கத்திகோடாலிநல்ல கருக்குள வாளுங்கொண்டு
மெத்தவேபருத்ததேக்கில் வேணதையறுத்துநீயும்
நித்தமுங்கணக்குதன்னை நியாயமாயொப்பிப்பாயே

வசனம்.

அகோகேளும் வர்த்தக ஏற்றுக்காரனே நீ கொண்டுவந்த சீட்டின் படி வுத்திரவுகொடுத்தேன், ஆனால் கத்திகோடாலி முதலான கூர்மை யான ஆயுதங்களையும், ஆட்களையுஞ் சேகரித்துக்கொண்டு, பருத்த தேக்குமரங்களைவெட்டி பிரதிதினமும் யெனக்குசரியானகணக்கு வொப்பிப்பாய் ஏற்றுக்காரனே.

ஏற்றுக்காரன், கவி.

சொன்னசொற்படியே — நன்னயஅடவி
தன்னில்நான்றேக்கை — மன்னவாஅறுப்பேன்

வசனம்.

அப்படியே தங்களுத்திரவின்படி முதிர்ந்த தேக்கு மரங்களையே தேடி வெட்டிக்கொள்ளுகிறேன் காட்டரசரே.

ஏற்றுக்காரன் கூலியாட்களை அழைத்தல்.

---

விருத்தம்.

வலுவினில்மிகுத்தென்னுளு மரங்களைவெட்டித்தள்ளும்
அலுவலைச்செய்யும்நல்ல ஆட்களேசொல்லக்கேளீர்
நிலவுசெய்மரங்களுக்குள் நீண்டதோர்தேக்குதன்னை
தலமதில்வெட்டிதள்ளி சாற்றுவீரெனக்குத்தானே.

வசனம்.

ஆரடாகாட்டில் மரங்களைவெட்டும்படியான வலுமையுள்ள கூலிக்காரர்களே!

கூலியாட்கள் வசனம்.

ஏனையா நாங்களிதோ வரிசையாக நிர்க்கின்றோமையா கர்த்தனே.

வர்த்தகன் வசனம்.

அப்படியானால் நீங்களெல்லோரும் இந்தகாட்டில் நுழைந்து நன்றாய்பருத்து நீண்டதேக்குமரங்களை வெட்டிதள்ளி எனக்குத்தெரியப்படுத்துங்கள் கூலிக்காரர்களே.

கூலியாட்கள் வசனம்.

அப்படியே மகாபாக்கிய மையா வர்த்தகரே.

—o—

கூலியாட்கள் மரம்வெட்டுகிற—தரு-இ-ம். தன்னியாசி-அட-தாளம்.

பல்லவி.

வெட்டுவோம்வாரீர் மரங்களை
வெட்டுவோம்வாரீர்

அநுபல்லவி.

வெட்டுவோம்வாரீர் வியாபாரிக்கிவேண
மட்டுமரங்களை நட்டமாகாமலே (வெட்டு

சரணங்கள்.

1. கோடாலிகொண்டுவா வடகயிற்
கூடவே கொண்டுவா
வாடாமல்தேக்கு மரங்களைவெட்டியே
வாங்குவோம்கூலியை நீங்குவோம்வீட்டிற்கு (வெட்டு)

2. வேணாவெட்டுவோமா அலதுமுன்
மேல்கிளைவெட்டுவோமா
பாருங்கள்மரத்தை பக்குவமாய்வெட்ட
பகருவி ரா ராய்ந்து தகுதியெனதெரிந்து (வெட்டு)

3. மாடிமரம்பார் தேக்கைப்போல
வளர்ந்திருக்குஞ்சீர்
நாடியிவைகளைநாம் நருக்குவோமேயானல்
நம்முடையயெசமான் செம்மையாகவுதைப்பார் (வெட்டு)

4. கயிறைமரந்தனிலே விசையாக
கட்டினேனினிமேலே
தயிசியமாய்பலத்தாலே யிழுத்துநாம்
தள்ளிவிடுவோமிந்த பள்ளத்தில்வீழவே (வெட்டு)

5. வேண்டினதைவெட்டினோம் நமக்கினி
வேண்டாததைவிடுவோம்
காண்டகந்தனைவிட்டுக் கப்பலேற்றயேற்றுக்
காரணம்நம்மதிகாரியிடஞ்சொல்வோம் (வெட்டு

---

தன்யெஜமானுக்கு கூலியாட்கள்சொல் விருத்தம்.

எங்களினெஜமானேநீ ரியம்பியப்படியேகாட்டில்
தங்குதேக்கின்மரங்கள் தள்ளினேம்சிலதைவெட்டி
சங்கையில்லாமல்வந்து சரியாகப்பார்த்துக்கூலி
பங்கிட்டுயெங்களுக்குப் பரிவுடனீய்ந்திடமோ.

வசனம்.

எங்களின் யெஜமானராகிய வர்த்தக யேற்றுக்காரரே தங்களுத்திர வின்படி இதோதகுதியான தேக்குமரங்களை யின்றையதினம்வெட்டித்த ள்ளியிருக்கிறோம் தாங்கள்வந்து கணக்குபார்த்துக்கொண்டு எங்களு டைய கூலியைபகிர்ந்து கொடுக்கவேண்டும் எஜமானரே..

பொது விருத்தம்.

இப்படிகூலியாட்க ளியம்பியசொல்லைக்கேட்டு
அப்படியானால்நல்ல தாகட்டுமென்றுசொல்லி
ஒப்புடன்காட்டிற்சென்று வுயர்மரங்களையாராய்ந்து
செப்பியகூலிதன்னை தீர்த்துமேயனுப்பினனே

வசனம்.

இந்தவிதமாகக் கூலியாட்கள் சொன்னதைக்கேட்டு வர்த்தக ஏற்று க்காரன் காட்டில் நுழைந்து வெட்டின மரங்களத்தனையுங் கணக்கிட்டு தான் பேசியபடியே கூலியைவேலையாட்களுக்கு பங்கிட்டுகொடுத்து ம ரங்களைக்கப்பலேற்றி வருகிறகாலத்தில் கலகம்உண்டானவிதங்காண்க.

காட்டரசன் வர்த்தகன்பேரில் அகாதமாய் சொல்லும்,

விருத்தம்.

ஆரடாவர்த்தகாநீ அகங்காரங்கொண்டுகாட்டில்
கூரியபடிச்செய்யாமல் கொற்றவனுக்கை தன்னை
மீரியேநடந்ததாலே விரைவுடனுன்னை நீபோ
நேரினில்நானுமிப்போ நிமிஷத்திற்கொண்டுசெல்வேன்.

வசனம்.

ஆரடாவர்த்தகனாகிய ஏற்றுக்காரனே நீ மாண்டலி மகாராஜன் வு த்திரவுமீறி அகங்காரங்கொண்டு காட்டையெல்லாம் பாழாக்கி இருவ துலட்சமரங்களுக்குமேல் வெட்டிவிட்டாய் ஆனபடியால உன்னைஇரா ஜனிடத்திற்கு கொண்டுபோகுவேன் உன்குற்றத்தையான் ஒருநிமிஷ மும் பொருக்கேன் பொருக்கேனடா ஏற்றுக்காரா.

ஏற்றுக்காரன் காட்டரசனுக்கு சொல்,

விருத்தம்.

மன்னனேகேளாயுந்தன் மரங்களிலதிகமாக
சொன்னசொற்றவரியானுந் துடுக்காகவெட்டவில்லை
இன்னிலந்தனைப்படைத்த எம்பிரானறியச்சொன்னேன்
என்னையுந்திருடனென்று யியம்பிடவேண்டாமையா.

வசனம்.

ஆ! ஆ! காட்டுக்கதிபதியாகிய இராஜனே கேளும் தங்களுடைய உத்திரவிற்கும் திபோ அரசனுடைய ஆக்கினைக்கும் மாறாக நான் அதிகமான மரங்களை வெட்டினதில்லை அண்ட, பிண்ட, சரா சரங்களைப்படைத்த ஆண்டவனரியச்சொல்லுகிறேன் இதுசத்தியம் என்னைத்திருடனென்று வீணாய் சொல்லவேண்டாமையா காட்டரசரே.

காட்டரசன் வர்த்தகனுக்குசொல்

விருத்தம்.

சத்தியங்களை நீச்செய்து தப்பித்துக்கொண்டுபோக
மெத்தவும்உபாயஞ்செய்தால் விடுவேனோஏற்றுக்காரா
கொற்றவன்திபோமுன்னே கொண்டுபோய்ச்சிறையிலுன்னை
வைத்திடல்வேண்டும்நீயும் வகையுடன்வருகுவாயே.

வசனம்.

ஆ! ஆ! சத்தியங்களைச்செய்து தப்பித்துக் கொள்ளலாமென்று யோசித்திருக்கின்றாய்வர்த்தகா அதுசெல்லாது, மாண்டலியை யாளுகின்ற திபோஇராசன்முன் உன்னைகொண்டுபோய் சிறைச்சாலையில்க்கவேண்டும் நீ காவலில் அடங்கிவருவாய்பிள்ளாய் ஏற்றுக்காரா.

காட்டரசன் வர்த்தகனை காவல்செய்யும்படி பர்மா அசுரராகிய போற்சேவகர்களை அழைக்கும்

விருத்தம்.

சொரக்காயின்பல்லாவாடா சுங்காணிமுகனேவாடா
மரக்காலின்காலாவாடா மட்டிசாம்பிராணிவாடா
பெருக்கானவயிராவாடா பிடித்திவன்றன்னை நீங்கள்
சுருக்காய்க்காவலிலேவைத்து துடர்ந்தென்பின்வருகுவீரே.

வசனம்.

ஆரடாஅடே சொரக்காய்பல்லனே சுங்காணிமுகனே மரக்காலின்காலா மட்டிசாம்பிராணி என்னும் பெயருடைய போற்சேவுகர்களே! இதோநிற்கின்ற இவனை உங்கள்காவலிலடக்கி என்னுடன்கூட அதிசீக்கிரமாய் அழைத்துவாருங்கள் திபோவரசனிடம் செல்லுவோம் போற்சேவுகர்களே.

காட்டரசன் அழைத்தவுடன் போற்சேவுகர்கள் பர்மா வேஷத்துடன் சபைக்குள் ஓடிவரும்

வசனம்.

இதோ ஓடிவந்தோம் வோடிவந்தோம் எங்களை ஆண்டுநடத்தும் எங்களரசே?

வர்த்தகனை காட்டரசன் கைதுசெய்து சிறையில்வைத்து தீபோ அரசனிடம் மாண்டலி பட்டணத்துக்கு கொண்டுசெல்லும்

வழிநடைபதம்-தரு-இ-ம். புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

நடந்துவாரீர் வாரீர் - எந்தன்பின்
தொடர்ந்துவாரீர்—வாரீர்

அநுபல்லவி.

நடந்துவாரீரிந்த அடர்ந்தவனந்தன்னை
கடந்துமேநாம்தீபோ இடந்தனைச்சேரவே (நடந்து)

சரணங்கள்.

1. ஐராவதியென்னும் ஆறுங்காணுதுயிதோ
தைரியமாயென்னைச் சார்ந்துவிரைவுடன் (நடந்து

2. மன்னவன்வாழ்மாட மாளிகையுங்கூடம்
நன்னயமாயிதோ நாம்காணத்தோற்றுது (நடந்து)

3. செங்கற்சுவர்மதில் தெரியுதுபாரிதோ
அங்கங்குகோபுரம் அடுத்திருப்பதைப்பாரும் (நடந்து)

4. தேக்கின்பலகைசுவர் தெரிவதைப்பாரிதோ
சாக்கிரதையாகயிச் சண்டாளன்தனைத்தள்ளி (நடந்து)

5. உள்ளகக்கோட்டையின் உன்னதத்தைக்கண்டோம்
வள்ளலெனுந்தீபோ மன்னனைக்காணுவோம் (நடந்து)

6. அலங்காரமாகிய அரன்மனைக்காணுது
தலமாம்இதனை நீங்கள் சந்தோஷமாய்ப்பார்த்து (நடந்து)

7. கொண்டுவந்ததைதியைக் கொற்றவன்முன்னிருத்தி
தண்டனைச்செய்திடச் சாற்றுவோம்விரைவுடன் (நடந்து)

---

கொலுவிருக்கும் தீபோ இராசனைக்கண்டு காட்டரசன் சொல்

விருத்தம்.

தன்னிகரில்லாமிக்க தயாளனேபோற்றிபோற்றி
மன்னனுயென்றுமிந்த மாண்டலியாள்வாய்போற்றி
சொன்னசொற்றவரிடாத துரைகள்ரத்தினமேபோற்றி
என்னையாண்டருளுமெந்தன் இறைவனேபோற்றிபோற்றி.

### தீபோ இராஜன் காட்டரசனுக்குசொல்

### வாழி விருத்தம்.

ஆரண்யந்தன்னைகாக்கும் அரசனேவாழிபுந்தன்
சிருள்ளகாட்டைவிட்டித் தோத்ஸதயபடுத்தேன்வந்தாய்
பாரையாள்வேந்தருன்னை பகைத்தின்றுயெதிர்த்திட்டாரோ
கூறுவாய்வந்தசேதி குறைவரயெனக்குத்தானே

### வசனம.

ஒகோ! அந்தகாரமான அடவியைக்காத்து ஆண்டு அதிபதிசெய்யும்ரசனேவாழி,செல்வம்பொழிகின்ற உந்தன்காட்டைவிட்டு யிந்தநாட்டிற்கு நீவரவேண்டிய காரணமென்ன இந்தபூலோகத்தரசர்கள் உன்னை ஏதாகிலும் உபத்திரவப்படுத்தினார்களோ! என்னசங்கதி என்னமனக்குறைவு தெரியும்படிசொல்வாய் காட்டரசனே!

### காட்டரசன் தீபோ அரசனுக்கு சொல்லும்

### விருத்தம்.

சுந்தரமன்னுகேளாய் சொல்லுவேனொருவிண்ணப்பம்
வந்ததோரேற்றுக்கார வர்த்தகனும்மிடத்தில்
தந்திரமாய்பத்துலட்சந் தனத்திற்குமரங்கள்வாங்கி
விந்தையாயிரட்டிப்பாக வெட்டினான்மரங்களையா

### வசனம்.

எங்களுக்கிறைவனுகிய அழகுபொருந்திய மன்னவனேகேளும் இதோதங்களெதிரில் நிற்கின்ற வர்த்தகன் தங்களிடத்தில் பத்துலட்சமரங்களுக்கு பணங்கொடுத்து தங்களிடமிருந்து சீட்டு இவன் கொண்டுவந்து யென்னிடங்கொடுத்த பத்துலட்சத்துக்கு மேலானமரங்களை வெட்டி நம்முடைய காட்டைவெருமை படுத்திவிட்டான் ஆனதைப்பற்றி யிவனையான் கானகத்திற் கைதுசெய்து காவலுடன் கொண்டு வந்தேனையா ஆண்டவனே!

### காட்டரசன் சொன்னதைக்கேட்ட தீபோ இராஜனனவர் கடுங்கோபங்கொண்டு வர்த்தகனைபார்த்துசொல்

### விருத்தம்.

ஒருபத்துலட்சத்திற்கு உனக்குநான்சீட்டளித்தேன்
இருபதுலட்சத்திற்கு எப்படியேற்றுக்காரா
திருட்டளவாய்மரங்கள் சேதித்தாயானதாலே
அருஞ்சிறைதன்னிலுன்னை அடைக்கவேசெய்தேன்பாராய்

வசனம்.

ஓ ஓ! வர்த்தகஞ்செய்யவந்த ஏற்றுக்காரா! நீஎன்னிடத்திற் பத்துலட்சம் பணமழித்தல்லோ சீட்டைஆதாரமாக பெற்றாய் உன்னுடைய ஏற்றுக்குமீறி அதிகமானமரங்களை என்னுடையகாட்டில் நீ வெட்டியபடியால் உன்மோசத்துக்கு பிரதி உன்னையான் சிறைச்சாலையில் வைத்தேன் நீ இப்பொழுது சிறையிலிருக்கவேண்டும் யேற்றுக்காரா.

தீபோ அரசனுக்கும் வர்த்தகனுக்கும் தர்க்கம்.

தரு-இ-ம்-சாவேரி-அடதாளம்,

சரணங்கள்.

---

வர்த்தகன்—தாழ்மை.

1. சிறையினிலெனை வைக்கச் செப்பியது தர்மமோ
திரைகடல்சூழ்மாண்டலி தேசத்தினரசே
மரங்களைவெட்டினதாய் மன்னனுங்காட்டரசன்
வந்தென்மேல்பழிமொழி வழங்கினாரரசே.

அரசன்—முடுக்கு.

2. காட்டிலருத்ததேக்கின் கணக்கைவொப்பிக்குமட்டும்
கடுஞ்சிறைவிடுத்துன்னைக் கடத்தேன்வர்த்தகனே
சீட்டின்படியேநீ செய்யாமற்போனதாலுன்
தேசம்போகவிடேன் றெறிவாய்வர்த்தகனே.

வர்த்தகன்.

3. விடமாட்டேனென்றுநீர் விளம்பினாலென்செய்வேன்
விண்மண்சாட்சியாயேதும் வேசதேனறியேன்
இடங்கொண்டுமரங்களைச் சிதையச்செய்ததுமில்லை
செப்புவேனங்கடவுள் தெரியவேயரசே.

இராஜன்.

4, கடவுளைக்கண்டதோர் கனவானானாலுமுனை
கால்நாழிகையும்விடக் கழறேன்வர்த்தகனே
மடமதியால்தேக்கு மரங்கள்வெட்டினபணம்
வாங்காமலுனைவிடமாட்டேன் வர்த்தகனே.

வர்த்தகன்.

5. உனைவிடேனென்றுநீ ருரைத்தாலென்கைதனில்
ஒருகாசுமில்லையே ஒப்பற்றஅரசே
எனைச்சிறைதனில்வைத்தா லேதுபலனுமக்கு
எழுதித்தாரேன்கெடுவு ஏற்றுக்கொள்ளரசே

அரசன்.

6. எழுதித்தருவேனென்றால் எத்தனைநாளைக்குள்
எனதுபணந்தருவாய் இயம்பாய்வர்த்தகனே
மொழிதவராமலும் மோசஞ்செய்யாமலே
முழுபணந்தருந்தேதி மொழிசெய்வர்த்தகனே

வர்த்தகன்.

7. ஆயிரத்தெண்ணூறை அடுத்தயெண்பத்திநான்காம்
ஆண்டிலுமதுகடன் அளிப்பேனெம்மரசே
வாயிதா தவராமல் வந்துசேரும்பணம்
மனம்பொருத்திடும்நல்ல வடிவுள்ளஅரசே

---

இராஜன் முதல் மந்திரியைப்பார்த்து சொல்லும்

விருத்தம்.

புத்தியில்மிகுந்தமந்திரி புகலுவேனென்றுகேளாய்
வர்த்தகனுரைத்தசொல்லை மனதில்யோசித்துநீதான்
சத்தியமாய்க்காணப்பட்டால் ஜாக்கிரதையாயிவன்றன்
கைத்தலவெழுத்தைவாங்கிக் கடுஞ்சிறைவிடுவிப்போமே.

வசனம்.

அகோகேளும் ஆலோசனையிற்சிறந்த முதல்மந்திரியே! இந்தவர்த்தகன்சொல்லும்படியான சங்கதி யுன்மனதிற்கு எப்படிதோன்றுகிறது உனக்கு திருப்திகரமாயிருக்குமானால் நன்றாய் ஆலோசித்து இவன் கையெழுத்துடன்பத்திரமாகியஆதாரம் எழுதிவாங்கிக்கொண்டு இவனை சிறையினின்று விட்டனுப்புவோம்மந்திரியே.

முதல்மந்திரி இராஜனுக்குசொல்

விருத்தம்.

அப்படியானால்நல்ல தாகட்டுமரசேநீரும்
இப்போழுதேயாஸ்தான இராயசக்காரன்றன்னை
ஒப்புடன்வரவழைத்து ஓர்காகிதமிவன்றன்
கைப்படவெழுதச்செய்து காவலாகொள்ளுவோமே.

ஆ! ஆ! அப்படியே ஆஸ்தான இராயசக்காரனை வரவழைத்து ஒரு பத்திரமிவன்கைப்பட வெழுதச்செய்து அதைநாமாதார படுத்திக்கொண்டு இவனைசிறையை விடுவித்து அவன்நாட்டிற்குஅனுப்பலா மென்று எனக்குதோன்றுகிறது அரசரே.

அரசன் மந்திரிக்கு சொல்

வசனம்.

ஆ! ஆ! பளா பளா நன்றாசொன்னாய் நன்றாய்ச்சொன்னாய் இராயசக்கணக்கனை அழைத்து உடனே ஆதாரம் எழுதச்சொல்லும் பிள்ளாய் முதல்மந்திரியே.

மந்திரி வசனம்.

இதோ அப்படியே மகா பாக்கியமையா அரசரே.

மந்திரி கட்டியனுக்கு சொல்

கவி.

காயிதமெழுத கட்டியக்காரா
ராயசன்றன்னை நலமுடனழைப்பாய்

வசனம்.

ஆரப்பா கட்டியக்காரா, (கட்டியன் இதோ சாக்கிறதையாய் நிற்குறேனையாமந்திரியே)நீ இப்பொழுது சென்று நம்முடையஆஸ்தானகணக்கனைவர்த்தகனுடையஆதாரம்எழுதும்படிஅழைத்துவாரும்பிள்ளாய்கட்டியக்காரா.(கட்டியன்) அப்படியேஅழைத்துவருகிறேனையாமந்திரியே!

இராயசனுக்கு கட்டியன் சொல்

விருத்தம்.

நன்னயமிகுமாஸ்தான ராயசக்கணக்கரேகேள்
மன்னனுந்தீபோவும்மை வரவழைத்திட்டாரையா
இன்னம்நீர்தாமதித்தா லிறைவனுங்கோபங்கொள்வார்
என்னுடன்கூடநீரும் இட்சணம்வருகுவீரோ

வசனம்.

கேளும் ஆஸ்தான இராயசக்கணக்கரே மாண்டலிபையாளும் மகாராஜாவானவர் உம்மை அதிசீக்கிரமாக சபைக்கு அழைத்துவரும்படி உத்திரவுசெய்திருக்கின்றார் ஆகையால் நீர்தாமதித்தால் கோபங் கொள்வார் என்பின்தொடர்ந்து வாருமையா இராயசக்கணக்கரே.

இராயசன் கட்டியனுக்குசொல்

வசனம்.

அப்படியே வருகிறேன்பிள்ளாய் கட்டியக்காரா

கணக்குப்பிள்ளை அரசனிடம் வருகிற தரு

---

இ-ம். தன்னியாசி-ஏகதாளம்.

பல்லவி.

கணக்குப்பிள்ளைநானே—ஆஸ்தான
கணக்குப்பிள்ளைநானே

அநுபல்லவி.

துணிவுடன்கணக்கை துரிதமாய்ப்பார்த்து
பணிவுடன்மாண்டலி பார்த்திபர்க்குரைத்திடும்(கணக்கு)

சரணங்கள்.

1. எழுத்தாணிகொண்டோலை எழுதியகணக்கை
பழுதறவாராய்ந்து பகர்ந்திடும்வல்ல (கணக்கு)

2. அப்பர்பர்மாவைஅடுத்த மன்னர்கணக்கை
ஒப்புகொடுக்கும்கல்ல உண்மையாம்ராயச (கணக்கு)

3. அளைக்காசுங்குளைவு ஆகாமல்படிக்கி
கிரமுடன்பார்த்து செப்பிடும்வல்ல (கணக்கு)

கணக்கன் கவி.

மன்னனேபோற்றி மகிபனேபோற்றி
இன்னிலமாளும் இறைவனேபோற்றி
தன்னிகரில்லா தயாளனேபோற்றி
என்னையேனழைத்தீ ரியம்புவீர்சுவாமி

வசனம்.

மாண்டலி நகரத்தையாளும் மகாராஜனே என்னைவரவழைத்தசங்கதியை தெரியப்படுத்தும் ஐயனே!

அரசன் வர்த்தகனுடைய ஆதாரமெழுதம்படி கணக்கனுக்கு சொல்

விருத்தம்.

வர்த்தகனேற்றுக்காரன் வார்த்தையைகேட்டுநீயும்
மெத்தபக்குவமதாக விளைவுடனேர்க்கராளை
பத்துமேலட்சம்ரூபாய் பரிந்தெனக்களிக்குநாளை
சித்தமாய்யெழுதியாருந் தெரிந்திடபடித்திடாயே.

வசனம்

ஒ ஆஸ்தான இராயசக் கணக்கப்பிள்ளையே இதோஇந்த வர்த்தக ஏற்றுக்காரன் சொல்லுகிறசங்கதியைக்கேட்டு நல்லபக்குவமாகயெனக்குபத்துலட்சரூபாய் இந்தவர்த்தகன் கொடுக்கும்படியான வருஷத்தை கணித்து கெடுவுகண்டு ஆதாரம்வரைந்துஎல்லோருக்கும் தெரியும்படி வாசியும்பிள்ளாய் கணக்கனே. (கணக்கன்) அப்படியேமகாபாக்கியமையா அரசரே.

கணக்கன் ஏற்றுகாரனுக்கு சொல்

வசனம்.

ஒ ஆங்கிலேய ஏற்றுவாளுகிய வர்த்தகனே! உனக்குஅரசன் பிழைவிதித்தபடிக்கு பத்துலட்சரூபாய் அரசருக்கு எந்தகாலத்திற்கொடுப்பாய் அதையெனக்கு திட்டமாய் சொல்வாயாகில் உம்முடையவார்த்தையின்படி ஒரு ஆதாரத்தையெழுதி சபையின்முன் வாசித்து அரசனிடம் தருகிறேன் சொல்லும் பிள்ளாய் வர்த்தகனே.

ஆதாரம்யெழுத வர்த்தகன் கணக்கனுக்கு சொல்
வசனம்.

கேளுமையா கணக்கரோ நான்பத்துலட்சரூபா மாண்டலி அரசனு கிய தீபோஇராசருக்கு கொடுக்கவேண்டியது நிட்சயந்தான் அப்பணத் தை 1884ம் வருஷத்தில் செலுத்துவேனென்று கெடுவுகட்டிபத்திர மெழுதிக் கொள்ளும் கையொப்பம்வைத்துக்கொடுக்கிறேனையா இராய சக்கணக்கரோ. (கணக்கன்) இதோ எழுதுகிறென் வர்த்தகா

கணக்கன் வசனம்.

இதோ உன் ஆதாரத்தை எழுதினேன் கையொப்பம்வையும் பிள் ளாய் வர்த்தகனே, (வர்த்தகன்)இதோஎன் கையொப்பம்வைக்கிறேனை யா கணக்கரோ.

கணக்கன் இராஜனுக்கு சொல்
வசனம்.

இதோ பத்திரமெழுதினேன் ஏற்றுக்காரனுடைய கையொப்பமும் வைப்பித்துக் கொண்டேனையா சுவாமி.

அரசன் கணக்கனுக்கு சொல்
வசனம்.

கேளும் கணக்கனே நீ யெழுதிய பத்திரத்தை சபையோர்கள்கே ட்கும்படிவாசியும் பிள்ளாய்இராயசக்கணக்கனே.(கணக்கன்) இதோவா சிக்குறேனையா அரசரோ.

சபையில் இராயசன் பத்திரமெழுதி வாசிக்கும்

---

ஆசிரிய விருத்தம்,

மாண்டலியையாள்கின்ற வள்ளல்தீபோவெனும்
மகாராஜனுக்கிங்கிலீஷ்
மகாகுயின்விக்டோரியாயெம்பிரஸ்யெல்லைவாழ்
வர்த்தகன்யேற்றுவான்யான்
வேண்டலுடனிந்தநாளெழுதுங்கராறொன்
வென்னிலேயாருமறிய
விஸ்தாரமாயுமதுகாட்டிலுளதேக்குமரம்
வேண்டியொருபத்துலட்சம்
காண்டலொடுவினவவுத்திரவளித்திடவும்நான்
காட்சியொடுவெட்டிவரும்நாள்
காட்டரசனுலதிகமரமெனதப்பிதங்
கண்டபடிபத்துலட்சம்
ஈண்டல்ரூபாய்வருமாயிரத்தெண்ணூத்தி
எண்பத்திநான்காமாண்டில்
ஏதுதடையின்றிச்செலுத்துவேன்கையொப்ப
மிதுவெனதுகண்டிடரோ.

அரசன் - வசனம்.

சரி—சரி நன்றுயெழுதிவாங்கினுய் கணக்கனே பத்திரத்தை என்னிடம் கொடும்பிள்ளாய் கணக்கனே.

அரசன் கணக்கனிடம் பத்திரத்தைவாங்கி மந்திரிக்குசொல்

விருத்தம்

மந்திரிசொல்லக்கேளாய் மௌனமாயிருந்திடாமல்
தந்திரமாய்மரத்தைவெட்டி தானகப்பட்டுக்கொண்ட
அந்தவர்த்தகனின்றுள்ள அருஞ்சிறைதனை விடுத்து
சொந்தமாமவனுட்டிற்குத் துரிதமாயனுப்புவாயே.

வசனம்.

அகோகேளும்மந்திரி நீயிப்பொழுதுசும்மாயிருக்காமல்நம்முடையகாட்டில் தந்திரமாய் அதிகமான மரங்களைவெட்டி குற்றவாளியென்று அகப்பட்ட அந்தவர்த்தகனை சிறையிலிருந்து விடுதலைசெய்து அவன் சொந்தநாட்டிற்கு அனுப்பிவிடும் பிள்ளாய்மந்திரியே. (மந்திரி) இதோ அப்படியே அனுப்பிவிடுகிறேனையா அரசரே.

மந்திரி கட்டியனுக்குசொல்

விருத்தம்.

காவலைக்கார்க்குநல்ல கட்டியக்காராகேளாய்
சேவித்துயிவன்கையொப்ப சீட்டதையளித்ததாலே
கோவத்தைதணித்தார்வேந்தன் குறிப்பின்போலிவன்கால்கா
தீவிரமாகயின்று சிதைத்துநீவிடச்செய்வாயே. (ப்பை

வசனம்.

அகோகேளும் கட்டியக்காரா இட்சணத்தில் நீ சிறைச்சாலைக்குச் சென்று சிறையைக்கார்க்கும் போற்சேவுகர் வசமாயிருக்கப்படானின்ற ஆங்கிலேய எற்றுக்காரனுகிய வர்த்தகனை சிறையிலிருந்து விடும்படி சொல்லும் பிள்ளாய் கட்டியக்காரா. (கட்டியன்) அப்படியே சொல்லுகிறேனையா மந்திரியே!

கட்டியன் சிறைச்சாலை காவலருடன் சென்று சொல்

விருத்தம்.

சிறைதனைக்கார்க்கும்நல்ல தீரசேவுகரேகேளீர்
அரசனுந்தீபோசொன்ன ஆக்னேபோல்வர்த்தகன்றன்
பெரியதோரிருப்புக்காப்பை பேதமில்லாமலேதான்
நருக்கியேயின்றிவன்றன் நாட்டினுக்கனுப்புவாயே.

வசனம்.

ஓ சிறைச்சாலையைக்கார்க்கும் தீரச்சேவுகர்களே! இதோயிந்த இந்தியா எற்றுக்காரனுன் வர்த்தகனை அரசன்விடும்படிசொன்னுராகையால் இவன்காலிலுள்ள இருப்புக்காப்பைதறித்துப்போட்டு இவனைஇச்சிறை

யிலிருந்துவிட்டுஇவன்னாட்டிற்கு அனுப்பிவிடுங்களப்பாபோற்சேவுகர்களே. (சேவுகர்) இதோஅப்படியே செய்கிறோமையா கட்டியகோ

காவலர் வர்த்தகனுக்கு சொல்

விருத்தம்.

காலதைநீட்டுமையா காப்பதைகழட்டவேபூ
பாலனுமுரைத்தாரொன்று பண்பாககட்டியன்சொன்னாப்
போலவேசிதைத்துவிட்டோம் போய்ராஜன்றன்னைக்கண்டு
சாலவேயுமதுதேசஞ் சந்தோஷமாய்ப்போவீரே.

வசனம்.

ஓஓ கேளும்வர்த்தகரே(வர்த்தகன் சொல்லுமையாபோர்ச்சேவுகரே) நீர்அரசருக்கு ஆதாரமெழுதி கொடுத்தபடியால் அரசர் உனதுபேரில் கோபந்தணிந்து உம்மிடகாலிலுள்ள இருப்புக்காப்பை தரித்து உம்முடையநாட்டிற்கு விட்டனுப்பும்படிசொன்னார் நீரும்முடைய காலைநீட்டுமையா வர்த்தகரே. இதோ உம்முடைய காலிலுள்ள காப்பை நீக்கினோம் அரசனைக்கண்டு நீர்சந்தோஷமாகவும்முடையநாட்டைச்சேருவீர்வர்த்தகரே. (வர்த்தகன்) அப்படியே ஆகட்டுமையா காவலர்களே

வர்த்தகன் அரசனிடம் சென்று வழியனுப்பித்துக் கொள்ளும்

வசனம்.

கேளுமெங்களாண்டவனே நீர் இந்த ஏழை அடியேன்பேரில் தயவுகூர்ந்து யென்னைசிறையிலிருந்து விடுதலைசெய்ததற்காகஉமக்கு ஆயிரங்கோடி வந்தனம் என்னாட்டிற்கு செல்லுகிறெனையா அரசரெ.

இராஜன் வர்த்தகனை வழியனுப்பல்

விருத்தம்.

நன்னயமாகவுந்த னாட்டிற்குசுகமதாக
இன்னிமிஷத்திற்றானே ஏதேனுமட்டியின்றி
உன்னதக்கப்பலேறி யூருக்குயேகுமானால்
சொன்னசொற்றவராவண்ணம் சுருக்கினிற்பணமீவாயே

வசனம்.

ஓய் வர்த்தகனே உம்முடையநாட்டிற்கு இந்த நிமிஷமே கப்பலேறி போகலாம்ஆனால் நீஎனக்குஉறுதியான ஆதாரபத்திரிகை எழுதி கொடுத்தபடி சொல்தவராமல் பணத்தை கெடுவுபோல் சீக்கிறத்தில் அனுப்பிவிடும் வர்த்தகனே. (வர்த்தகன்) அப்படியே அனுப்பிவைக்கிறேனையா அரசரே.

அரசன் வர்த்தகனை சிறையிலிருந்துவிட்டதின்

பொது-தரு. இ-ம். கலியாணி-அடதாளம்.

பல்லவி.

சிறைவிடப்பட்டானே-வர்த்தகனும்
சிறைவிடப்பட்டானே

அநுபல்லவி.

சிறைவிடப்பட்டானே தீபோவரசன்சொல்
லுறையதுபோலவே வொருதடையின்றியே (சிறை)

சரணங்கள்.

1. காலின்கடயமதை கண்டித்துவிட்டாசினி
மேல்நமக்கொருவித விசனமுமில்லையென (சிறை)

2. வர்த்தகந்தனில்லாபம் வந்ததுபோதுமென்று
சித்தமதிலேயெண்ணி தேவனை தியானம்பண்ணி (சிறை)

3. தப்பிப்பிழைத்தோமின்று சாருவோம்தேசத்தை
இப்பழிக்குப்பழி யினிநாம்வாங்குவோமென (சிறை)

பொது விருத்தம்.

விடுபட்டயேற்றுக்காரன் வேகமாய்கப்பலேறி
தடையின்றிவருகும்போது தார்வேந்தன்றனக்குச்செய்த
கெடுதியைகலத்திலுள்ளோர் கேட்கவேகப்தானோடு
எடுத்துமேவிபரமாக இயம்பியேபுலம்புவானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக சிறையிலிருந்து விடுதலைப்பெற்ற ஏற்றுக்காரனை ஆங்கிலேய இந்தியாவர்த்தகன் கப்பலேரிவரும்போது அரசன்செய்த கொடும் ஆக்கினையை கப்தானோடு சொல்லிவரும் விதங்காண்க.

வர்த்தகன் தன்சங்கடத்தை கப்தானோடுசொல்-தரு.
கண்ணிகள்.

1. தப்பிப்பிழைத்தேனையா கப்தானே ... நம்
தம்பிரான்தயவதினால் கப்தானே.

2. பத்துலட்சமரங்கள் கப்தானே ... நானும்
பாங்காகயேற்றெடுத்தேன் கப்தானே

3. கபடமதாய்காட்டரசன் கப்தானே ... என்மேல்
கணக்கதிகஞ்சொன்னானையா கப்தானே.

4. அதினாலிருவருக்கும் கப்தானே ... சினம்
அதிகமாய்மூண்டுதையா கப்தானே.

5. இப்படிசிலகாலமாய் கப்தானே ... எந்தன்
ஏவலைநடத்திவந்தேன் கப்தானே

6. வீணாகக்காட்டரசன் கப்தானே ... என்னை
விரோதித்துப்பகைத்தானே கப்தானே.

7. வனத்திலிருந்தவனை கப்தானே ... வீணாய்
வழக்கினாலவனென்னை கப்தானே.

8. கள்வனென்றெந்தனையுங் கப்தானே ... அவன்
கைதாக்கிசிறையில்லவைத்தான் கப்தானே.

9 மாண்டலிமன்னனிடங் கப்தானே ... பொய்
வார்த்தைதனையுறைத்தான் கப்தானே

10. பத்துலட்சம்தனம்பின்னும் கப்தானே கொடுக்க
பகர்ந்திட்டான்தீபோராஜன் கப்தானே.

11. அரசன்விதித்தபடி கப்தானே ... நானோர்
ஆதாரமெழுதிதந்தேன் கப்தானே.

12. தந்தஆதாரம்பெற்று கப்தானே ... இராஜன்
தனிச்சிறைவிடுத்தானையா கப்தானே.

---

## பொது விருத்தம்.

வர்த்தகன்கப்தானுக்கு வகையுடன்யெல்லாஞ்சொல்லி
நத்தியேதனதுசொந்த நாட்டினைச்சேர்ந்தபின்பு
மெத்தவும்வருத்தத்தோடு மேலானபெரியோருக்கும்.
மத்தியபார்லிமெண்டாருக்கு மனுவொன்றையளித்திட்டானே

## வசனம்.

இந்தவிதமாக சிறையிலிருந்து விடுதலைப்பெற்ற ஏற்றுக்காரனை வர்த்தகன் கப்பலேரி வரும்பொழுது கப்பல்தலைவனை கப்தானுடன் தனக்குதீபோஇராஜன் நடத்தியஅக்கிரமத்தை ச்சொல்லி முடிந்தபிரகு இந்தியாவுக்குவந்து சேர்ந்துமிகுந்த மனவருத்தத்தோடு இந்தியாவிலுள்ள கனவான்களுக்கும் மத்தியஸ்தராகிய பார்லிமெண்டாருக்கும் மனுவு ஒன்றைதயார்செய்து அனுப்பினானென்றுகாண்க.

---

ஆங்கிலேய பார்லிமெண்டுயென்னும் சபையார்கள் வர்த்தகன் கொடுத்த மனுவை வாசிக்குப்படி கணக்கனை அழைப்பிக்கும்

விருத்தம்.

பிசகாமல்காவற்கார்க்கும் பில்லைசேவுகனேகேளாய்
வினசயாகயெழுந்துயாரும் மெச்சும்ராயசக்கணக்கன்
வசதியிற்சென்றுநாங்கள் வரச்சொன்னோம்சீக்ரமென்று
இசையவேஇச்சபைக்கு இட்சணம்வரச்சொல்வாயே.

வசனம்.

ஆரடா ஆசாரவாசலைக்கார்க்கும் பில்லைக்காரனே! நீ அதிசீக்கிரமாய் இராயசக்கணக்கன் வீட்டிற்குச்சென்று மந்திர ஆலோசனைபார்லிமெண்டு சபையார் அழைத்தாரென்று இட்சணம்சபைக்கு அழைத்துவாரும் பிள்ளாய் சேவுகனே. (சேவகன்) அப்படியே அழைத்துவருகிறேனையா சபையோர்களே!

சேவுகன் கணக்கனுக்குசொல்

விருத்தம்.

ஆய்ந்தெந்தபெருங்கணக்கை அணாநொடிதனில்பார்த்தோதும்
இராயசக்கணக்கனேகேள் நற்சபைதன்னிலுள்ள
தூய்மைசேர்பெரியோர்மற்ற துரைகளுமுன்னைநாடி
நேயமாயழைத்தாரிப்போ நிமிஷத்தில்வருகுவாயே

வசனம்.

எப்பேர்கொற்ற திராதகணக்குகளையும் ஒருநிமிஷநேரத்தில் ஆராய்ந்தெடுத்துரைக்கும் இராயசக்கணக்கனே! பார்லிமெண்டாரும் மற்ற துரைகளும் உம்மை சீக்கிரமாய் சபைக்கு அழைத்து வரும்படிச் சொன்னார்கள் வாருமையாகணக்கரே.

கணக்கன் வசனம்,

இதோவுன்பின் தொடர்ந்து வருகிறேன் சேவுகனே

☛ 17-வது பக்கத்திலுள்ள கணக்கன்தருவை இவ்விடத்தில் உபயோகிக்கவும்.

இராயசன் பார்லிமெண்டில் வந்துசொல்

விருத்தம்.

பெரியோரேபோற்றியாரும் பேசரும்பார்லிமெண்டுக்
குரியோரேபோற்றியின்று வுங்கள்நற்சபைதனக்கு
சிறியேனைவரவழைத்த சேதியைசொல்வீராகில்
வினாவாகமுடிப்பேனுங்கள் மெல்லடிசரணம்போற்றி.

வசனம்.

மகா கனமும் மேன்மையும் பொருந்திய பார்லிமெண்டு சபையார்களே! உங்களனைவருக்கும் வந்தனம் என்னையிச்சபைக்கு வரவழைத்த சங்கதியை தெரியச்சொல்வீர் ஐயா சபையோர்களே!

பார்லிமெண்டு சபையார் கணக்கனுக்கு சொல்

விருத்தம்.

வந்தராயசனே கேளாய் வர்த்தகன்மனுவுதன்னை
சிந்தையாய்படிக்கவேண்டி சீக்கிரம்வரவழைத்தோம்
இந்தநற்சபையிலுள்ள யாவரும்கேட்பதாக
விந்தையாய்மனுவுதன்னை விளங்கநீபடித்திடாயே.

வசனம்.

அகோ இராயசக்கணக்கனே அப்பர்பர்மாவிற்குச் சென்று வர்த்தகத்தினல் நஷ்டமடைந்த ஏற்றுக்காரனுடைய மனுவைஇங்குள்ளயாவரும்கேட்கும்படி வாசித்துகாண்பியும் பிள்ளாய் இராயசனே.

இராயசன் வசனம்.

இதோ அப்படியே வாசிக்கிறேன் பெரியோர்களே.

வர்த்தகன் பார்லிமெண்டாருக்கு கொடுத்தமனுவை இராயசன் வாசிக்கும்

---

ஆசிரிய விருத்தம்.

என்னையுமாண்டலிதனக்கு யனுப்பினைவத்த
எழில்பெரியோரோயானு மியம்பக்கேளீர்
மன்னவன்பா லடைந்துவந்தசேதிதன்னை
மனுவினல்தெரிவித்து மரங்கள்வாங்கி
பின்னமில்லாமலே வெட்டகாட்டினுக்கு
பெரியவனுந்திருட னென்றுச்சிறையில்வைத்தான்
நன்னயமாயாதார மெழுதியீய்ந்து
நான்வந்தேனிதற்குவகை நவிலுவீரோ.

பொது விருத்தம்-

மனுவதைநன்றாய்க்கேட்ட வண்மைசேர்பார்லிமெண்டார்
மனதினில்யோசித்தென்ன மறுமொழிசொல்வோமென்று
நினைவினில்கொண்டிருக்க நிபுணனுந்தீபோமன்னன்
கனமுளச்சபையில்வந்து கணக்கனையழைப்பிப்பானே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக வர்த்தகன் பார்லீமெண்டு சபையாருக்கு எழுதிகொடுத்த மனுவை கணக்கன்வாசிக்க கேட்ட பார்லிமெண்டார் ஆலோசித்து மருகடிதம்யெழுதுவோமென்றிருக்கும்போது அப்பர்பர்மா ஆவாஎன்னும் மாண்டலிபட்டணத்

தை ஆண்டுபரிபாலித்து நடத்திவரும் அரசன் தீபோவானவர் தன் கொலுமண்டபத்தில் வந்து கணக்கனையழைப்பித்து நாடுநகரத்தின் கணக்கை பார்க்கும் விதங்காண்க.

தீபோ இராஜன் கட்டியனுக்குசொல்

கவி,

ஆரடாகட்டியா கூறுவேன்கேளாய்
நேரினில்கணக்கனைச் சீருடன்அழைப்பாய்

வசனம்.

ஆரடா ஆசாரவாசல்காக்கும் கட்டியக்காரா! நீ அதிசீக்கிரமாய்நம்முடைய கணக்கனை என்முன் அழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா

கட்டியன் வசனம்.

இதோ அப்படியே அழைத்து வருகிறேனையா சுவாமி.

பொது விருத்தம்.

கட்டியன்விரைவாய்வந்துக் காவலனழைத்தானென்று
மட்டிலாபயத்தினோடு மனமதுகலங்கிமெத்த
சட்டையும்பாகைவைத்து சாக்கிரதையாய்கணக்கின்
கட்டையுங்கையிலேந்திக் கணக்கனும்வந்திட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக கட்டியன் இராஜன் உத்திரவின்படி கணக்கனிடம் சென்று அரசனழைத்தானென்று சொன்னமாத்திரத்தில் மனது குழப்பங்கொண்டு சட்டையும் பாகையும் பூண்டு கணக்குகட்டை யெடுத்துக்கொண்டு கணக்கன் அதிசீக்கிரத்தில் அரசன் சபையில் வந்துசேர்ந்த விதங்காண்க

இராயசக்கணக்கன் அரசருக்கு சொல்

வசனம்.

சரணம் சரணமையா மகாராஜரே இராயசக்கணக்கன் வந்தேனையா சுவாமி அடியேனை அழைப்பித்தக் காரணம் இன்னதென்று திருவாய் மொழிந்தருளவேண்டுமையா ஆண்டவனே.

அரசன் இராயசனுக்கு சொல்

விருத்தம்.

கணக்கனே நன்றாய்க்கேளுக் கடுகளவெனும்விடாமல்
கணக்கனே நமதுநாட்டைக் கருதவொண்ணாவனேக
கணக்கையும்நம்மைச்சார்ந்த காவலர்திறைப்பணத்தின்
கணக்கையுங்கவனமாகக் கண்டெனக்குரைத்திடாயே.

வசனம்.

அகோகேளுங்கணக்கனே கடுகளவாகிலும் பிசகாமல் நமதுபூமியையெண்ணிக்கணக்கிடக்கூடாத அநேக கணக்குகளோடு நம்மைச்சார்ந்த இராஜாக்களின் பகுதிகணக்குகளையு மிகுந்தஜாக்கிரதையாக பார்வையிட்டு எனக்குத் தெரியச்சொல்லும் பிள்ளாய் கணக்கனே.

கணக்கன் வசனம்.

அப்படியே மகாபாக்கியம் கணக்குப்பார்த்துச் சொல்லுகிறேனையாசுவாமியென் ஆண்டவனே.

கணக்கன் கணக்கைப்பார்க்கும் பாக்கிப்பணங்களின்
அகராதி.

---

அ-அ-அ ... ஆவாக்கணக்கு
அம-அம-அம ... அமராபுரத்துக்கணக்கு
ஆ-ஆ-ஆ ... ஆத்துக்கணக்கு
இஞ்-இஞ்-இஞ் ... இஞ்சாண்கணக்கு
கத்-கத்-கத் ... கத்தாகணக்கு
குஞி-குஞி-குஞி ... குஞிபூவாக்கணக்கு
சகா-சகா-சகா ... சகாயக்கணக்கு
சக்-சக்-சக் ... சக்கைகணக்கு
சவு-சவு-சவு ... சவ்வாச்கணக்கு
சவ்-சவ்-சவ் ... சவுட்லோன்கணக்கு
சவ்-சவ்-சவ் ... சவ்காஞ்ஜிகணக்கு
சில்-சில்-சில் ... சில்லேக்கணக்கு
சிம்-சிம்-சிம் ... சிம்பிஜோன்கணக்கு
செம்-செம்-செம் ... செம்பவ்வேக்கணக்கு
ஞவ்-ஞவ்-ஞவ் ... ஞவ்வூக்கணக்கு
டண்-டண்-டண் ... டண்டலோக்கணக்கு
நஞ்-நஞ்-நஞ் ... நஞ்சோன்கணக்கு
நெ-நெ-நெ ... நெம்புக்கணக்கு
தட-தட-தட ... தடவுக்கணக்கு
பக்-பக்-பக் ... பக்கான்கணக்கு
பா-பா-பா ... பாமுக்கணக்கு
பியூ-பியூ-பியூ ... பியூக்கான்கணக்கு
பிளே-பிளே-பிளே ... பிளேட்டோன்கணக்கு
மாண-மாணமாண ... மாண்டலிகணக்கு
மிங்-மிங-மிங ... மிங்கோன்கணக்கு
மிஞ்-மிஞ்-மிஞ் ... மிஞ்ஜான்கணக்கு
மியூ-மியூ-மியூ ... மியூத்தாகணக்கு
மின்-மின்-மின் ... மின்தைக்கணக்கு
மே-மே-மே ... மேலாக்கணக்கு
மொக்மொக்-மொக் ... மொக்கோய்கணக்கு
ஜோமஜோமஜோம ... ஜோமஜிக்கணக்கு
வர்-வர்-வர் ... வர்த்தகன்கணக்கு

பாக்கியைகண்டேன் பாக்கியை கண்டேன் பாக்கியை கண்டெடுத்தேனையா

கணக்கன் மட்டு விருத்தம்.

பார்த்ததோர்கணக்கைப் பகருவேன்கேளுஞ்
சீர்த்திசேர்நமது தேசத்தைச்சார்ந்த
பார்த்திபர்கணக்கில் பழுதொன்றுமில்லை
தூர்த்தனும்வர்த்தகன் தொகைவரவிலேயே.

வசனம்.

என்னிறைவனே கேளும் கணக்குகள் முழுமையும் வெகுநுண்மையாக சோதித்து பார்த்தேன் நமது நாட்டைச்சார்ந்த அரசர்கள் முதலான குடிகளின் கணக்குகளில் எள்ளளவேனும் பாக்கியில்லை ஆனால் இந்தியா ஏற்றுக்கார வர்த்தகன் எழுதிக்கொடுத்த கரார் படிக்கி அந்த பத்துலட்சம் ரூபாய்மாத்திரம் வந்து சேரவேண்டி யிருக்கிறது ஆண்டவனே.

இராஜன் கணக்கனுக்குசொல்

விருத்தம்.

வர்த்தகன்பணமுமின்னம் வரவில்லையென்றுகேட்டக்
கொற்றவன்கோபமீறிக் கூறுவான்கணக்கனோடு
மெத்தவும்மோசக்கார வியாபாரிநமக்குச்செய்தக்
குற்றத்தையிங்கிலாண்டுக் கோட்டிநீயனுப்புவாயே.

வசனம்.

அகோகேளும் கணக்கனே இந்தியா ஏற்றுக்கார வர்த்தகன் நமக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி பத்துலட்சம் ரூபாய் தவணை கடந்தும் இதுவரையில் கணக்குச்சேரவில்லை யென்பது நீ சொல்லத் தெரியலானேன் ஆ—ஆ அப்படியா? ஆனால் அந்த வர்த்தகன் நமக்கு மோசமாக கரார் யெழுதிக்கொடுத்து யிதுவரையில் பணம்அனுப்பாமல் யிருக்கிற சங்கதியை இங்கிலாண்டருக்கு யெழுதியனுப்பும் பிள்ளாய்கணக்கனே (கணக்கன்) அப்படியே மகாபாக்கியமையா ஆண்டவனே.

கணக்கன் இராஜனுக்கு சொல் வசனம்.

அடியேன் தங்களுத்திரவின்படி இங்கிலாண்டருக்குநிருபம் எழுதிமுடித்தேனையாஸ்வாமி.

இராஜன் வசனம்.

அப்படியானால் நீ யெழுதிய நிருபத்தை நான் கேட்கும்படியாக வாசியும்பிள்ளாய் கணக்கனே.

கணக்கன் இங்கிலாண்டருக்கு எழுதிய நிருபத்தை இராஜனுக்கு வாசித்துகாண்பிக்கும் ஆசிரிய விருத்தம்.

---

அப்பர்பர்மாதிபோ ஆங்லாண்டருக்கு
அறைகின்றேனுங்கள்வர்த்தகனும்வந்து

ஒப்பிதமாப்பத்துலட்சந் தேக்கைவாங்கி
வுண்மையாய்கடவாமல் அதிகமாகத்

தப்பிதமாய்வெட்டினதா லதின்பணத்தைத்
தாவென்றேமாதார மெழுதியீய்ந்தான்

செய்பியதோர்கெடுவுதப்பிப் போனதாலே
தீரவிசாரித்து பணஞ்செலுத்துவீரோ.

கணக்கன் வசனம்.

அகோ கேளும் கணக்கனே இந்தக்ஷணமே இந்தநிருபத்தை இங்கிலாண்டருக்கு தபால்மூலமாய் அனுப்பிவிடும் பிள்ளாய்கணக்கனே (கணக்கன்) அப்படியே அனுப்பிவிடுகிறேன் அரசரே.

கணக்கன் வேவுக்காரனுக்குசொல் வசனம்.

ஆரடாவேவுக்காரனே (ஏனையாகணக்கரே)இதோயிந்த நிருபத்தை தபாலில்செலுத்தி வாரும் பிள்ளாய் வேவுக்காரனே.

வேவுக்காரன் வசனம்.

அப்படியே தபாலில் செலுத்தி வருகிறேன்கணக்கரே.

பொது விருத்தம்.

கடிதத்தைஇங்லாண்டு கனவான்கள்கருத்தாய்பார்த்து
திடமுடனேசித்தென்ன செப்புவோமென்றிருக்க
அடங்காதகோபங்கொண்டு அரசனுந்தீபோமந்திரி
இடத்திளில்நிருபமொன்றை யெழுதவேசொல்லுவானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தவிதமாக தீபோ அரசன் எழுதிய நிருபத்துக்கும் வர்த்தக ஏற்றுக்காரன் விண்ணப்பத்திற்கும் நாம்யென்னவுத்திரவு கொடுக்கலாமென்று பார்லிமெண்டார் யோசனையிலிருக்கிற காலத்தில்தீபோஅரசன் தான்யெழுதிய கடிதத்திற்கு ஆங்கிலேயர்பதில் உடனேஅனுப்பவில்லையென்று மகாகோபங்கொண்டு தனிது மந்திரியை அழைத்து இங்கிலாண்டருக்கு கண்டிப்பான காயித மெழுதச்சொல்லும்விதங்காண்க.

இராஜன் மந்திரிக்குசொல்

விருத்தம்.

அறிவினில்மிகுத்தமந்திரி ஆங்கிலேயர்கடிதத்திற்கு
மறுமொழியனுப்பாதாலே மாச்சரியங்கொண்டார்போலுந்
தெரிகின்றதோடம்ஸ்டீமர் சிரந்தயிராவதத்தின்
அருவியிற்கப்பலோட்ட லாகாதென்றெழுதுவாயே.

வசனம்.

ஆ—ஆ! அறிவிற்சிறந்த மந்திரியே கேளும்! இங்கிலாண்டருக்கு வர்த்தக யேற்றுக்காரன் பாக்கியைபற்றி எழுதியனுப்பின நிருபத்திற்கு இதுவுள்வரையில் பதில்வாராதிருப்பதை யோசித்துப்பார்த்தால் ஏதோ இங்கிலாண்டர் நமதுபேரில் பகைகொண்டிருப்பதாக தோற்றப்படுகின்றது ஆனால் அவாள்பகை நம்மை யென்னசெய்யும் நீயிந்தக்ஷணமே இதுவரையில் ஆங்கிலேய வர்த்தகக்கப்பல்கள் ஸ்டீமர்கள் ஓடங்கள் நமது அயிராவதி ஆற்றில் முன் நடந்ததுபோல் இனி நடக்கலாகாதென்று ஆங்கிலேயருக்கு இன்னொருகடிதம் யெழுதியனுப்பு மந்திரியே! (மந்திரி) அப்படியே மகாபாக்கியமையா மாண்டலிவையாளப்படாநின்றமகாராஜனே.

மந்திரி கணக்கனுக்குசொல்

விருத்தம்.

சாத்திடுங்கணக்குதன்னைச் சரியாகச்சொலுங்கணக்கா
பார்த்திபனுரைத்தாப்போல பார்லிமெண்டாருக்கின்று
நேர்த்தியாய்நிருபந்தன்னை நிமிஷத்திலெழுதிநீயும்
காத்திரமாகவேதான் கடிதத்தைப்படித்திடாயே

வசனம்.

அகோ கேளுங்கணக்கனே இப்போது உன்னெதிரில் மாண்டலியை யாளுகின்ற தீபோமகாராஜன் சொன்னது உனக்குதெரிந்திருக்கிறதல்லவா? அதேபிரகாரம் பார்லிமெண்டாருக்கு ஒருநிருபம் எழுதிக்கொண்டுவாரும் பிள்ளாய் கணக்கனே.(கணக்கன்) அப்படியே எழுதிக்கொண்டு வருகிறேனையாமந்திரியே

கணக்கன் வசனம்.

இதோ தங்களுத்திரவின்படி நிருபம் எழுதிக்கொண்டு வந்தேனையா மந்திரியே!

மந்திரி வசனம்.

ஆ—ஆ! அப்படியானால் இராஜனுக்கு தெரியும்படியாக நீ எழுதிய நிருபத்தை வாசித்துக்காண்பியும் பிள்ளாய்கணக்கனே. (கணக்கன்) அப்படியே வாசித்துக்காண்பிக்கிறேனையாமந்திரியே.

நிருபம் சீட்டுக்கவி.

அரசனுந்தீபோஆங்கிலேயற்கு அறிவிக்குஞ்சேதியாதென்னில் (ம்
பரிவிலாவர்த்தகன்சக்கதிதன்னைப் பற்றிமுன்கடிதத்தைவிட்டோ
சரிவறமறுமொழிச்சாற்றிடாதாலே சதாகாலங்கப்பல்கள்நடந்த
பெரிதானவைராவதியினைக்கடந்தால் பிழைவருமென்றறிவீரோ.

இராஜன் வசனம்.

ஆ-ஆ-ஆ-ஆ சபாசு சபாசு நன்றாயெழுதிவைத்தாய் மந்திரி? இந்த

நிருபத்தை அதிசீக்கிரத்தில் வேவுக்காரன் மூலியமாய் இங்கிலாண்டரு க்கு தபாலில் அனுப்பிவிட்டு நமது வாசலி லிருக்கும் கட்டியக்காரனை அழைப்பியும்மந்திரி. (மந்திரி) அப்படியே செய்குறேன் இராஜரே.

மந்திரி வசனம்.

ஆரடா வேவுக்காரனே! (ஏனையாஸ்வாமி) இதோயிந்தநிருபத்தை தபாலில்செலுத்தி வாரும்பிள்ளாய் வேவுக்காரனே.

வேவுக்காரன் வசனம்.

அப்படியே செலுத்தி வருகிறேனையா மந்திரியே.

மந்திரி வசனம்.

ஆரடா கட்டியக்காரனே (ஏனையாமந்திரி) நமது தீபோ இராஜன் உன்னைவரவழைத்தார் வாரும்பிள்ளாய் கட்டியக்காரனே. (கட்டியன) அப்படியே வருகிறேனையா மந்திரியே.

மந்திரி வசனம்.

தங்களுத்திரவின்படிக்கி நிருபத்தை வேவுக்காரர் மூலியமாய் தபாலில் அனுப்பிவிட்டேன் இதோ கட்டியக்காரனும் வந்திருக்கிறான் அரசரே.

இராஜன் கட்டியனுக்குசொல்

விருத்தம்.

ஆரடாவாசல்கார்க்கும் அழகுகட்டியனேகேளாய்த்
தீரமும்பலமும்நல்ல திறமைசேர்நமதுகாவற்
காரரில்சிலரைநீயுங் கடுகவேயோடியெந்தன்
நேரினிலழைத்துவந்து நிமிஷத்தில்விட்டிடாயே.

வசனம்.

அகோகேளும் ஆசாரவாசல்கார்க்கும் கட்டியக்காரனே நமது காவற்போர்ச்சேவுகர்களில்நல்லதீரமும் பலமுந்திரமையுமுள்ளவர்களாய் நம்முடையசமுகத்திற்கு அதிசீக்கிரத்தில் அழைத்துவாரும் பிள்ளாய் கட்டியக்காரனே. (கட்டியன்) அப்படியே மகாபாக்கியமையா இராஜரே.

கட்டியன் காவற்போர்ச்சேவகர்களுக்குசொல்

கவி.

காவற்காரர்களே தீவிரமாகவே
ஆவலாயரசன் கூவினார்வருவீர்.

வசனம்.

ஆரப்பா காவற்போர்ச்சேவுகர்களேநமதுமாண்டலியையரசாளுகின்றதீபோமகாராஜன்உங்களை அழைத்துவரும்படிஎன்னையனுப்பி யிருக்கிறார் நீங்களதிசீக்கிரமாகஎன்பின்னாலேவாருங்கள்காவற்போர்ச்சேவுகர்களே

பர்மா காவற் போர்ச்சேவுகர்கள் வசனம்.

அப்படியே உமது பின்னாலே இதோ வருகிறோம் ஐயா கட்டியக்காரரே.

காவற்போர்ச்சேவுகர் இராஜனுக்கு சொல்

கவி

தாரணிபுகழும் வீரனேயெம்மை
சீருடனழைத்த காரியஞ்சொல்வீர்.

வசனம்

ஸ்ரீமார்த்தாண்ட கெம்பீர கோலாகல வீரப்ரதாபத்தோடுமாண்ட விநகரை அரசுசெலுத்தும் தீபோமகாராஜனே எங்களை தங்கள்சமுகத்திற்குவரவழைத்தகாரியமின்னதென்றுதெரியச்சொல்லுவீர்மகாராஜனே.

இராஜன் விருத்தம்.

இயம்புவேனென்றுகேளீர் இட்சணம்நீங்களோடி
அயிராவதத்தினாற்றில் ஆங்கிலேயர்கப்பலோடம்
பயமிலாதினிமேல்வந்தால் பகருவீர்வேண்டாமென்று
தயிரியமாய்நடத்தில் தடுத்துமேயடித்திடீரோ.

வசனம்.

அகோகேளுங்கள் என் அரசுக்கு ஒருதீங்கும்வராமல் பாதுகார்க்குங்போர்ச்சேவுகர்களேநானென்றுசொல்லுகிறேன்கேளுங்கள்அதாவது நீங்களிந்தக்ஷணமே ஓடிப்போய் அயிராவதியென்னும் நமது ஆற்றில் ஆங்கிலேயர்களின் கப்பல்கள் வருமானல் நீங்கள்எதுக்கும் பயப்படாமல் ஆத்தில்கப்பல்களை நடத்தக் கூடாதென்று சொல்லுங்கள் அவாளுங்களுத்திரவை மீறிநடத்துவார்களே யானல் அவர்களை நன்றாயடித்து வந்தவழி பார்த்தோடும்படிச் செய்யுங்கள் போர்ச்சேவுகர்களே! (போர்ச்சேவுகர்வசனம்.)அப்படியேச் செய்கிறோ மெங்களிறையனே.

போர்ச்சேவுகரில் தலைவன் சொல்

கவி.

அதிபதிதீபோ அரசன்சொற்படியே
நதிதனிலெந்த நாளுமன்னியர்கள்
மதலையைவிட்டு வந்திடாமலேதான்
பதனமாய்க்கார்க்க பரிவுடன்வாரீர்,

தரு—(இம்) புன்னாகவராளி அடதாளம்.

---

பல்லவி.

வருவீர் தோழர்களே—நமது
மன்னன்சொற்படிநீங்களே (வரு)


அநுபல்லவி.

வருவீர்தோழர்களே வல்லமையுடனென்றும்
மறுதேசத்தார்கப்பல் வரவிடாமலேகார்க்க (வரு)

1. தாமதஞ்செய்யாமலே மன்னவன்
சாற்றியதுபோலே
நாமின்றுபோய்பெரும் நதியைக்கார்த்திடவே
நடந்திடுவீரிதே நல்லசமயஙகாண்பீர் (வரு)

2. கத்தியைக்கைக்கொள்ளுங்கள் வெடி-குழா
கருவிகள்தனையெடுங்கள்
மெததவீரமாய்கப்பல் விடுவாராகுலாற்றில்
வேணமட்டுஞ்சொல்வோம் மேலிட்டால்நாம்கொல்வோம் ( )

3. கப்பலதோவொன்று வருகிறதை
காணுங்கள்நீஙகளின்று
எப்படியுமாற்றில் இவர்கப்பல்விடுவார்கள்
இதமாய்ச்சொல்வோமில்லை யென்றுல்வதைத்திடுவோம் (வரு)



ஆங்கிலேய கப்பல்வர்த்தகர்கள் மாண்டலிக்கு வருகிற
ஏலப்பாட்டு.

ஏலேலோ - ஏலயேலோ - தத்தெய, ஏல்லோ - ஏலயேலோ.

தாலம்புகழ் அப்பர்பர்மா—தன்னை
சந்திக்கவே வர்த்தகராம்
சீலமுள்ள இஙகிலாண்டர்—நல்ல
தினுசுகளாஞ் சரக்கெடுத்து,

முடுக்கு.

நீலயங்கியுருமாலை விதவிதமாய்ச்சிட்டி
நேத்தியுள்ளமக்மல் டோரியாதினுசு
சகலாத்துகம்பளி கின்காப்பூபட்டு
தாவணிகள்காஸ்மீரின் சாலுவைகளோடு
பிளாங்கிட்டுகமிசுடன் வெலிங்டன்பூட்சும்
பேரானஜாக்கிநெட் லாஙகிலாத்பீஸ்கள்

வளமானகேமிரிக்கு மசிலின்புடவை
வகைவகையாக்கப்பலி லேத்திஞரங்கே (ஏலேலோ)

மாண்டலிமா நகர்தனிலே—வுள்ள
மனிதருக்காஞ் சரக்கெடுத்து
தாண்டவமாய் வர்த்தகர்கள்—ஆவா
தனைநாடி சமுத்திரத்தில்

முடுக்கு.

கப்பல்களிலென்னென்ன வத்திஞறொன்னில்
கல்லிழைத்தமோதிரங் கைவளைகள்தோடா
முத்துகளிரத்தினம் வைரவைடூரியம்
மோகனமாலையுடன் புட்பராகங்கள்
பச்சைமரகதம்நல்ல பாஜிபந்துடனே
பவளமணிமாலையும் மாணிக்கம்நீலம்
ஆபரணவகையெலாங் கப்பல்களிலேத்தி
அணியணியாய்நிருத்திஞ ரங்கங்குதானே (ஏலேலோ

இந்தவிதம் வர்த்தகர்கள்—திசை
எடுத்துரொப்பிக் கடல்தனிலே
தந்திரமாய்க் கப்பல்களை—நங்கூர்
தனையெடுத்து நடத்திஞர்கள்

முடுக்கு

வருகுதுவருகுது இரங்கோனைநாடி
வந்தவுடனங்குசில, வர்த்தகஞ்செய்து
மோர்மேன்பிக்குபுடும் டயிட்மோவைச்சேர்ந்து
முதலுக்குக்குறையாம லாபங்கள்பெற்று
மேலாவெனும்பதியில் வெகுலாபங்கொண்டு
வெற்றியுடன்மீஞ்சா மெனும்பதியைநாடி
ஐராவதியெனு மாற்றினில்கப்பல்
அதிவேகமாயோட்டி வருகிருளையா. (ஏலேலோ)

போது - விருத்தம்.

இறைவனுருறைப்படித்கி யிருக்கின்றவேவுக்காரர்
முறையிடாகளிப்புமீறி முன்னவனெதிரோகாவல்
குறைவராதிருக்கவேண்டி குதித்துகொக்கரித்துக்கொண்டு
நிறையுரும்படியேவந்த நிலமையையறிகுவீரோ.

பர்மா போர்ச்சேவுகர்கள் தடுக்கும்
விருத்தம்.

ஆரடாகப்பல்மீது அரசுமேபுரிந்துயிந்த
நீரடாஐராவதியாம் நீண்டதோராருதன்னில்

கூறடாபயமில்லாமற் கொற்றவனுறையைமீர்ந்தாய்
பாரடாநாங்களிப்போ படுகப்பலுடைப்போந்தானே

கப்பல் கெப்டன்சொல்

விருத்தம்.

பாரடாயுடைப்போமென்ற பலத்தசேவுகரோகேளீர்
நேருடன்கப்பலோட்டும் நிலமையெங்களுக்குமுண்டு
கூறடாவென்றுரைத்து கோபமுங்கொள்ளொணாது
சீருடனுங்கள்போக சிலவதுயீந்திடீரோ.

பர்மா பாரா - காவல்கார்த்த - போர்ச்சேவுகனுக்கும்,
கப்பல் கெப்டனுக்கும் — தர்க்கம் - தரு.

சேவகன்

வாதுயென்றல்லவோ பேசுறாய் - வெகு
வலுமையேயிங்குவந்து வீசுறாய்
வாதுக்கோதென்று வல்லாண்மைபேசாதே
தீதுக்குளாளாக சிக்குப்படடுப்போவாய். (வாது)

கப்பல்காரன்

ஐயாநானென்னசெய்த துரோகஞ் - சொல்வீர்
ஆருக்குநிலைத்ததிப்போகம்
பையவேநான்வங்கம் பரிவாய்நடத்திவந்தேன்
செய்ததொன்றுமில்லை சினந்துப்பேசுவதேது, (ஐயா)

சேவுகன்

செய்ததொன்றுமில்லை யென்றுமே - சொல்ல
சிறுபிள்ளைகளுன்புத்தி யொன்றுமே
உய்துவூரரசாளும் உத்தன்தீபோநகரில்
வெய்ததுமல்லாமல் வீண்பேச்சுனக்கேது. (வாது)

வியாபாரி

வெய்ததும்வெறுமையு மல்லவே - சரக்கு
விற்கவந்ததல்ல சொல்லவே
பெய்தொளிர்வீசும் பிரபுடீகரிங்கிலேயர்
செய்துறும்வியாபாரம் நிலக்குதிந்தியாயெங்கும். (ஐயா)

சேவகன்

நிலைத்ததுஅன்னாளப் போதே - இப்போ
நீயிருக்கவுந் தகாதே
வலத்தவரசன்தீர்வை வாரியடிக்கசொல்லி
பிலத்ததாயிருக்கப் பின்னிட்டோடிப்பிழைப்பாய். (வாது)

வியாபாரி

பின்னிட்டோடுவதென்ன பேரு - வீண்
பேச்சாகப்பேசுருய்ப் பாரு
மன்னனிங்கிலீசு மகிமையறியாயோ
மாண்டலீதேசத்தை வறுமையாய்செய்வாரோ. (ஐயா)

சேவகர்

செய்கிரேும்பாரிது வங்கம் - எல்லாம்
சிதரிடவேமான பங்கம்
நையும்படிக்குந்தன்நாட்டா ரிங்கிலேயரிடம்
ஐயையோகோவென யலரிட்டோடிடநீங்கள். (வாது)

வியாபாரி

இப்படியுஞ்செய்ய லாச்சா - நாங்கள்
எளிமையானதுவீண் போச்சா
எப்படியுநாமு மினிதிரும்புவோம்நாடு
செப்பிநம்மாளுகையில் சிதறடிக்கச்செய்வோம். (ஐயா)

---

கப்பல் கெப்டன் ஊழியர்களுக்குச்சொல்
வசனம்

அகோகேளுங்களப்பா மாலிம் கெலாசி சுக்கான்காரர்களே! சொல்லுமையா கப்பற்தலைவரோ, நாமனேகநாளாய் இந்த அப்பர்பர்மா இராஜ்ஜியத்தில் வியாபாரஞ்செய்துவந்தோ மதுபோலவே, இப்பொழுதும் வநதிருக்க நாம்தகாதபடி ஐராவதிநதியில் கப்பலோட்டிணேமென்று, நம்மையுமடித்து நம்முடைய சரக்குகளையுங் கொள்ளையடித்துங் கப்பல்களையு முடைத்தபடியால், நாமிந்தியாச்சென்று நம்முடைய இராஜாங்கத்தில் மனுவுசெய்து முறைபிடுவோம் வாருங்கள் வாருங்கள் ஓடிப்போவோம் கப்பல் ஊழியர்களே.

பொது — விருத்தம்

இவையவன்சொன்னவாரோ யேகியைராவதத்தை
சரியதாய்க்காவற்காத்து சமயம்பார்த்திருக்கும்போது
திரைகடல்கடந்துகப்பல் சிறந்தயிராவதத்தில்
வருகவேகாவர்க்காரர் வந்தெதிர்த்தடித்திட்டாரோ.

வசனம்.

இந்தப்பிரகாரமாக இராஜனிடத்தில் உத்தரவுபெற்று திரும்பின பர்மா காவற் போர்ச்சேவுகர்கள் ஐராவதி நதிக்கரையில்வந்து மிகுந்த ஜாக்கிறதை யாகக் காவற்காத்து வருங்காலத்தில் ஆங்கிலேயர்களின் கப்பல்கள் சமுத்திரத்தைக்கடந்து ஐராவதிநதியின் மத்தியில் வருகிறதை காவற் போர்ச்சேவுகர்கள்கண்டு அதிககோபங்கொண்டு கப்ப

ற்காரர்களையும் அடித்து வந்தவழியே திறம்பியோடும்படிச் செய்து விட்டார்களென்ற விதங்காண்க.

பொது - விருத்தம்

கப்பல்கள்தனையுடைத்துக் சறுதொணச்சரக்கையெல்லாம்
அப்பர்பர்மாதேசத்தா ரடித்தார்கள்கொள்ளைநாங்கள்
எப்படிபிழைப்போமென்று எழில்பார்லிமெண்டாரோடு
செப்பிவர்த்தகர்கள்தங்கள் சிந்தையுங்கலங்குவாரே.

வசனம்.

இவ்விதமாக தீபோவரச னுத்தரவின்படி ஐராவதியாற்றைக் காத்திருந்த பர்மாபோர்ச்சேவுகர்கள் ஆங்கிலேய வர்த்தகர்களின் கப்பல்களை கொள்ளையடித்தோட்டவே கொள்ளைகொடுத்த கப்பற்காரர்களெல்லோரு மேகோபித்து பார்லிமெண்டாருடன் தங்களுக்கு நேரிட்ட துன்பத்தைச்சொல்லி புலம்புகிற விதங்காண்க.

கொள்ளைக்கொடுத்த கப்பல் வர்த்தகர்கள் பார்லிமெண்டாரோடு சொல்லி புலம்பும்தரு—(இம்) காம்போதி அடதாளம்.

---

ஐயையோயிந்த வனியாயங்கேட்டீரோ பார்லிமெண்டே - அந்த
அப்பர்பர்மாவாளு மரசன்செய்தக்கொடுமை பார்லிமெண்டே,
வர்த்தகஞ்செய்துநாங்கள் வாழலாமென்றுமே பார்லிமெணடே - வெகு
மகிட்சியாய்சரக்குகள் வாங்கிநிறைத்தோமையா பார்லிமெணடே,
கப்பலேறிநாங்கள் கடலில்நடத்தியே பார்லிமெண்டே — நல்ல
காற்றினல்ரங்கூனைக் கலகமின்றியேசேர்ந்தோம் பார்லிமெண்டே,
அவ்விடந்தனைவிட் டாவாவுக்குப்போக பார்லிமெண்டே — நாங்கள்
ஐராவதியெனு மாற்றில்நடத்தினேம் பார்லிமெண்டே,
காவற்போற்சேவுகர்கடுங்கோபமாய்வந்துபார்லிமெண்டே - ஆற்றைக்
கடக்கவொண்ணதென்று கலகஞ்செய்தார்களே பார்லிமெண்டே,
கொள்ளையிட்டார்நாங்கள் கொண்டுபோனதெல்லாம் பார்லிமெண்டே-
மனங், கூசாமலெங்களைக் கூடவடித்தாரோ பார்லிமெண்டே,
ஏனையாவடிக்கிறீ ரென்றுநாங்கள்கேட்டோம் பார்லிமெண்டே —
எங்க, ளிறையவனுந்தீபோ யியம்பியப்படியென்றார் பார்லிமெண்டே,
ஆதாயம்பெறயேகி யவமானம்பட்டோமே பார்லிமெண்டே - அந்த
அதர்மானுந்தீபோவை யடக்கயெத்தனஞ்செய்வீர் பார்லிமெண்டே,
அதற்காகுஞ்சிலவுக ளனத்தையுந்தவராமல் பார்லிமெண்டே - நாங்கள்
ஆளுக்குககொஞ்சமா யளித்திடுவோமெங்கள் பார்லிமெண்டே,

பொது–விருத்தம்.

வர்த்தகர்வந்துசொன்ன வார்த்தையைக்கேட்டுக்கோபம்
மெத்தவுங்கொண்டுபார்லி மெண்டாருமன்னன்தீபோ
சற்றுமெண்ணுதுகொள்ளைத் தானடித்தானேயென்று
சித்தமாய்க்கடிதந்தன்னைத் தெறிந்திடயெழுதுவாரே.

வசனம்.

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரமாக வர்த்தகர்கள் வந்து முறையிட் டழுதசதைக்கேட்ட பார்லிமெண்டாரதிககோபங் கொண்டவர்களாய்க் கொஞ்சமும் அஞ்சிக்கையில்லாமல் இராஜன் நமது வர்த்தகர்கள் கப்பலைக் கொள்ளையடித் தானேயென்று கடுஞ்சின முடையோராய் தீபோ இராசனுக்கு நிருபமெழுதுகிற விதங்காண்க.

கடிதம் ஆசிரிய விருத்தம்.

மன்னன்தீபோவுக்காங்கிலெயர்களும்
வரவிட்டகடிதமேதென்னில்
இன்னகரிருந்துகப்பல்வர்த்தகர்கள்
எழிலைராவதிதனைத்தாண்ட
நன்னயமாகவந்தவர்சரக்கை
நாசஞ்செய்தவனையுமடித்தாய்
அன்னியாயமினிமேல்நடத்துவாயானால்
அழியுமுன்னரசெனவறியாய்.

பொது வசனம்.

இந்தவிதமாக பார்லிமெண்டார் கடிதமெழுதி தபால் மூலமாய் மண்டலியரசனை தீபோவுக்கு அனுப்ப அதைவாசித்த தீபோ அரசனே கோபங்கொள்ளுகிற விதங்காண்க.

தீபோ விருத்தம்.

அறிவினில்மிகுத்தமந்திரி ஆங்கிலேயர்களுமின்று
பெருங்கோபமாகநம்மேற் பிழைசொல்லிநிருபம்விட்டார்
திரைகடற்சூழுமிந்த தேசத்தைக்கொள்வார்போலும்
இருக்குதுயென்னசெய்வோ மிதற்கோர்யோசனைசொல்வீரே.

வசனம்.

ஆ! ஆ! புத்தியிற்சிறந்த மந்திரிமார்களே கேளுங்கள் ஆங்கிலேயவர்த்தகாள் கப்பலை ஐராவதி நதியில் நடத்த லாகாதென்று தடுத்ததற்காக இங்கிலாண்டார் நம்மிடபேரில் குற்றஞ்சாட்டி பெருங்கோபங் கொண்டு யெழுதியிருக்கின்ற நிருபத்தைபார்த்தால் இந்தக்கடல் சூழ்ந்த நமது தேசத்தை எழிதில் பரித்துக்கொள்வார்கள்போல் தோற்றுகின்றது இதற்கென்ன செய்யலாம் நன்றாய் ஆலோசனை செய்து சொல்லுங்களப்பா மந்திரிகளே.

முதல்மந்திரி விருத்தம்.

பார்த்திபாபர்மாநாட்டிற் பாதியுங்கிடைத்ததாலே
சீர்த்தியுஞ்செல்வந்தன்னிற் சிறந்தின்றுபோரைச்செய்து
பேர்த்தெமையிந்தநாட்டைப் பிடித்தாங்கிலேயர்பக்கஞ்
சேர்த்துக்கொள்வார்கள்போலுந் தெரியுதென்செய்குவோமே.

வசனம்.

ஆம் ஆம் இந்தபர்மா இராஜ்ஜியத்தில் சரிபாதி ஆங்கிலேயர்பக்கமாய் லோவர் பர்மாவரையிலும் யிருக்கின்றதாலும் செல்வமிகுந் திருப்பதாலும் நம்மையெதிர்த்து சண்டைசெய்து நமது நாட்டையும் ஆங்கிலேயர் பக்கஞ்சேர்த்துக் கொள்ளுவார்கள் போலேதோன்றுகின்றது யிதற்கென்புத்தியில் வொன்றுந்தோணவில்லை தங்களுடைய கருத்தெப்படியோ தெரியச்சொல்லும் அரசரே.

இராஜன் விருத்தம்.

திடமிகுமந்திரிநீதான் செப்பியசொல்லுமெய்யே
அடங்கினுமிருந்தோமானால் ஆங்கிலேயர்களுமிஞ்சி
தடமிகுநமதுநாட்டை தடையன்றிபிடித்துக்கொள்வார்
படைகளைசித்தஞ்செய்து பகைசெலுத்திடுதல்நன்றே.

வசனம்.

ஆ ஆ மந்திரி நீயிப்போது சொன்னவார்த்தை மெய்தான் மெய்தான் நாம்சும்மாயடங்கி யிருப்போமானால் ஆங்கிலேயர்கள் மிதமிஞ்சி நமதுநாட்டை அபகரித்துக் கொள்வார்களென்பது நிட்சயந்தான் அதற்குமுன்னமே நாம் நமது சேனைகளைத் தயார்செய்து நமதுபகையை தீர்த்துக் கொள்வது நன்றாயிருக்கின்றது மந்திரியே.

இரண்டாம் மந்திரி விருத்தம்

நதிதனில்வந்தாரானால் நஞ்சினையூட்டிக்கொல்வோம்
மிதமிஞ்சிநாட்டில்வந்தால் வீரர்களனேகமுண்டு
சதிசெய்துக்கொல்லநம்பாற் றக்கபீரங்கியுண்டு
எதிரிட்டுஆங்கிலேயர் எப்படிஜெயிப்பார்சொல்வீர்.

வசனம்.

ஆம் ஆம் என் ஆண்டவனுகிய அரசனே ஆங்கிலேயர்கள் ஆற்றின் வழியே வருவார்களானால் தண்ணீரில் நஞ்சைக்கலந்து சேனைகளைமடியச்செய்யலாம் அல்லது மிஞ்சிக்கரையேறி நாட்டையணுகி வருவாரானல் அவர்களை வெல்வதற்கு நம்மிடத்தில் அநேக தீரவீர சூரர்களிருக்கின்றார்கள் தூரத்திலிருக்கின்றவர்களை வெல்வதற்கு நம்மிடத்தில் தகுந்தபீரங்கிக ளிருக்கின்றது நம்மையெதிர்த்துச் சண்டைசெய்து ஆங்கிலேயர்கள் எப்படிஜெயங்கொள்ளுவார்கள் அரசரே.

இரண்டாம்பத்தினி சூப்பிலா

விருத்தம்.

புலியதுபூனைபோல பொறுமையோடிருந்துதானால்
வலியநாய்களுமெதிர்த்து வருந்தவேகடித்துக்கொல்லும்
பலமதுயொடுங்கிச்சிங்கம் பதுங்கினால்யானைவீரஞ்
செலுத்தியேயடித்திடாதோ தெரிந்திடாய்மன்னாநீயே.

வசனம்.

ஆ-ஆ! எனது பிராணபதமாகிய கணவனே கேளும் புலியானது பூனைபோல பொறுமையா யிருக்குமானால் நாய்கள் மேலேவிழுந்து கடித்துக்கொல்லும் சிங்கமானது வொடுங்கி பயந்து பதுங்கியிருந்தால் யானை தன் வீராவேசத்தைகாட்டி சிங்கத்தை யெதிர்த்து அடிக்கமாட்டாதா அதுபோல் நீரடங்கியிருந்தால் எதிரிகள் மிஞ்சிப்போகார்களா இதை நன்று யோசித்துப் பாரும் என் பிராணநாயகரே.

இராஜன் விருத்தம்.

நல்லதப்படியாகட்டும் நாம்சூப்பியாஜியிடத்தில்
சொல்லுவோமிந்தசேதி தோகையோசனைசெய்தெம்மை
செல்லும்போர்க்கென்கிறாளோ சென்றதினாலேயேதும்
அல்லல்கள்வருமென்பாளோ அறிகுவோம்வருகுவீரே.

வசனம்.

ஆ-ஆ நல்லது அப்படியே யாகட்டும் நாமெல்லோரும் சூப்பியாஜி பிடத்தில்போய் இச்சங்கதிசொல்வோம் அவள்யோசனைசெய்து நம்மை சண்டை செய்யுங்களென்று சொல்லுகிறாளா அல்லது அப்படிசண்டைசெய்தால் துன்பம் நேரிடுமென்று சொல்லுகிறாளா அவள்கருத்தை யறிந்து கொள்ளலாம் வாருங்கள் மந்திரிமார்களே. (மந்திரிகள்) அப்படியே தங்கள் பின்னாலே வருகிறோம் அரசரே.

இராஜன் விருத்தம்.

பதிவிரதமாதேகேளாய் பகறுவேனிங்கிலாண்டிற்
கதிபதியானபேர்கள் அமர்செய்யநினைத்தானொன்மேல்
சதுரங்கசேனையோடு சமரதுசெய்யப்போறேன்
இதற்குயோசனைநீசெய்து யியம்புவாயேகத்தானே.

வசனம்.

ஆ-ஆ எனது பட்டத்தரசியாகிய பதிவிரதா சிரோன்மணியே கேளும் ஆங்கிலேயர்களென்கிற ஒருநாட்டார் என்னைப்பகைத்து என்னோடு சண்டைசெய்ய வேண்டுமென்கிற எண்ணங்கொண் டிருக்கிறார்கள் நானும் எனது ரத-கஜ-துரக-பதாதிகளென்ற நால்வகைச் சேனைகளோடு அவாளை எதிர்த்துப் போர்ச்செய்ய வேண்டுமென்று நினைத்து உனக்கு தெரிவிக்கவந்தோம் இதற்கு நீ நன்றாய் ஆலோசனைசெய்து எனக்கு நல்லவாக்கு கொடுப்பாய் என்பிராண நாயகியே.

சூப்பியாஜி விருத்தம்.

ஆங்கிலேயர்களோடீங்க ளடுத்துப்போர்ச்செய்தீராஞல்
ஓங்கிடாதுங்கள்வீரம் உற்றதுசொல்வேன்கேளீர்
பாங்குடனவரைச்சிநேகம் பண்ணிகொள்வீரேயாஞல்
நீங்கிலாச்செல்வமோடு நீடூழிகாலம்வாழ்வீர்.

வசனம்.

அகோ மாண்டலி நகரத்துக் கதிபதியாகிய எனது பிராண நாயகரேகேளும் இங்கிலாண்டார்களோடு விரோதித்து சண்டைசெய்தால் உங்களுடையவீரியஞ் செல்லமாட்டாது நீங்கள் வெற்றியடையுமாட்டீர் அவ்வாளோ மிகுந்த தந்திரவாதிகள் ஆனபடியிஞலே அவர்களோடு சிநேகிதபாங்காகவே யிருந்தால் நீடூழிகாலம்வரையில் ஒருகுறைவுமில்லாமல் இன்ஞட்டை ஆண்டுவருவீர் என்பிராண நாயகரே.

இராஜன் சூப்பியாஜிராணிக்கு சொல்வசனம்.

கேளும்பெண்ணே சூப்பியாஜி இராணியே நீ என் முதற்விவாகமனைவியாதலால் யானும் என்னுடன் வந்திருக்கப் படானின்ற மந்திரிகளும் இரண்டாவது மனைவி சூப்பிலாவும் உன்யோசனையை கேட்கவந்தோம் நீ எங்களுக்கு நல்லவாக் களிக்காமல் பகையாளிக் கேற்றபடிக்கு பேசியப்படியால் நீ போய்வருகலாம் பெண்ணே சூப்பியாஜி இராணியே. (சூப்பியாஜி) இதோ அப்படியே போகிறேன் என்னையகரே.

பொது விருத்தம்.

பத்தினிசூப்பியாஜி பகர்ந்திட்டவார்த்தைதீபோ
சற்றுமேவுட்கொள்ளாமற் றள்ளியேவிட்டதாலே
மெத்தவும்விசனமாக மேவிஞள்தன்னறைக்குள்
வெற்றிகொள்தீபோராஜன் விளம்புவான்சபையுளோர்க்கே.

வசனம்.

இந்தப்பிரகாரம் பட்டத்தரசி சூப்பியாஜி வார்த்தையை கிஞ்சித்தேனும் அரசன் மனதில்கவனிக்காமல் அதிகோபங் கொண்டதை சூப்பியாஜிபார்த்து இனிநாம் இந்தசபையிலிருப்பது ஞாயமல்லவென்று மிகவும் விசனத்தோடு தன் னறைக்குள் போய்விட்டனள் அவள்போனவுடனே சபையார்களைப் பார்த்து இராஜன் சொல்லுகிற விதங்காண்க.

இராஜன் விருத்தம்.

இன்னமுந்தாமதித்தா லெதிரிகள்மிஞ்சிப்போவர்
நன்னிலைமிகுத்தமந்திரி நாம்சும்மாயிருக்கொணது
வுன்னதமாயாங்கிலேயற் கொருநிருபத்தைத்தீட்டி
என்னிடச்சேனையைப்போற் கினிதயார்செய்குவாயே.

வசனம்.

ஆ-ஆ எனது ஆபத்துக்குதவானின்ற மந்திரிமார்களே இனிதாமதஞ் செய்துக்கொண்டு சும்மாயிருப்போமானல் எதிரிகளாகிய இங்கிலேயர்கள் மிஞ்சிப்போவார்கள் ஆனபடியினலே அவர்களை உயித்தியஞ் செய்ய வரவேண்டுமென்று மூன்று மாதங்கெடுவு கொடுத்து ஒருகாகிதமெழுதி யனுப்பிவிட்டு என்னுடைய சேனைகளை சண்டைக்கி சித்தஞ்செய்விப்பீர் மந்திரிகளே. (மந்திரிகள்) அப்படியேசெய்கிறேமையா அரசரே.

மந்திரி கவி.

மன்னவாநீரும் சொன்னசொற்படியே

நன்னயகடிதம் வுன்னியேமுடித்தேன்.

வசனம்.

ஓகோ மாண்டலிக்கதிபதியாகிய அரசனே தங்களுத்திரவின்படி ஆங்கிலேயர்களுக்கு கடிதமெழுதி முடித்தேன் ஆண்டவனே.

வசனம்.

ஆ-ஆ அப்படியானல் அதைவாசித்துக் காண்பியும் மந்திரிமார்களே.

காயிதம் விருத்தம்.

மண்டலியாளுந்திபோ வழுத்துவேனென்றுகேளாய்

கண்டிதமானவுங்கள் கடிதத்தைக்கண்டேயானு

மண்டரைச்சேர்க்கமூன்று மாதமுங்கெடுவுதந்தேன்

சண்டைசெய்திடவேயேதுந் தடையில்லைவருகுவீரே.

இராஜன் வசனம்.

ஆ-ஆ வெகுநேர்த்தி வெகுநேர்த்தி நன்றுயெழுதினீர்கள் இந்தகாயிதத்தைக் ஆங்கிலேயர்களுக் கனுப்பிவிடுங்கள் மந்திரிகளே. (மந்திரி) அப்படியே மகாபாக்கிய மையா ஆண்டவனே.

மந்திரி கட்டியனுக்குசொல் வசனம்.

ஆரப்பா ஆசாரவாசல் கார்க்குங் கட்டியனே இதோ இந்த கடிதத்தை வேவுக்கார னிடத்தில்கொடுத்து தபாலில் செலுத்தி வரும்படி சொல்லும் பிள்ளாய் கட்டியனே. (கட்டியன்) அப்படியே செய்கிறேனையா மந்திரியே.

கட்டியன் வேவுக்காரனுக்கு சொல் வசனம்.

அகோகேளும் வேவுக்காரனே இந்தக்கடிதத்தை அதிசீக்கிறத்தில் தபாலில் செலுத்திவாரும் பிள்ளாய் வேவுக்காரனே. (வேவுக்காரன்) அப்படியே செலுத்திவருகிறேன் கட்டியக்காரரே,

### பொது விருத்தம்.

வழக்குளகாகிதத்தை மன்னன்தீபோவிடுக்க
பழுதறப்பார்லிமென்டார் பார்த்துமேகோபங்கொண்டு
வழுவாமலிவன்முன்செய்த வஞ்சகச்செய்கையெல்லாம்
எழுதுவார்விபரமாக எழில்விக்டோரியாதனக்கே,

### வசனம்.

இப்படியாக மாண்டலியரசன் சண்டைக்கு வரவேண்டுமென் றெழுதிய காகிதத்தைப் பார்த்த பார்லிமென்டார் அதிககோபங் கொண்டவர்களாய் இதற்குமுன் இவ்வரசன் செய்த கொடுமையெல்லாம் விபரமாகஇந்தியாசக்ரவர்த்தினி இராணியம்மாளுக்குயெழுதினவிதங்காண்க.

### அகவல்.

பார்புகழிண்டியா பார்லிமென்டாரும்
சீர்மிகுமாங்கிலேய தேசத்தில்வாழும்
பார்லிமென்டாரும் பாராளுமரசி
விக்டோரியாவும் விபரமாய்க்காண
எழுதுமோர்சேதி இதமுடன்கேளீர்
மாண்டலியாளும் மன்னனுந்தீபோ
ராச்சியந்தனக்கு நற்குணவர்த்தக
ஏற்றுக்காரன் யேகியேதேக்கு
மரங்களைவேண்டி மன்னனைக்கேட்க
பத்துமேலட்சம் பணமதைவாங்கி
காட்டினிலுள்ள களமரங்களையும்
வெட்டிடவுத்தரம் விளம்பினான்தீபோ
அதுபோலவர்த்தகன் அடவியிற்சென்று
மரங்களைவெட்டி வருங்காலங்களிலே
காட்டரசென்னுங் கலகப்பிரியன்
அதிகமாய்மரங்கள் அறுத்திட்டானென்று
சிறையினில்வைத்து தீபோவிடத்தில்
செய்தியைச்சொல்ல தெளிவிலாமன்னன்
வர்த்தகன்றன்னை வருத்தப்படுத்த
அதிகப்பணத்திற் காதாரமெழுதி
ஈய்ந்துவர்த்தகனும் இண்டியாவந்தான்
இதுவன்றிவேறு யியம்புவேன்கேளீர்
கப்பல்வர்த்தகர்கள் கனவிலைபெற்றனற்
சரக்குகள்கொண்டு சமுத்திரந்தாண்டி
ஐராவதத்தின் ஆற்றினில்செல்ல
அவர்களையடித்து அநியாயஞ்செய்தான்

வர்த்தகரெம்பால் வந்துமேபுலம்ப
இப்படிச்செய்தால் ஏற்காதுயென்றே
கடிதமூலியமாய் காவலர்க்குறைத்தோம்
அதைகண்டுநம்மை அமர்செய்யவரவே
எழுதினன்கடிதம் இதற்குஞ்சம்மதியை
எழுதுவீரென்று எதிர்ப்பார்க்கின்றோமம்மா

பொது வசனம்.

இவ்விதமாக இந்தியாபார்லிமெண்டார் பெழுதியகடிதமும் தீபோ வரசன் பார்லிமெண்டாருக்கு யெழுதியகடிதமும் வாசித்தறிந்தஇராணி விக்டோரியம்மன் சொன்னவிதங்காண்க.

பொது விருத்தம்.

இட்டமாய்கடிதந்தன்னை தெரிந்திடராணியம்மன்
மட்டிலாக்கோபங்கொண்டு மானமில்லாதஅந்த
துட்டனுந்தீபோமீது துரிதமாய்சண்டைக்கேக
அட்டிலையென்றுசொல்லி அடித்தனள்மின்தபாலே.

வசனம்.

இந்தியா பார்லிமென்டாரும் தீபோராஜனும் யெழுதிய நிருபங்களை படிக்கக் கேட்டிருந்த குயின்விக்டோரியாஅம்மனுக்கு கோபம்பிரந்து அந்ததுஷ்டனாகிய தீபோ இராஜன்பேரில் சண்டைசெய்ய யேதுந்தடையில்லை யென்று தந்திசமாச்சாரங் கொடுங்களென்று வுத்திரவுசெய்தவுடன் பக்கத்திலிருந்த காரியதரிசிகள் அப்படியே மதிராஸ் பார்லிமென்டாருக்குதெரிவிக்க அவர்கள் செய்தயோசனையின் விதங்காண்க.

பொது விருத்தம்.

வந்ததோர்மின்தபாலை மதிராசின்பார்லிமென்டார்
சிந்தையாய்படித்துப்பார்த்து செரஞ்செய்யவேண்டிதம்முள்
தந்திரந்தனில்மிகுந்த ஜனல்பிரண்டர்காஷ்டைகோரி
புந்தியில்நினைத்தவர்க்குப் போக்கினார்கடிதங்கேளீர்.

வசனம்.

இந்தவிதமாக குயின்விக்டோரியம்மா ளனுப்பிய டெலிகிராமை படித்துபார்த்து மதிராஸ் பார்லிமென்டார் தந்திரமாக சண்டைசெய்வதற்கு தகுந்த ஜனரல் பிரண்டர்காஷ்டை வேண்டி அவருக்கு நிருபம் யெழுதின விதங்காண்க.

கடிதம் விருத்தம்.

பெரியநைஜாமிருக்கும் பிரண்டர்காஷ்ட்ஜனலேகேளீர்
தெரியவேயெழுதினோம்நீ சீக்கிறம்பயணமாகி

வரவேண்டுமிங்குநீதான் வந்தபின்சொல்வோஞ்சேதி
நெறிவழுவாமல்நீயும் நிமிஷத்தில்வருகுவாயே.

பொது விருத்தம்.

கடிதத்தைக்கண்ட பிரண்டர்காஷ்டனுமனங்கலங்கி
மடிபடைசெய்யவேண்டி மட்ராசில்வந்துசேர்ந்து
கடியவேபார்லிமென்டார் கருதியசேதிசொல்வீர்
நொடியினில்முடிப்பேனென்று நுவலுவார்ஜெனரல்தானே.

வசனம்.

மதிராஸ் பார்லிமென்டா ரனுப்பிய நிருபத்தைக் கண்ட ஜனரல் பிரண்டர்காஷ்ட் வுடனே மதிராசிக்குவந்து பார்லிமென்டாரைப் பார்த்து என்னை வரவழைத்த சங்கதிசொல்லுவீர்களானால் ஒருநொடியில் முடிக்குறேன் யென்றுரைக்கும் விதங்காண்க.

பிரன்டர்காஸ்ட் ஜனரல் பார்லிமென்டாருக்கு சொல்

விருத்தம்.

என்னையுமாளுகின்ற எழில்பார்லிமென்டேபோற்றி
இன்னகற்சபையிலென்னை இயலுடனழைத்ததேதோ
அன்புடனடியேன்தன்னை அகத்தினில்நினைத்தவாரோ
இன்னதென்றெனக்குத்தானும் இயம்பிடவேணுந்தானே.

வசனம்.

மகாகனமும் மேன்மையும் பொருந்திய மட்ராஸ் பார்லிமென்டு சபையோரே உங்களுக்குவந்தனம் என்னைவரவழைந்தசேதியை தெரியச்சொல்வீர்களையா பார்லிமென்டு சபையோரே.

பார்லிமென்டார் விருத்தம்.

பிரண்டர்காஷ்ட்ஜெனலேவும்மை பிரியமாயழைத்தசேதி
மாண்டலியாளுந்தீபோ மனுநெறிதவர்ந்துவிட்டான்
சண்டைசெய்விக்டோரியா சாற்றினாராதலாலே
தண்டைசேகரித்துயேகி தந்திரமாய்ஜெயித்திடீரே.

வசனம்.

ஆ—ஆ பிரன்டர்காஷ்டு ஜனரலே உம்மைபிரியத்தோடு அழைத்த சங்கதி யென்னவென்றால் அப்பர் பர்மா மாண்டலிதேசத்தை யாளுந் தீபோ அரசன் நீதிதப்பி நடக்கின்றான் அந்தசங்கதிகளை நமது இராஜாத்திக்கி தெரிவித்ததில் அவ்வம்மன் யாதொரு தடையன்றி சண்டைசெய்து அவனையடக்குங்களென்று வுத்திரவளித் திருக்கின்றனள் ஆனபடியால் உனக்கு வேண்டிய பாளையங்களை சேகரித்தேகி தந்திரமாகவே ஜெயம்பெற்று வரக்கோருகின்றோம் ஜனரலே.

பிரன்டர்காஷ்ட் விருத்தம்.

இயம்பியசொல்லின்வண்ணம் யெழில்சபையோரேகேளீர்
பயமின்றியானுஞ்செல்வேன் பார்லிமென்டாரேநீங்கள்
தயவுடன்யானுங்கோருந் தக்கதோர்படைகளீய்ந்தால்
ஜயமதைப்பெற்றுவாரேன் சத்தியம்நம்புவீரே.

வசனம்.

அகோகேளுங்கள் பார்லிமென்டாரே நீங்கள் சொல்லியப் பிரகாரம் யான் பயமில்லாமல் நானேபோகச் சித்தமாயிருக்கிறேன் எனக்கு வேண்டிய ராணுவங்களைக் கொடுத்தால் ஜயம்பெற்று வருகிறேன் இதைசத்தியமாக நம்பவேண்டியது பார்லிமென்டாரே.

பார்லிமென்டார் கவி.

பிரன்டர்காஸ்ட்துரையே நீர்கொண்டயெண்ணம்போல்
சண்டைக்குகந்திடுந் தண்டதைக்கேட்பீர்

---

பிரன்டர்காஸ்ட் ஜனரல் தனக்கு வேண்டிய ராணுவங்களான
பஷ்டுபிரிகேடைகேட்குந் தரு-இம். செஞ்சுருட்டி.

இந்திந்தபட்டாளங் களுமெனக்குத்தர வேணுமே இந்தி
தந்திரமிகுந்தகுயின் சாப்பர்ஸ்பைநீர் வேணுமே (இந்தி)
பராக்கிரமந்தனில்மிகுந்த பஸ்டுபைநிர் வேணுமே
வாராதுன்பம்வந்தாலும்பின் வாங்காடுவல்த்வேணுமே.(இந்தி)
தோல்வியடையாடொன்டித்தரடும் டொன்டிபிப்த்தும்வேணுமே
பால்மிகுத்திலங்குங்டொன்டிபஸ்ட் பட்டாளம்வேணுமே (இந்
யூரோப்டொன்டிதரட்மெரிக்கன் சோஜர்படைகள்வேணுமே
ஏராளமாய்படைவந்தாலும் எதிர்க்கும் லெவந்துவேணுமே ()
மெச்சத்தக்கபாம்பே சாப்பர்ஸ்நேவல் கன்போட்தாணுமே
கச்சருடன் மௌண்ட்கன் காலால்படைகள்வேணுமே (இந்தி)
சப்போர்ட்டாகபட்டாளங்கள் தான்வரவும்வேணுமே
தப்பாதிதுகள்தந்தீரானல் ஜயம்பெற்றுயான்வருவேனே (இந்)

பொது-விருத்தம்.

பிரண்டிரிகாஸ்ட்ஜனலுங்கேட்ட பெலமுள்ளவீரர்தங்கும்
எண்டிசைதனக்குமன்றே எழில்டெலிகிராபடித்தார்
சண்டைக்கிப்போகுஞ்சேதி தளபதிகர்னல்கேட்டு
மண்டைபாலின்செய்து வழுத்தினராடர்தானே.

வசனம்.

இந்தவிதமாக பிரண்டர்காஸ்ட் ஜனரல் பார்லிமெண்டாரை தனக்குவேண்டிய தளங்களைகேட்க பார்லிமெண்டார் தூரதேசங்களிலிருக்

கும் பாளயங்களின் தலைவர்களுக்கு தந்திசமாசாரந் தெரிவித்தவுடன் அது தெரிந்த கர்னல்கள் தங்கள்தங்கள் வகுப்புகளை பாலின்செய்து நாம் அவர்தேசத்தின்பேரில் சண்டைக்குப் போகவேண்டும் என்ன சொல்லுகிறீர்களென்று கேட்க வீரர்கள் சொல்லுகிற விதங்காண்க.

போற்சேவுகர் – விருத்தம்.

சத்தசாகரங்கள்பொங்கி சலம்வரச்செய்திட்டாலும்
சுத்தவீரர்கள்வந்தெம்மை துடர்ந்துபோர்செய்திட்டாலும்
சத்துமேபின்வாங்காமல் சண்டைசெய்தேகெலிப்போம்
நத்தியேஆவாதன்னை நடந்திடுவோமிப்போதே.

வசனம்.

ஆ ஆ, எங்களை யாதரித்தாள்கின்ற கமாண்டிங் ஆபீசரோகேளும், சுத்தசாகரங்களை பொங்கவைத்து சலம்பெருகச்செய்தாலும் சுத்தவீரர்கள் எங்களைத்துடர்ந்து சண்டைசெய்ய யேற்பட்டாலும் கொஞ்சமேனும் பின்வாங்காமல் யெதிர்த்து கெலிப்போம் ஆனபடியால் ஆவாதேசத்தை நாடிநடப்போம் கர்னலே.

கர்னல்கள் சொல் - விருத்தம்.

போற்சேவுகர்களேநாமும் புறப்பட்டுவுபாயமாக
சீர்த்திசேர்மாண்லிதன்னை சீக்கிரம்பிடித்தோமானால்
கீர்த்தியுமுண்டாமேதுங் கெடுதலைவருவதில்லை
நேர்த்தியாய் கிராச்சுடிமிட்டில் நீங்களும்பெருகுவீரே.

வசனம்.

ஓ ஓ, போற்சேவுகர்களே நாம் மாண்டலீதேசத்தை உபாயமாக பிடித்துக்கொள்வோமானால் நமக்கெல்லா மிகுந்தகீர்த்தி யுண்டாகிறதல்லாமல் கிராச்சுடி மிட்டிலும் நீங்கள் பெருவீர்கள் ஜாக்கிறதைப்பங்கள் வீரர்களென்றுபாளையத்தை டிஸ்மிஸ் செய்துவிட்டவிதங்காண்க.

பொது வசனம்.

இந்த பிரகாரம் கர்னல்சொன்ன சங்கதிகளைக்கேட்ட படைவீரர்கள் சண்டைக்கி பிறப்படவேண்டி தங்கள்தங்கள் மனைவிமார்களுக்குச் சொல்லுகிற விந்தகாண்க.

போர்ச்சேவுகன் தன்மனைவிக்குச்சொல் விருத்தம்.

மனைவியேசொல்லக்கேளாய் மாண்டலிதனக்குநாளைத்
தினமதிற்பிரயாணஞ்செய்யச் செப்பினார்கர்னலின்று
கனதுயர்கொள்ளவேண்டாங் கர்த்தருமிருப்பார்நம்பால்
துணிவின்றிதிரும்பியானும் துரிதமாய்வருகுவேனே.

வசனம்.

ஆ, எனது கண்ணுக்கு கண்ணாகிய மனைவியே, மாண்டலியென்

னும் ஆவாதேசத்தின்பேரில் சண்டைசெய்யவேண்டி நாளையதினம் பிரயாணமாகும்படி கர்னல்துரை உத்தரவளித்திருக்கின்றார் ஆனபடியால் நான்போய்வருகிறேன் நீயொன்றுக்கும் அஞ்சாதே கடவுள் துணையிருப்பார் சீக்கிறத்தில் திரும்பி வருகிறேன் பெண்ணே.

போர்ச்சேவுகன் மனைவியார்சொல் விருத்தம்.

தலைவனேயெனைவிடுத்து சண்டைக்குப்போவேனென்ற
சொலையதுகேட்டுமெத்த துயரமுமீறுதிப்போ
கலையதுபிரிந்தபெண்மான் கலங்கியேதிரிந்தாற்போலும்
அலையுதேயெந்தனெஞ்சம் ஐயோநானென்செய்வேனே.

வசனம்.

ஆ ஆ, எனது பிராணநாயகரோ கேளும், என்னைப்பிரிந்து சண்டைக்குப்போவேனென்ற சொல்லைக்கேட்டவுடன் மிகுந்தவிசனத்தழுந்தி கலையைப்பிரிந்த பெண்மான் கானகத்தில் ஒண்டியாகத் திரிகிறது போல எனது மனம் அலைகிறதே நானென்னசெய்வேன் பிராணநாதா

போற்சேவுகனுக்கும தன்மனைவிக்கும் நடக்கும் தர்க்கம்

தரு–இராகம் – கமாஸ்.

சோற்றுக்கடன்தீர்க்கப்போறேன் சுந்தரமிகுத்தபெண்ணே
மாற்றலர்தமைசெயித்து வருவேன்விறைவாய்க்கண்ணே. (சோ)

மனைவி.

எப்படியுமைப்பிரிந்து இருப்பேனெந்தன்கணவா
செப்பியமொழியைக்கேட்டு சிந்தைமிகத்துணிவா. (எப்படி)

சேவுகன்.

போகாமல்நானிருந்தால் போடுவார்கியாட்டதனில்
சாகாவதுயார்க்குஞ் சமமாதலால்வீணில், (போகாமல்)

மனைவி.

தற்பரனிந்தவிதி தலையிலெழுதினானே
ஒப்பியானொருநாளு முமைபிரிந்திருந்தேனோ. (தற்ப)

சேவுகன்.

எந்திழையேபுலம்ப ஏற்காதுவுந்தன்மனம்
தேர்ந்துயான்போகவிடை செப்புவாயித்தினம். (எந்தி)

மனைவி.

என்னசெய்வேனெந்தன் இறைவாயுனைவிடுத்து
சின்னஞ்சிறுவியாள் சிந்தைநொந்துதவித்து. (என்ன)

சேவுகன்.

முன்னதாயெந்தனுக்கு மூன்றுமாதச்சம்பளம்
அன்னமேயிந்தாற்போக அட்டிசெய்வதோநலம். (முன்ன)

மனைவி.

வயத்திற்கொடுமைக்காக மனைவிமக்களையும்நீர்
தயிரியமாய்விடுத்து சண்டைக்குப்போவதோசீர். (வயத்தி)

போர்ச்சேவுகன் மனைவிக்குசொல்

விருத்தம்.

சுந்தரமாதேமெத்த துயரதுகொண்டுநீயும்
சிந்தையுங்கலங்கினால்நான் செய்வதுயேதுமில்லை
சந்ததங்கடவுள்தன்னைச் சார்ந்துபூசித்துக்கொண்டு
மைந்தரும்நீயும்பைரில் மகிழ்வுடனிருந்திடீரோ.

வசனம்.

ஓ ஓ, அதிக அழகினையடைந்த யென் நாயகியே, நீ இந்தவிதமாக் துயரப்படுவாயானால் என்னாலாகிறதொன்றுமில்லை நீ சதாகாலங் கடவுளை தியானித்துக்கொண்டு நீயுங்குழந்தைகளும் பயிரில் சந்தோஷமாயிருப்பாய் பெண்ணே. (அப்படியே செய்கிறேம் யென்பிராணநாதா)

வேறு போர்ச்சேவுகன் தன்மனைவியோடு சொல்

விருத்தம்.

புத்தியிலுயர்ந்தபெண்ணே புகலுவேனென்றுகேளாய்
சித்தமாய்சண்டைக்கேக செப்பினார்கர்னலின்று
மெத்தவுமனதுநொந்து மெலிந்திடவேண்டாமந்த
அத்தனார்செயலிதென்று அகமகிழ்ந்தனுப்புவாயே.

வசனம்.

அறிவிற்சிறந்த என் பிராண நாயகியே கேளாய் எமது பட்டாளத்து கர்னல் துரை சண்டைக்குப்போக வேண்டுமென்று முடிவுகட்டி யிருப்பதால் நீ விசனப்படவேண்டாம் ஐயன் சேயலிதுவென்று மனதில் நினைந்து என்னைச்சந்தோஷமாக அனுப்பிவைப்பாய் பெண்ணே.

மனைவி சொல் விருத்தம்.

படுகளஞ்சென்றுநீரும் பாங்குடன்வருவீரொன்று
திடமுடன்சொல்லும்வார்த்தை செவிதனில்கேட்கும்போதே
துடிக்குதுமனதுமெத்த துயரமுமாகுதிந்தப்
படிதனிலென்னைப்போலப் பாவியுமுண்டோசொல்வீர்.

வசனம்.

ஆ-ஆ எனது பிராண நாயகரோ நீர் சண்டைக்கிப்போய் சுகமாய்

வந்து சேருகிறேனென்று சொல்லுகின்ற சப்தம் என் செவியில் விழுந் தவுடனே மனதுமிகவுந் துடிக்கின்றது ஆனல் யென்னைப்போலொத்த பெண்ணுய்பிரந்தபாவி பூலோகத்தில் நீர்கண்ணுல் கண்டதுண்டோ சொல்லும் என் பிராணநேசரே.

மனைவி புலம்பல் இ-ம். காம்போதி.

ஐயையோயென்மன்னன் அமர்க்கேகலாச்சுதே தெய்வமே ... இது
ஆரிட்டசாபமோ அரியோமேநாங்களுந் தெய்வமே.

ஏங்குதேயென்மனம் என்னனுன்செய்குவேன் தெய்வமே ... இனி
எப்பொழுதோயென்தன் இறைவனைக்காணுதல் தெய்வமே.

தற்பராவுந்தன் தப்புமிதுதானே தெய்வமே... ... நான்
தனியேயிருந்து தயங்கிடலாச்சுதே தெய்வமே.

மக்களையுமென மயங்கியலையவிட்டு தெய்வமே... ... அவர்
மாண்டலிக்குப்போக வந்துதேயார்டருந் தெய்வமே.

கன்னிவயதில் கலியாணஞ்செய்ததோர் தெய்வமே ... நல்ல
கணவனைப்பிரிந்திட காலமும்வந்துதே தெய்வமே.

வர்னக்கிளிபோல வைத்துவளர்த்தாரோ தெய்வமே... ... நான்
வருந்தியழுகமண வாளர்பிரிகிருரோ தெய்வமே.

நினைக்கநினைக்க நெருப்பிட்டமெழுகுபோல் தெய்வமே ... எந்தன்
நெஞ்சமுருகுதே நிமலனேயென்செய்வேன் தெய்வமே.

சேவுகன் விருத்தம்.

விதிதனைவெல்லப்போமோ மெல்லியேகடவுள்யார்க்கும்
அதிபதியாயிருந்து அனைத்தையுமாண்டுவாரார்
மதியிலார்போலநீயும் மயங்கிடவேண்டாம்யேக
ததியிதேசிலவுதாராய் தாமதஞ்செய்யொணுதே.

வசனம்.

கேளாய் யென்பிராணபதமாகிய பெண்ணே கடவுள் விதித்தவிதியை இந்தவுலகத்திலுள்ள இராஜ ராஜாக்களாலேயுந் தவிற்பது அறிதாகும் சகலத்திற்குங் கடவுளே அதிகாரியா யிருந்து ஆண்டு வருகிறவர் ஆனதால் நீபுத்தியீனர்களைப்போல துக்கித்து அழுகவேண்டாம் நான் போக நேரமாயிற்று நீதாமதஞ்செய்யாமல் சீக்கிரமாகசிலவுதந்தனுப்புவாய் பெண்ணே.

மனைவி விருத்தம்.

என்னிடபிராணநாதா ஏங்கியேமக்கள்யானும்
இன்னகர்தனிலிருக்க எப்படியாகுஞ்சொல்வீர்
சின்னப்பிராயத்தையுற்ற சிறுவர்களேங்கிடாரோ
நன்னயமிகுத்தசொந்த நாட்டினுக்கேகுவோமே.

வசனம்.

கேளும் என்பிராணநாதா நமது பிள்ளைகளும் நானும் இவ்வூரில் ஒருவர் வுதவியுமில்லாமல் எப்படி தனியே இருக்கக்கூடும் அப்படியிருந்தபோதிலும் சிறுபிராயத்தையுடைய யிப்பிள்ளைகள் உம்மிடபேரிலே யேக்கங்கொண்டு நாளுக்குநாள் இளைத்துப் போவார்கள் ஆதலால் நமது பந்து சனங்க ளிருக்கும்படியாகிய சொந்த தேசத்திற்கு போகிறோம் நாதா.

சேவுகன் வசனம்.

அப்படியே நமது ஊருக்குப்போய் நீயும் நமது சிறுவர்களும் வெகு புத்தியோடு சுகமேயிருப்பீர்கள் பெண்ணே.(அப்படியே போகிறோம் என் பிராண நேசரே.)

வேறு போர்ச்சேவுகன்தன் மனைவிக்கு சொல்

விருத்தம்.

மக்களேமனைவிகேளாய் மாண்டலிதேசத்தின்மேல்
தக்கதோர்சண்டைக்கேக சாற்றினுராகையாலே
துக்கமென்பதைதவிர்த்து சுகமுடன்போய்வாவென்று
நக்கலின்முகத்திேனாடு நான்போகவிடையீவீரோ.

வசனம்.

என்னருமையாகிய பிள்ளைகளே என்மனதிற் கிசைந்த பெண்ணே நான் சொல்வதை கவனமாய்க் கேளுங்கள் மாண்டலி தேசத்தின்மீது சண்டைக்குப்போகும் படியாக ஆடரர்ய்விட்டதாலே நீங்கள்கொஞ்சமாகிலும் சஞ்சலப்படாமல் சுகமாகப்போய் வாருமென்று சந்தோஷமாய் சிலவுகொடுத்தனுப்புவீர் மனைவி மக்களே.

மனைவி கொச்சகம்.

கருத்திற்கிசைந்திட்ட கட்டழகாநீயின்று
செருச்செய்யப்போரோனென்ற சேதியைநான்கேட்டிடவே
நெருப்பிட்டமெழுகதுபோல் நெஞ்சமுமுருகுதையோ
பரமனூர்செயலிதுவோ பத்தாவேயென்னசெய்வேன்.

வசனம்.

வடிவில் மிகுத்த மன்மதனுக்கொப்பாகிய நாயகரே நீயின்று சண்டைக்குப் போகவேண்டுமென்று சொன்னசொல்லை நான்கேட்டவுடனே அக்கினியில்வைத்த மெழுகைப்போல என்மனம் உருகிப்போகிறதே இதுவுமந்த ஈசன் செயலோ யான்யென்ன செய்வேன் என்பிராண நாயகா.

தன் தந்தைக்கு பிள்ளைகள் சொல் விருத்தம்.

ஐயாவேநீருமின்று அமர்செய்ப்பபோரோனென்றால்
ஐயாவேயுமைப்பிரிந்து அரைக்கணமிருப்போமோதான்
ஐயாவேயெங்களுக்கு ஆதரவினியார்சொல்லும்
ஐயாவேநீரும்போக ஆகுமோசெப்பிடீரோ.

வசனம்.

கேளுமெங்களை அருமையாகப் பெற்றுவளர்த்த எமது தந்தையே நீரின்று யெங்களைவிட்டு சண்டைக்குப் போகிறேனென்றீர் நாங்களும் மை யிதுவரையிலும் பிரிந்திருந்ததில்லையே இப்பொழுதுவும்மையெப்படி பிரிந்திருப்போம் நீர் யெங்களை தனியே விட்டுப்போவது சரியோ சொல்லும் யெமது தந்தையே.

சேவுகன் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் புத்திசொல்லும்

தரு இ-ம். ஆனந்தபைரவி.

---

போய்நான்வாரேன் போய்நான்வாரேன் புத்தியுள்ளபிள்ளைகளா
தாய்சொற்றவராமல்நீங்கள் சரியாய்நடந்துகொள்வீர்

தினமும்பாடசாலைக்கு சென்றுவுங்கள்பாடமதில்
மனம்வைத்துநன்றாய்நீங்கள் வாசித்துக்கொண்டேவருவீர்

நான்திரும்பிவரும்போதுநல்லபட்டுத்துணிகளும்
மேன்மையாமுருமாலைகள் வேண்டியதைக்கொண்டுவாரேன்

புத்திரிக்கு புத்திசொல்லல்.

என்மகளே யென்கண்மணியே ஏனம்மாநீயழுவது
நின்மலன்தயவினாலே நிமிஷத்தில்திரும்பிடுவோம்

அன்னைசொன்னவார்த்தைதனக் கடங்கிநடந்திடுவாய்
பின்னமாகயெதிர்த்தொன்றும் பேசவேண்டாமென்மகளே

வீதியில்போய்நிற்கவேண்டாம் வீண்பழிசுமத்துவார்கள்
காதல்கொண்டபட்டுத்துயில் கவனமாய்கொண்டுவாரேன்

மனைவிக்குப் புத்திசொல்லல்.

மனையாளேசொல்லக்கேளு மக்கள்மனங்கலங்காமல்
தினமுந்தேருதல்சொல்லி செம்மையாய்நீபார்த்திடுவாய்

எந்தன்தாய்தந்தையர்சொல்லை எடுத்தெறிந்துபேசாதே
சந்ததமவருனக்கு சாற்றும்பணிவிடைசெய்வாய்

சென்னைநகர்தன்னில்நான்போய் சேர்ந்துகடிதம்போடுவேன்
வர்னக்கிளியேஆவாயோப் மருகடிதம்போடுவேனான்

---

சேவுகன் விருத்தம்.

அடிபெண்ணே கேளாயெந்தன் அன்னைதந்தையரிருக்கும்
இடத்தினிற்கேகிநீங்கள் ஏக்கங்கொள்ளாதேநல்ல
திடமனதுடனிருப்பீர் தெய்வத்தினுதவியால்போய்
நொடிதனில்வருவேன்சித்தம் நோகாமல்சிலவுதாராய்.

வசனம்.

கேளும்பெண்ணே என்னுடைய தாய் தந்தைகளிருக்கும் ஊருக்கு நீயும் பிள்ளைகளும்போய் மனதில் விசனம்வையாமல் பெரியோர்கள் சொல்லும் புத்தியைப்போல் நடந்து சுகமாயிருங்கள் இதோ நான்சண்டைக்குப் போய் ஒருநொடியில் திரும்பி உங்களிடம்வந்து சேருவேன்பெண்ணே.

சேவுகன் தாய்தந்தைகளுக்கு நிருபம் எழுதும்
விருத்தம்.

தந்தைதாய்மாரோகேளீர் சண்டைக்குப்போகவென்று
எந்தனுக்காடர்தன்னை யியம்பினார்கர்னல்தானும்
மந்தமாயிராமலெந்தன் மனைவிமைந்தர்களைநீங்கள்
வந்தழைத்தேகுமுங்கள் மலரடிபோற்றிபோற்றி.

பொது விருத்தம்.

இதமுடன்தங்கள்தங்கள் இஷ்டர்கள்முதலானோர்க்கும்
பதரியேயழுதுவாடும் பாலர்க்குமனைவியர்க்கும்
அதிகமாய்புத்திசொல்லி அவரிடஞ்சிலவுபெற்று
பதிதனைவிடுத்தேறெயிலின் பாதையாய்வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் போர்ச்சேவுகர்கள் தங்கள் இஷ்டர்களுக்கும் அழுதுவாடும் பாலர்களுக்கு தங்கள் தங்கள் மனைவிகளுக்கும் தகுந்த புத்திமதிகளைச் சொல்லிவிட்டு இருப்புப் பாதையாகிய றெயில்வண்டியேரி சென்னைக்கு வருகிற விதங்காண்க.

போர்ச்சேவுகர்கள் றெயிலேறி புரப்பட்டு வருகிற
தரு இ-ம். தன்னியாசி.

புரப்பட்டார்பாரீர் போர்ச்சேவுகர் (புரப்)

கரத்தில்துப்பாக்கி கத்தியுங்கொண்டுமே
கண்டவர்நடுங்க கர்னலாடர்படி (புரப்)

மனிதரனேகமாய் வந்தேறினாலும்பின்
வாங்கிடாறெயிலின் மார்க்கமதாகவே (புரப்)

பிகில்சத்தங்கேட்டு பெண்டுபிள்ளையுடன்
பேசவுங்கூடாமல் பெருங்கூட்டமாக (புரப்)

எண்டிசையிலுள்ள இராணுவங்களெல்லாம்
எழிலாஞ்சென்னைதனில் ஏகமாய்க்கூடவே (புரப்)

அன்னையுந்தந்தையு மையோபாலாவென
அவனைவிட்டுநீங்கி ஆத்திரத்துடனே (புரப்)

போய்வாருமென்போரும் புத்திரரைப்பார்த்து
பொங்கியழுவோரும் பொல்லாக்காலமென்றே (புரப்)


எப்படியும்காமேகி மாண்டலியின்
இறைவனைஜெயிப்போமென்று பேசுவோரும் (புரப்)

பிரண்டர்காஸ்ட்டரனும் பிரபுவுதவியால்
பிசகாமலேவெற்றி பெற்றிடுவோமென (புரப்)

---

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக அஷ்டதிக்கிலு மிருந்த பட்டாளங்கள் கன்துருப்பு முதலானதும் சென்னையில் வந்துசேர்ந்த வுடனே ஜனரல் பிரன்டர்காஸ்ட்டர் பார்த்து மிகவுஞ் சந்தோஷப்பட்டு இராணுவங்களுக்கு வேண்டிய திரஸ்முதலாகியமுஸ்தீபுசெய்துகப்பலேருகிறவிதங்காண்க.



கப்பல் ஏலப்பாட்டு.

ஏலயேலோ ஏலயேலோ - தத்தெய்யா ஏலயேலோ ஏலயேலோ

ஞாலம்புகழ் மாண்டலியாள் - தீபோ
மன்னவன்மேற் சண்டைசெய்ய
கோலகுயின் விக்டோரியா - சென்னை
கூடிக்கப்ப லேரவென்றே

முடுக்கு.

சீலமுள்ளபிரண்டர்காஸ்ட் ஜன்னலுங்கூட
தெளிவானகமான்டரன் சிப்புடன்காள்வாய்

வாலொளிசெய்கப்பல்களில் வந்துயிருபுரமும்
வளமாகபலசரக்கு வேண்டியவைசேர்த்து
வேலைதனிற்கொடுவந்து மிக்கமகிழ்வாக
விதவிதமாய்பீரங்கி வெகுவரிசையொடே
காலைமுதலந்திவரை கப்பல்களிலேத்தி
காதலுடன்பாளையங்கள் ஸ்டீமர்களிலேற (ஏலயே)

கப்பலெனுங் கப்பலையா - மூவா
காரணன்றன் கிருபையினல்
செப்புவேனுன் நடந்தவைகள் - இந்த
ஜெகதலத்தோர் கொண்டாட

முடுக்கு.

சீரோங்கிகப்பல்பலவாய் பெருகிநிற்க
செப்புகப்தான் கமாண்டிங்குகளும்பார்க்க
தாரோங்குமாலுமிக ளங்கங்குகார்க்க
தண்டல்கிலாசுமார் பத்தியொடுநோக்க
கூராளசுக்கானில் வல்லவர்கள்சேர்க்க
கொடிதானமூதண்ட காத்தடிகள்தாக்க
வார்பெருகுநங்கடவுள் மகிமையதினலே
வருகுதேதீக்கப்பல் மாண்டலியைநோக்கி (ஏலயே)

வடகிழக்குமுகமாக - ஸ்டீமர்
வருகுதையா ரங்கூனுந்
தடப்பதியை சேர்வதற்கு - கப்தான்
தானேட்டகப்பலெல்லாம்

முடுக்கு.

வருகுதுவருகுது சேனைகளைக்கொண்டு
மாண்டலியெனும்பதியை கொள்ளையிடவேண்டி
மதிராசுகல்கத்தா பம்பாய்ப்படைகள்
வளமானயிரோப்பியன் சோள்ஜர்ரிஜிமென்ட்கள்
பீரங்கிதுப்பாக்கி பிஸ்தோல்களுடனே
பெரியவுடைவாள்சனியன் குண்டுமருந்தும்
சீராககப்பலில் நிரப்பிவெகுநேராய்
தீரமுடன்வருகிறர் மாண்டலியைநோக்கி (ஏலயே)

கப்பல்வருந் தடந்தனிலே - ஐயா
களங்கானுள்ளான் சென்னகுன்னி
செப்பரிய கிளுவைமீன்கள் - வவ்வால்
சிருமத்தி வஞ்சினங்கள்

முடுக்கு.

கூட்டமாய்வந்தெதிர் நின்றேமரிக்க
குணமுள்ளமாலுமிகள் கண்டே-சினந்து
நாட்டமாயவையோட சுக்கான்திருப்பி
நலமுடனேபாய்மரங்க ளெல்லாமிருக்கி
வாட்டமுடன்மச்சங்க ளெல்லாம்பரக்க
மாலுமிகளங்கங்கு வழிகண்டுவோட்ட
தாட்டீகமாய்பர்மா தேசத்தைநாடி
சரியாகவருதே கப்பல்குழாங்கள் (ஏலயே)

இப்படியாய்வரும்போது - மேகம்
இருண்டுமிகத்தான்றிரண்டு
செப்பறியகாற்றோடு - நன்றாய்ச்
சேர்ந்துபிசலடித்திடவே

முடுக்கு.

அப்பப்பாயென்னசொல்வேன் கப்பல்களினோட்டம்
அதிலிருந்துமாலுமிக ளலைந்துநின்றவாட்டம்
செப்பவரிதாய்வந்த மழையுமொருபாட்டம்
சிணமதில்பேய்ந்தோடு மேல்வானகூட்டம்
தப்பிலாச்சேனை தண்ணீர் குடிக்கவெகுநாட
தயையுள்ளபிரன்டர்காஸ்ட் ஜனரலுங்கூட
இப்பெரியபாளையம் மாண்டலியைநாட
எதுசெய்வோமென்று ஏங்கினாயா (ஏலயே)

ஆண்டவன்றன்கிருபையினால் - காற்றும்
அடித்தமழையொதுங்கிடவே
தாண்டவமாய்க்கப்பலெல்லாம் - கடலைத்
தாண்டியயிராவதியில்

முடுக்கு.

வந்திரங்கியாற்றில் நங்கூரங்கள்போட்டு
வகையுடன்பாளைய மிக்கமகிழ்மீறி
சிந்தையாயெவர்களுஞ் சாப்பிட்டபின்பு
சீராகநங்கூர வாங்கியேபின்னும்
சுந்தரஞ்சேர்நதியி லோட்டியேநாளுந்
துரிதமாய்போர்க்கல மெல்லாந்திரண்டு
வந்துதேநேரான வழிகண்டுதேடி
வாய்வேகமாகஅயி ராவதியிலோடி (ஏலயே)

பொது விருத்தம்.

தருணமீதென்றேயெண்ணி ஜனல்பிரண்டர்காஸ்ட்ராற்றின்
இருபக்கக்கரைகள்தன்னி லிரக்கியேபடைகள்தன்னை
வரச்செய்தார்காட்டின்மார்க்கம் வண்மையாய்நதியில்தானும்
திரமுளபடைகளோடு சீக்கிரம்வருகின்றரோ.

வசனம்.

அகோதெப்படியென்றால் படைத்தலைவரான ஜனரல் பிரன்டர்காஸ்ட் இதுவே நல்லதருணமென்று தன்னுடைய படைகளில் சிலரை ஐராவதியின் றாற்றின்இருபக்கமுள்ள கரைகளிலுமிரக்கிஅவர்களை காட்டின் மார்க்கமாய் வரச்செய்து தானும் மற்றபடைகளும் மேலாகோட்டையை நோக்கி ஐராவதி ஆற்றில் வருகிற விதங்காண்க.

பொது ஆசிரிய விருத்தம்.

படைகளைராவதத்தாற்றினில்வருதல்பார்த்து மேலாவினிலுள்ளோர்
திடமனதுடனேபீரங்கிகுண்டைச் செலுத்தவேவாங்கிலேயர்களும்
அடித்தவர்தமையும்பீரங்கிகுண்டு மடங்கலும்பிடுங்கியேபின்னும
கொடியரைப்பிடித்துகொன்று மேலாவின்கோட்டையும்பிடிப்போமென்றனரோ.

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆங்கிலேயப்படைகள் ஐராவதி ஆற்றில்வருவதை மாண்டலி இராஜனைச்சார்ந்த மேலாகோட்டையிலுள்ள படைகள்கண்டு மிகவும் வீரபராக்ரமத்துடன் மாரிபோல் குண்டுகளை சொரியஅதைக்கண்ட ஆங்கிலேயப்படைகள்மேலுமேலும்குண்டுகளைவிட்டு அவர்களைமுரிய அடித்து ஆயுதமுதலானதையும் பறித்துக் கொண்டுமேலாவைப் பிடிப்போமென்றுவொருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிற விதங்காண்க.

போர்ச்சேவுகர் தரு இ-ம். அடாணு சாபுதாளம்.

---

பிடித்திடுவோம்வாரீர் மேலாகோட்டையை ... (பிடி)

பிடிப்போமேலாவிலுள்ள பிரஜைகளனைதையு
மடிப்போமவரது மனதுதுடித்திடவே ... (பிடி)

வேகமாய்வந்துநம் மேல்விழுந்தடிப்போரை
சாகும்படியாய்குண்டால் தாக்குவோம்நாமின்று ... (பிடி)

அட்டியுமொன்றுண்டோ அவர்களைவாளாலே
வெட்டிப்பலியிட்டு மேவுவோங்கோட்டைக்குள் ... (பிடி)

குண்டுமருந்தினை கொண்டுஅவர்களது
தண்டுகளனைத்தையுஞ் சங்காரம்பண்ணியே ... (பிடி)

சிங்கத்தினிடத்தில்வீரஞ் செலுத்திடும்யானைப்போல்
அங்கிலேயர்மேல்போ ராகுமோயிவருக்கு (பிடி)

அடங்கிநாமிருந்திடில் ஆகர்துதோழரோ
திடங்கொண்டிவர்கள்தன்னைச் சிதையச்செய்திடல்நன்றே (பிடி)

பொது விருத்தம்.

ஐராவதத்தினுற்றில் ஆங்கிலேயர்வருதல்கண்டு
தயிரியங்கொண்டுமேலா தனிலுள்ளபர்மாசேனை
வியனுருகுண்டுதன்னை விட்டிடமாரிபோலே
சயங்கொள்வோமென்றுங்கிலேயர் சண்டைக்காரம்பித்தாரோ

வசனம்.

இப்படியாக ஐராவதி ஆற்றில் ஆங்கிலேய படைகள்வருவதை மேலாவிலுள்ள படைகள் கண்டு மெத்த வீராவேஷங்கொண்டு குண்டுகளை மாரிபோல் விட்டார்கள் அதைக்கண்ட ஆங்கிலேய போர்ச்சேவுகர்கள் மேலாமீது சண்டைசெய்கிற விதங்காண்க.

சண்டை தரு இம். நாதநாமக்கிரிகை அடதாளம்.

பல்லவி.

சண்டைசெய்தனரோ மேலாமீது சண்டைசெய்தனரோ

அநுபல்லவி.

சண்டைசெய்தனர்கள் சமர்த்தாயெதிர்த்தமேலா
தண்டுடனுங்கிலேய தளங்கள்வீரங்கொண்டு (ச)

சரணங்கள்,

1 நேரில்வந்தெதிர்த்தோரை நிமிஷந்தனிலேயுயிர்
நீக்கிடுங்கன்னிலுள்ள நிபுணவீரர்களுந்
தீரமிகுத்தநல்ல சிப்பாயிமார்களுஞ்
சிறப்புள்ளரிஜிமென்டைச் சேர்ந்தசோள்ஜர்களுந்
திரளாகக்கூடி மேலாவிலுள்ள
அரண்தனை நாடி
அடித்தனர்குண்டுகளை அநேகநூறாயிரம்
அசுரரானவர்கள் ஐயோவென்றலரவே
மடித்தனர்கள்பிண மலைகளாய்க்குவிய
மனத்திடமாககுண்டை மாரிபோலேபொழிந்து (ச)

2 வந்துநெருங்கினோரை வாள்கொண்டுவீசுவோரும்
வருந்திகெஞ்சிடவே வதைசெய்துகொல்லுவோருங்
கந்துகமேறுவோருங் கால்நடைசிப்பாய்களுங்
கானகவழிவந்து கதரிடகுண்டைவிட்டு

கலங்கச்செய்தனரோ பெதிரிகளின்
பலங்குறைத்தனரோ
பலவாராகவேயெங்கும் பறவியபடைகளை
பற்றிவெட்டிகளத்தை பார்த்துமகிழ்வோரும்
இலையினியெதிரிகள் என்றுசெப்புவோரும்
இடிப்போமேலாகோட்டையை யின்றேவாங்களெனவே (ச)

3 சிரங்களுடைந்தபேருந் தெய்வமேயென்போருஞ்
சிருவர்களைநினைத்து சித்தங்கலங்குவோருங்
கரமற்றுவீழ்வோருங் காலொடிந்தழுவோருங்
காலகதியோவென்றுகலங்கிமேலாவினோர்
களத்தினைவிடுத்து வோடுவோமென
உளத்தினில்நினைத்து
ஊருக்குவொருவராய் ஓடயேர்பட்டனர்
ஒடுங்கிசிலர்தீபோவுக் குறைத்திடசென்றனர்
சிருடனுங்கிலேயர் சென்றார்மேலாவூர்க்குள்
சிறப்புடன்கொடியினை செலுத்தினார்கோட்டைமேல் (ச)

பொது விருத்தம்.

பிடித்திட்டார்மேலாதன்னை பிரன்டர்காஸ்ட்ஜனலும்வெற்றி
கொடிதனைபோட்டார்மேலா கோட்டையின்மீதுபின்னும்
படையுடன்கப்பல்தன்னை பரிவாகமீஞ்சாம்நோக்கி
விடுத்திட்டார்களிப்பினோடு விரைவுடன்பிடிக்கத்தானே.

வசனம்.

அகோதெப்படி யென்றால் ஆங்கிலேயப்படைகள் மேலாகோட்டையை பிடித்துக்கொண்டு படைத்தலைவரால் வெற்றிக் கொடியை கோட்டையின்மீது போட்டவுடன் இனி மீஞ்சாமென்னுமூரைபிடிக்கவேண்டுமென்று வெகுகளிப்புடன் அந்த வூரைநோக்கி கப்பலை நடத்திக்கொண்டு வருகிறவிதங்காணக.

இதுவும் பொது வசனம்.

அகோதெப்படியென்றால் மேலாகோட்டையிலிருந்த தீபோ அரசனுடைய ராணுவங்கள் ஆங்கிலேயருடனே சண்டைசெய்ய முடியாமல் பின்வாங்கி வோடி தங்கள் ராஜனான தீபோவினிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிற விதங்காணக.

மேலாக்கோட்டையின் படைகள் சொல்

விருத்தம்.

அதிபதிதீபோகேளீர் ஆங்கிலேயப்படைகளோடு
எதிரிட்டுசண்டைசெய்ய யெங்களாலாகாதையா

பதிதனைபிடித்துமேலா படையனைத்தையுங்கொன்றார்கள்
கதியென்றுவுமையடைந்தோங் கார்த்தெமைரட்சிப்பீரே.

வசனம்.

கேளுமையா யெங்களரசே ஆங்கிலேயப் படைகள் ஐராவதிநதியில் வருவதை நாங்கள்கண்டு அநேக குண்டுகளைவிட்டுத் தடுத்தும் அவர்கள் மிஞ்சி பீரங்கி குண்டுகளைவிட்டு நம்முடைய படைகளில் அநேக வீரர்களைக்கொன்று கோட்டையும் பிடித்துக் கொண்டார்கள் இனிஅவர்களை யெதிர்க்க யெங்களால் முடியாது இதுவன்றி ஆற்றின் கமைமார்க்கமாக அவர்கள் படைகள் கால்நடையாய் வருகிறார்களையா அரசே.

தீபோ விருத்தம்.

படைகளேநீங்களொன்றும் பயப்படவேண்டாமும்மை
கொடியர்கள்கையிலொப்புக் கொடுத்திடமாட்டேனீங்கள்
நொடிதனிற்சென்றுகாட்டில் நுழைந்தவரோடெதிர்த்து
அடித்துப்போர்ச்செய்வீரொந்த னகமகிழ்ந்திடவேதானே

வசனம்.

அகோகேளும் போர்வீரர்களே உங்களையெதிரிகள் கையில் ஒப்புக்கொடுக்கமாட்டேன் நீங்களொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை ஆங்கிலேயப்படைகள் வனாந்திரவழியாக வருகிறபடியால் நீங்கள் சீக்கிரமாய் காட்டிற்குள் நுழைந்து அவர்களுடன் சண்டை செய்யுங்கள் போர்வீரர்களே (படைகள்) அப்படியே செய்கிறோமரசே.

பொது ஆசிரிய விருத்தம்.

---

இந்தவிதமாகமேலாப்படையோர்வந்து
வியம்பியதைநினைத்துதீபோவரசன்றன்னுள்
சிந்தையதுவுருகியேவாடியென்ன
செய்வதென்றுயிருக்குமந்தத்தருணந்தன்னில்
வந்தவொருவாங்கிலேயபடைகள்மீஞ்சாம்
வைப்பிலுள்ளோர்தங்களையும்வதைக்கவேதான்
கொந்தலொடுவவர்மீதுகுண்டுதன்னை
குபீல்குபீலெனவிடுத்துகொளுத்துவாரோ.

ஆங்கிலேயர் மீஞ்சாமீது சண்டைசெய்யும்
தரு இ-ம். கலியாணி அடதாளம்.

பல்லவி.

அடித்தாரோஆங்கிலேயர் - மனம்நொந்து
தடித்தாரோமீஞ்சமினோர்

அநுபல்லவி.

அடித்தாரோஆங்கிலேயர் அஞ்சாநெஞ்சத்தவராய்
வெடிமருந்தோடுகுண்டை மேலும்மேலும்விடுத்து (அ)

சரணங்கள்.

1 ஈட்டியிதனுல்குத்தி யிழுத்துயெறிவோரும்
எழுந்தோடுவோர்களை யெட்டிவெட்டிடுவோரும்
வாட்டங்கொண்டவர்கள் மனங்கலங்கிடகுண்டை
மாரிபோலவிட்டு மடித்தாரனேகரை (அ)

2 எண்ணமுடியாத யேராளகுண்டுகளை
எடுத்தாங்கிலேயர்கள் ஏவிடமீஞ்சாமோர்
பெண்ணுடன்மக்களைப் பிரிந்துவோடியேநாம்
பிழைப்பதுநலமென்று பின்வாங்கிவோட்டங்கொள்ள (அ)

3 மண்டைமூளைசிதற வாடியமூவோரும்
மார்பில்குண்டுருகிட மண்மேல்விழுவோருஞ்
சண்டைசெய்திடயென்னுற் சாயாதுயெனச்சொல்லி
சாமிசாமியென்று சரணடைந்திடுவோரும் (அ)

---

மீஞ்சாம் படைகள் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளும்

விருத்தம்.

நன்றிதுஅண்ணமாரே நமன்போலாங்கிலேயர் வந்து
இன்றெமைவதைக்கின்றுர்க ளென்னநாஞ்செய்வோமையோ
வென்றிடநம்மாலில்லை வேறொருதுணையுங்காணேஞ்
சென்றுவேறூரைச்சார்ந்து சீவிப்போம்வந்திடீரோ.

வசனம்.

கேளும் அண்ணமார்களேயெமனைப்போல் ஆங்கிலேயர்கள்வந்து நம்மை யுயிர்வதை செய்கிறுர்களே நாமிதற்கென்ன செய்வோம் இவர்களை யெதிர்த்து சண்டைசெய்ய நம்மா லாகாது நமக்கு வேறுதுணை செய்வாருமில்லை ஆதலால் நாமிங்கிருந்தால் பிழைப்பது அரிதாகும் எங்கேயாவதுவோடிபிழைத்துக் கொள்வோம் வாருங்கள்தோழர்களே.

பொது விருத்தம்.

கதறியேமீஞ்சாம்வீரர் காற்றினிற்பஞ்சுபோல
சிதறியேவோட்டங்கொண்டார் திரமிகுமந்திரிகண்டு
மிதமற்றவிசனங்கொண்டு விரைவாய்வந்தரசனேடு
இதமுடனடந்தசேதி யெடுத்துரைசெய்குவானே.

வசனம்.

அகோதெப்படியென்றுல் மீஞ்சாமிலிருந்தபடைகள் ஆங்கிலேய

ரோடு யெதிர்த்துச் சண்டைசெய்ய முடியாமல் நான்கு திக்கிலும் பரவி யோடுதலைக்கண்ட முதல்மந்திரி மிகவும் விசனங்கொண்டு தீபோவரசனிடம் நடந்தசேதியை தெறிவிக்கும் விதங்காண்க.

முதல்மந்திரிசொல் விருத்தம்.

ஒப்பிலாவரசேகேளீ ரொன்னலர்தம்மைவெல்ல
இப்பிரப்பிலுமாகாது யெழுபிரப்பிலுமாகாது
தப்பியேபிழைக்கவென்றால் சமாதானக்கொடியைக்கொண்டு
இப்பவேசென்றுற்சீரோ டிருந்திடுவோங்காண்பீரே.

வசனம்.

கேளுமையா அரசரே ஆங்கிலேயராகிய யெதிரிகளைவெல்ல நம்மால் இப்பிரப்பிலுமாகாது இன்னம் ஏழுபிரப்புப் பிரந்தாலும் ஆகாது முன்னம் மேலாவைபிடித்துக் கொண்டார்கள் இப்போது மீஞ்சாமென்பதையும் பிடித்துக் கொண்டார்கள் ஆனபடியால் நாம் சீக்கிரமாய் சமாதரனக்கொடியை கொண்டுபோய் அவர்களை சமாதானப்படுத்திக் கொண்டால் இன்னம் சிலதுகாலம் இந்த அப்பர் பர்மாவை ஆண்டுக்கொண்டு சுகமாக யிருக்கலாம் இல்லாவிட்டால் ஆங்கிலேயர் நம்மைத் துன்பப்படுத்தி, யிந்த வூரையும் பிடித்துக் கொள்வார்கள்போல் காணுகிறது இனியுமதுசித்தத்தைப்போல் நடப்பிப்பீர் அரசே.

தீபோரான் மந்திரிக்கு சொல் விருத்தம்.

தகுந்தகும்நன்றாய்ச்சொன்னாய் சற்குணமந்திரியிந்த
சகமதிலாங்கிலேயர் சமானமாயொருவரில்லை
தகையுடனாங்கிலேயர் தமைச்சமாதானஞ்செய்து
வகையுடன்வந்தெனக்கு வழுத்துவாய்சேதிதானே.

வசனம்.

ஆ-ஆ நன்றாய் சொன்னாப் மந்திரி சரி சரி நீ சொன்னதை ஒப்புக்கொண்டேன் மேலும் இந்த வுலகத்தில் புத்தி யுக்தி சாமார்த்தியத்தில் ஆங்கிலேயருக்கு சமானமாக ஒருவருமில்லை ஆதலால் நீ சீக்கிரமாக சமாதானக் கொடியைக் கொண்டு ஆங்கிலேய ரிடம்போய் எப்படியாவது சமாதானஞ்செய்து யெனக்குவந்துமருமொழிசொல்லுவாய் மந்திரி. (மந்திரி) அப்படியேயிதோ சமாதானக்கொடியை கொண்டுபோகிறேனையா அரசரே.

பொது விருத்தம்.

அடித்துமேலாவின்கோட்டை அழகுறுமீஞ்சாந்தன்னைப்
பிடித்தாங்கிலேயர்பின்னும் பெருமாண்ட்லிதன்னைநோக்கி
திடங்கொண்டுவருகும்போது தீபோமந்திரியுமோர்நற்
கொடிதனைக்கையிலேந்தி கொப்பெனவருகின்றானே

வ ச ன ம் .

அகோதெப்படியென்றால் ஆங்கிலேயபடைகள் ஆற்றில வரும் போது தீபோராஜனுடைய முதல்மந்திரி இராஜன் உத்தரவின்படி சமாதான வெண்கொடியைக் கொண்டு ஆங்கிலேயரை சமாதானப்படுத்த வருகிற விதங்காண்க.

மந்திரி வருகிறதைக்கண்ட ஆங்கிலேய பிக்கெட் போர்ச்சேவுகன் பிரன்டர்காஸ்ட் ஜனலுடன் தெரிவிக்கிற விருத்தம்.

ஐயனேபிரன்டர்காஸ்ட்டே யாரோவோர்மனிதனின்று
கையினில்கொடியுமேந்தி கரிமீதிலேரிக்கொண்டு
பையவேவருகின்றான்றன் படை-கரத்தாய்தமின்றி
துய்யவும்பாதம்போற்றி சொல்லவேவந்தேனையா.

வ ச ன ம் .

சரணம் சரணமையா படைத்தலைவரே யாரோ ஒருமனிதன் யானையின்பேரி லேரிக்கொண்டு ஆயுதமில்லாத சிலபடைகள்தன்னுடன்வரவெள்ளைக் கொடியை தன்கையில் பிடித்துக்கொண்டு ஆற்றோரமாய் நம்மை நோக்கி வருகின்றானையா சனரல் பிரன்டர்காஸ்ட் துரையே.

போது விருத்தம்.

சேவுகன்வந்துரைத்த சேதியைபிரண்டர்காஸ்டும்
ஆவலாய்கேட்டிதேது அதிசயமென்றேயெண்ணி
காவலன்விட்டதூதின் கருத்தையோர்ந்திடவிருந்தார்
தீவிரமாகவந்து சேர்ந்திட்டான்மந்திரிதானே.

வ ச ன ம் .

இப்படியாக பிக்கட்கார போர்ச்சேவுகன் வந்து சொன்னசேதியை படைத்தலைவனான பிரன்டர்காஸ்ட் துரையானவர் கேட்டு இதுயேது அரசன் தூதுவிட்டாப்போல் காண்கிறது ஆனாலுமென்ன என்னசங்கதி கொண்டுவருகிறானோ பார்ப்போமென்று மந்திரிவருதலை பார்த்துக் கொண்டிருக்கும்போது இதற்குள் மந்திரியும் வந்துவிட்டா னென்று காண்க.

பிரன்டர்காஸ்ட் ஜனரலானவர் மந்திரியை சந்தித்து சொல்

க வி .

சுந்தரமந்திரி வுந்தனைக்காண
சிந்தையுமகிழ்ந்தேன் வந்திடுவாயே.

வ ச ன ம் .

ஆ-ஆ உன்னைப்பார்க்க மெத்தவும் சந்தோஷமாச்சுது வாராய் மந்திரியே.

பிரன்டர்காஸ்ட் ஜனரல் விருத்தம்

நீதியும்நெறியும்நல்ல நிலைமையும்நிஜமுமன்பும்
ஓதுமீதெல்லாமுள்ள வுத்தமமந்திரிகேளாய்
ஏதுகாரியமதாக யிங்கின்றுவந்தாய்நீயும்
பீதியில்லாமலேதான் பிரித்தெனக்குறைத்திடாயே

வசனம்.

கேளாய்மந்திரி நீயிங்குவந்த காரியமேதோ அதையாதொரு தடையில்லாமல் நான் அறியச்சொல்லுவாய் மந்திரி.

மந்திரிசொல் விருத்தம்.

தளபதிகேளீரின்று சமாதானமாகதீபோ
உளமதிற்கோண்டேயென்னை வுங்கள்பாலனுப்பினார்நீர்
களங்கமில்லாமலெங்கள் கருத்தைப்போற்சம்மதித்தால்
விளம்புவீர்சேதிதன்னை வேந்தனுக்குரைக்கத்தானே.

வசனம்.

கேளும்படைத்தலைவரோ எங்கள் அரசனான தீபோராஜன் தங்களோடு சமாதானமாக வேண்டுமென்கிற யெண்ணங்கொண்டு என்னை தங்களிட மனுப்பினார் ஆனதால் தாங்கள் எங்கள் கருத்திற்கு வொப்புக்கொள்வீரானால் மருமொழிவந்து தம்மிடம் சொல்லும்படி சொல்லியனுப்பினாரையா படைத்தலைவரோ.

பிரன்டர்காஸ்ட் ஜனரல் விருத்தம்.

எட்டினாற்குடிமியில்லை யெனிற்காலைபிடிக்கும்பொல்லா
துட்டரைப்போலேநீயுஞ் சொல்லவேவந்தாய்மந்திரி
இட்டமாய்சமாதானத்தை யெண்ணினவரசன்வந்தால்
நட்டம்வராமலேதும் நவிலுவேனவர்க்குத்தானே.

வசனம்.

கேளும் மந்திரி எட்டினால் குடிமியைப் பிடிக்கிறதும் எட்டாமல் போச்சுதானால் வணக்கத்துடன் காலைப்பிடித்துக்கொள்கிற பொல்லாத வஞ்சகதுஷ்டரைப்போல் நீ யிப்பொழுது யென்னுடன் சொல்லவந்தாய் நான் இப்பொழுது இதற்கு சம்மதிக்கமாட்டேன் உங்களரசனை யென்னிடம் சமாதானமாக வந்தால் அப்பொழுது தகுந்த வுத்தரவு சொல்லுவேனென்று உங்கள் அரசனிடம் சொல்லி அவனையிங்கு அழைத்துவருவாய்மந்திரியே.

மந்திரி வசனம்.

கேளும் படைத்தலைவரோ அரசனானவர் வெகுதலைவலியில் இருப்பதால் அவர் இவிடம்வர முடியாது ஐயாதுரையே.

பிரண்டர்காஸ்ட்துரை சொல் வசனம்.

கேளும் மந்திரியே நாளது 1885-ஹூ நவம்பர் மாதம் 28-தேதியி ல் உங்களுரை முற்றிகைப் போடப்போகிறபடியால் இன்றையதின மே உங்களரசனை என்னிடம்வந்து வினவும்படி செய்வாய்மந்திரியே.

மந்திரி வசனம்

ஐயாபடைத்தலைவரே நீரெனக்கு தெரிவித்த சங்கதியனைத்தையும் அரசனிடம் தெரியப்படுத்துகிறேனையா துரையே.

பொது விருத்தம்.

மந்திரிவரவைநோக்கி மன்னனுந்தீபோமெத்த
சிந்தையுங்கலங்கியேது செய்வோமென்றிருக்கும்போது
அந்தமாய்க்கொடியைக்கொண்டு ஆங்கிலேயர்பக்கல்போன
புந்திசேர்மந்திரியுந்தீ போயிடம்வந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆங்கிலேயரிடத்திற்கு சமாதானஞ்செ ய்யப்போன மந்திரியின்னமும் வரவில்லையேயென்று மெத்தவும்விசனங் கொண்டிருக்கும் தீபோராஜனிடம் ஆங்கிலேயர்பக்கல் சென்றிருந்த மந்திரிவந்துசேர்ந்த விதங்காண்க.

தீபோராஜன் மந்திரிக்குசொல் கவி.

மதிமிகுமந்திரி மாற்றலர்தங்கள்
அதிசயந்தன்னை அடவுடனுரைப்பாய்

ஆ-ஆ மந்திரி நீயெதிரிகளாகிய ஆங்கிலேயரிடம் சென்ற சங்கதி யை யெனக்குத் தெறியச்சொல்லுவாய் மந்திரியே.

மந்திரி இராஜனுக்குசொல் வசனம்.

கேளுமையா அரசரே நான் ஆங்கிலேயருடைய படைத்தலைவனி டத்தில்போய் எங்கள்அரசன்செய்த அபசாரங்களைப் பொருத்து முன் போல இஷ்டமுடையவர்களா யிருப்போமென்று இன்னும்பலவாரான சமாதானமான வார்த்தைகளை அனேகமாகச்சொல்லியும் படைத்தலை வனுனவன் அதுகளைதடுத்துச் சொன்னதாவது எனக்கு உன்னால் ஒரு காரியமுமில்லை உன் அரசனை யிங்குவரும்படி சொல்வாயென்றான் அத ற்கு நான் எங்களரசன் வெகுதூரத்தி லிருக்கிறபடியால் வரக்கூடாமை யென்று சொன்னேன் அப்படிவுங்களரசன் வராவிட்டால் நாளது1885-ம் வருஷம் நவம்பர் மாதம் 28-தேதியில் மாண்டலியை முத்திரிகைப் போடுவேன் என்று சொன்னர் அப்படியானல் எங்களரசனிடம் தெரி விக்கிறேனென்று வந்தேனையா யெங்களரசே.

அரசன் வசனம்.

அகோகேளும் மந்திரியே நான் அவர்களிடம் சென்றால் ஆங்கிலேயர்கள் என்னைப்பிடித்து தீக்கப்பலேத்தி கொண்டுபோய் விடுவார்கள் அவர்கள் அப்படி செய்வாரானால் நமக்குமெத்தவும் அவமானமாயிருக்கும் ஆதலால் நாம் சமாதானமாகவே போகவேண்டுமெப்பாமந்திரியே.

மந்திரி வசனம்.

ஆம் ஆம் அப்படிசெய்வது நமக்கு மானமாயிருக்குமையா அரசே.

அரசன் மந்திரிக்குசொல் விருத்தம்.

அன்புள்ளமந்திரியின்று ஆங்கிலேயர்கள்தமக்கு
என்தேகஞ்சௌக்கியமில்லா திருக்குதுயென்றுசொல்லி
நன்மையாங்கடிதமொன்று நான்தீட்டித்தருகிறேனீ
தென்புடனவர்க்களித்து சீக்கிரமழைத்துவாராய்.

வசனம்.

கேளுமப்பா என்மனதிற்கிசைந்த மந்திரி ஆங்கிலேயப் படைத்தலைவனுக்கு என்னுடையதேகஞ் சௌக்கியமில்லை யென்பதாக ஒருகடிதம் எழுதித்தருகிறேன் நீ அதைக்கொண்டுபோய் அவரிடங்கொடுத்து அவரையிவ்விடம் அழைத்துக்கொண்டு வருவாய்மந்திரியே.

மந்திரிசொல் வசனம்.

அப்படியே ஆங்கிலேயப் படைத்தலைவருக்குக் காண்பித்து அவரை அழைத்துக்கொண்டு வருகிறேன் சுவாமி.

பிரண்டர்காஸ்டருக்கு மந்திரிசொல் விருத்தம்.

இத்திசைமுழுதும்போற்று மிறைவனுந்தீபோமன்னன்
மெத்தவும்சௌக்கியமின்றி மெலிந்துமேயிருப்பதாலே
சித்தமாயிந்தவோலைத் தீட்டியேதநதாரையா
குத்தம்வையாமலெந்தன் கூடநீர்வருகுவீரோ.

வசனம்.

கேளும் படைத்தலைவரோ தாங்கள்சொன்னதை யெங்களரசனுக்கு சொன்னேன் அவரிவ்விடம் வருகிறதற்கு யாதொருதடையில்லை ஆனால் இப்பொழுது அவர்தேகஞ் சௌக்கிய மில்லாததால் இந்தநிருபத்தை தங்களுக்குக் காண்பித்து அவிடத்திற்கு தங்களை அழைத்துவரச் சொன்னாரையா படைத்தலைவரோ. (படைத்தலைவர்) அப்படியே தடையின்றி வருகிறேனையா மந்திரியே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் படைத்தலைவனான பிரண்டர்காஸ்ட் ஜ

னரலானவர் தன்னுடைய ராணுவங்களுடன் புறப்பட்டு மாண்டலிதே சத்திற்குவந்து தீபோராஜனைகண்டு சிங்காதனத்தைவிட் டிரங்கச்சொல்லுகிறவிதங்காண்க.

பிரன்டர்காஸ்ட் விருத்தம்.

இம்மானிலத்தில்வாழு மெவர்களும்வணங்கும்ராணி
அம்மாளுமெனக்களித்த ஆர்டரோதென்றாலுன்னை
சிம்மாதனத்தைவிட்டு சீக்கிரமாயிரக்கி
தம்பாலிற்கொடுவாவென்று சாற்றினார்தெரிந்துகொள்ளே.

வசனம்.

கேளாய் தீபோவென்னும் அரசே இந்தியா சக்கிரவர்த்தினியாகிய இராணியென்னும்குயின்விக்டோரியா அம்மாள் உம்மைசிம்மாசனத்தை விட்டிரக்கி இந்தியாவுக்கு அழைத்துவரச்சொன்னார் நீ யாதொன்றும் தடைசொல்லாமல் என்பின்வருவாயாகில் மெத்தவும் நலம்பெருவாய் அரசரே.

அரசன் விருத்தம்.

சங்கையில்லாமலுன்னை சடுதியிலிங்குயேவி
பொங்கியயெனதுசொந்தப் பொருள்களைபறித்துயானுந்
தங்குஞ்சிம்மாசனத்தை தவிர்த்தெனையழைத்துக்கொண்டு
அங்கெனைவரவேசொன்ன அதிசயம்விளம்புவீரோ.

வசனம்.

கேளும் ஆங்கிலேயப் படைத்தலைவரே நிர்நிமித்தியமாக வுன்னை இந்தியாசக்ரவர்த்தினி யிங்கு அனுப்பி யென்னுடைய பொருள்களையும் பகரித்துக்கொண்டு சிம்மாதனத்திலிருந்து யிரக்கி தன்னிடம் அழைத்து வரச்சொனன அதிசயமேதோ அதைத் தெரியப்படுத்தும் படைத்தலைவரே.

படைத்தலைவன் வசனம்.

கேளும் இராஜனே நீர்காலமெல்லாம் ராஜாங்கத்திற்கு அடாதகாரியங்களை செய்துவந்ததாக உன்பேரில் ஜனங்கள் செய்த பிரியாது இவ்வளவென்று சொல்லக்கூடாது இதுதவிர உனக்கு நாங்கள் சமாதான கடிதங்கள் எழுதியும் காட்டின்தேக்குமரங்கள் வியாபாரத்துக்காகவந்தவர்த்தகனை சிறையில் வைத்த தல்லாமல் மரக்கலங்களையும் அடித்துப்பிடித்தாய் உன்துர்மந்திரிகளுடைய துர்போதனையினால் ஆங்கிலேயனை யுத்தத்துக்கு வரும்படி நீ யனுப்பிய கடிதமும் இதோயிருக்கின்றது ஆனபடியால் தடையின்றி உன்னுடைய கொலுவைவிட்டிரக்கவியாயமிருக்கிறது அரசரே.

அரசன் படைத்தலைவனுக்குசொல் வசனம்.

கேளும் படைத்தலைவரோ இவைகளொன்றும் நான்அறியமாட்டேன் யுத்தத்துக்குவுங்களை வரச்சொன்னதுமெய்யே இந்தமேலானபர்மாவில் எங்கள்வம்சத்தாரில் முப்பத்தைந்துசக்ரவர்த்திகள் இதுவரையிலும் ஆண்டுவந்தவர்கள் அவர்கள்காலத்திலும் அனேகதரம் நீங்கள்யுத்தத்துக்கு வந்ததுமுண்டு சமாதானக்கொடியைகண்டு திரும்பிப்போனதுமுண்டு அதுபோலென்று யானினைத்தேன் இதுவன்றி மூன்றுமாதங்கெடுவு கேட்டும் அக்கெடுவுக்குமுன்வந்து விட்டீர்கள் இதுமத்தியில் நீர்வந்தபடியால் என்னுடைய காவல்சேவுகர்கள் ஆற்றைகடக்க வொட்டாமல் தடைசெய்து யிருப்பார்கள் அவரையும்அடித்துகொன்றுநாட்டினுள்ளும் நீங்கள்வரும்படியாக யெத்தனஞ்செய்தபோது யான்மந்திரியை முன்னனுப்பி சமாதானஞ்சொல்லி அழைத்துவரச் சொன்னேன் இப்படியிருக்க நான்என் சிம்மாதனத்தை விட்டிரங்க என்னநியாயமுண்டு படைத்தலைவனே.

படைத்தலைவன் வசனம்.

அகோகேளும் அரசரோ நான்வும்மை சிம்மாதனம் விட்டிரக்க பெரியவனல்ல இந்தியா சக்கிரவர்த்தினி யாருடைய ஆக்கினையை யானுனக்கு வுரைத்தேன் அவ்வாக்கினைப்படி சிம்மாதனத்தை விட்டிரங்கி வருவாய் ஐயா அரசே.

அரசன் தன் தாய்க்குசொல் விருத்தம்.

அந்தநாள்தனிலேயிந்த ஆங்கிலேயன்வர்த்தகன்போல்
வந்தவன்றனைநானெந்தன் வாள்கொண்டுவெட்டவெண்ண
மைந்தனேவேண்டாமென்று மறுத்திட்டாயம்மாயிப்போ
துந்தனாலெந்தன்பட்ட முயிரோடேயிழக்கலானேன்.

வசனம்.

கேளும் என்னருமைதாயே முன்னொருகாலத்தில் வர்த்தகனைப்போல் வர்த்தகவேஷங்கொண்டு நம்முடைய நாட்டை அளவெடுத்தபோது என்மந்திரி அழைத்துவந்து யென்முன்விட நான்வுடனே சிறையில் வைக்கச்சொன்னவன் இவனல்லவோ தங்களால் சிறைவிடுபட்டு போனவன் இவனல்லவா நன்றாயுற்றுப்பாருமம்மா உன்னாலின்று யெனதுவாழ்வும் சிறப்பும் வீணாகயிழக்க லாச்சுதேதாயே.

தாய்மகனுக்குச்சொல் விருத்தம்.

உண்டானபொருளைநாமு முதவாதென்றாலும்போமோ
அண்டாதபொருளைநாளு மழைத்தாலும்வருவதுண்டோ
கண்டோமனேகராஜர் கனமுடன்பிழைத்துபின்பு
தண்டோடுபதியிழந்தார் சுவாமியின்செயலீதன்றோ.

வசனம்.

கேளுமப்பா யெனதன்புள்ள மைந்தனே வுலகத்தில், ஒருவனுக் குண்டான பொருளைவெறுத்து தள்ளினாலும் அது அவனைவிட்டுப் போகுமோ வொருக்காலும் போகமாட்டாது இல்லாதபொருளை வ ருந்தி அழைத்தாலும் வருவதுண்டோ வரமாட்டாது இதுபோலவே யெத்தனையோ இராஜ ராஜாக்கள் இந்தவுலகையாண்டு முடிவில் கெடு திவந் துற்றகாலத்தில் தன்யானைசேனைபண்டு பண்டாரங்களைதோர்த் து பரதேசிகளானதுங் கேட்டதில்லையா எல்லாந்தெய்வச்செயலேவொ ழிய நம்மாலாவது வேறொன்று மில்லையப்பா மைந்தனே.

தாய்மகனுக்கு சொல் தரு-இம். செஞ்சுருட்டி.

விடுமோமகனே தலை விதிவசமென்பதாயும் ...(விடு)

இடமுடனிந்த தேசமுழுதுமோர்
குடைகீழாளுங் கொற்றவனானாலும்... ...(விடு)

முன்னாளில்ராவணன் மூர்க்கமதினாலே
சின்னாபின்னமாக சிதைந்துபோனதால்... ...(விடு)

வலிமைமிகவுற்ற வாலியுமோரம்பால்
நிலத்தில்விழுந்ததை நீகேட்டதிலையோ... ...(விடு)

ஒருபொய்யைச்சொல்ல வொண்ணாவரிச்சந்திரன்
திருநிகர்பெண்டையுஞ் சிருவனையும்விற்றான்... ...(விடு)

பாவியாந்துரியன் பஞ்சபாண்டவரால்
ஆவியிழந்துட லழிந்ததுமிலையோ... ...(விடு)

இப்படிப்பட்டவ ரெத்தனையோவிதி
தப்பித்துக்கொள்ளாமல் தயங்கினாரறிவாய்... ...(விடு)

---

தாய்மகனுக்கு தேருதல்சொல்லும் விருத்தம்.

மானிலந்தன்னையாளு மன்னர்கள் தனதுவாழ்வும்
ஈனமாந்திசையும்வந்து யெய்தியேவிட்டுதானாற்
கானகந்தீப்பிடித்துக் கருகியபோலேயாகும்
நானினியென்னசொல்வே னுதனார்செயல்தப்பாதே.

வசனம்.

கேளுமப்பாமைந்தனே கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுக ம் கலியுகமென்று சொல்ப்பட்ட இந்தநான்குயுகங்களிலேயும் ஆண்ட அரசர்களுடைய செல்வமுஞ் செருக்கும் சிலகாலம் நடந்து சிலகாலம் ஒடுங்கியதுபோல நமக்குமின்று சம்பவித்ததற்காக வீணாய்மனவருத்த ப்படுவதினால் ஒன்றும் பிரயோசன மில்லையப்பாமகனே.

முதல் மனைவியான சூப்பியாஜி மாமிக்குச்சொல் வசனம்.

கேளும் என்னருமைமாமி வயதுசென்றுநாள்பட பிழைத்துமென்ன வெகுவாய்விவேகங்கள்பேசியுமென்ன முன்னேநீங்களெல்லாம்சபை கூடி ஆங்கிலேயர்மீதுசண்டைசெய்யவெத்தனித்தபோது நான்வேண்டாமென்று தடுத்தும் கேளாமல் என்சகோதரி சூப்பியாலா சொன்ன சொல்லையும் துர்மந்திரிகள் யோசனையுங்கேட்டு ஆங்கிலேயருடன் யுத்தஞ்செய்ய யெழுதினீர்கள் இதுவுமன்றி இந்த ஆங்கிலேயப்படைத்தலைவன் நம்மூரில்வந்தபோது என்மணவாளர் சிறையிலிட்டசமையத்தில் நீயேவிடுதலையுஞ் செய்யவைத்தாய் இப்பொழுது நீயே நியாயமுஞ் சொல்லவருகிறாய் மாமி.

மாமி மருமகளுக்குசொல் வசனம்.

கேளுமம்மா சூப்பியாஜிராணியே நீ சொன்னதுமெய்யே நாழியைக்கொண்டுபோய் கடலில்மொண்டால் கடலில் அதிகஜலமிருந்தும் நாழியவ்வளவுஜலம் வருமேயொழிய அதிகமாய்வாராது அதுபோல் ஜயன் கட்டளைககு மிஞ்சி ஆசைப்பட்டதினால் ஏதுபிரயோசனம் எல்லாம் முத்தொழிலையும் நடத்திவரும் ஈசன்செயலன்றி நம்மாலாவது வொன்றுமில்லையம்மா சூப்பியாஜியே.

தீபோ முதல்மனைவியாகிய சூப்பியாஜி புலம்பல்

தரு இம். காம்போதி.

---

இந்திரபோகம்போலு மிதுநாளாண்டவரசை
 யிழந்திடநாளாச்சே ஓ தெய்வமே

மந்திரிபிரதானிகள் மானிலத்தரசர்கள்
 வணங்கிடவாழ்ந்தோமே ஓ தெய்வமே

ஆதினள் துவக்கியிவ் வாவாவின்மேலெதிர்த்த
 வரசருமுண்டோஜயோ ஓ தெய்வமே

காதகஆங்கிலேயர் கபடமாகவேவந்து
 கலங்கசெய்திடலாச்சே ஓ தெய்வமே

பத்தினிமாதர்மனம் பதரிடவேபொல்லா
 பழிமொழியுரைத்தேனே ஓதெய்வமே

குத்தமில்லாதவனா கொடுங்கோலைசெலுத்தியே
 குலைசெய்துவிட்டோமோஓ தெய்வமே

சிம்மாசனத்திருந்து தேசத்தரசாதினா
 செலுத்திடவாழ்ந்தோமே ஓ தெய்வமே

இம்மானிலத்தோர்களு மிழிவாகப்பேசிட
யிரங்கச்செய்தாயேஐயோ ஓ தெய்வமே

கொற்றவராயிருந்து குலவுசிம்மாசனத்தில்
கொலுவீற்றிருந்தவனா ஓ தெய்வமே

மற்றதேசத்தான்வந்து வலுவாயிரக்கிவிட
வகுத்தாயோவிதிஐயோ ஓ தெய்வமே

உலகத்தில்வெகுகீர்த்தி யுற்றயென்மணவாளன்
வொடுங்கிநின்றிடலாச்சே ஓ தெய்வமே

பலரும்பார்த்துநகைத்து பலகாலுமெங்களை
பரிகாசஞ்செய்யவைத்தாய் ஓ தெய்வமே

தனதானியமுதலாஞ் சம்பத்தனத்தைவிட்டு
தயங்கியேகிடலாச்சே ஓ தெய்வமே

இனமாம்பந்துஜனங்க ளெங்களைபார்த்தின்று
யிரங்கியழுகலாச்சே ஓ தெய்வமே

இந்தப்புவியில்கிட்டா யெழிலாம்நவரத்னங்கள்
யாங்களடைந்திருந்தோம் ஓ தெய்வமே

சொந்தமாம்நாட்டினையுஞ் சொகுசானக்கோட்டையும்
துரந்திடகாலமாச்சே ஓ தெய்வவே.

முதல் மனைவி சூப்பியாஜி தேவாரம்.

ஈசனேயெம்பிரானே யாங்களுமிதுநாள்மட்டும்
வாசமாயிருந்தநாட்டை வந்துமேஆங்கிலேயன்
மோசமேசெய்துசெல்வம் முழுதுங்கைகொண்டானையோ
பாசமாயெமையாள்வாயுன் பாதமேதுணையெமக்கே

வசனம்.

ஓ சர்வஜீவதயாபரராகிய கர்த்தனே நாங்களிதுபரியந்திரம் ஆண்டுவந்த எங்கள்நாடுநகரம் பண்டுபண்டாரங்களையும் மோசம்செய்து ஆலேயர் இன்று அபகரித்துக்கொண்டார்கள் இனிவும்முடைய பாதமேயெங்களுக்குகதி கர்த்தனே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் தீபோராஜனுடைய முதல் மனைவியாகிய சூப்பியாஜி மெத்தவும் மனம்நொந்து புலம்பியழுதபின் இரண்டா மனைவியாகிய சூப்பியாலாவானவள் ஜனரல் பிரண்டர்காஸ்ட்டருடன்சொல்லுகிற விதங்காண்க.

சூப்பியாலா விருத்தம்.

என்பிள்ளாய்பிரன்டர்காஸ்ட்டே யெழுதியகெடுவிருக்க
என்பிள்ளாயிங்குவந்தா யித்தனை துணிவுகொண்டு

என்பிள்ளாய்கொலுவைவிட்டு யிறைவனேயழைக்கிறாய்நீ
என்பிள்ளாயுனக்குயிது யேற்காததர்மந்தானே.

வசனம்.

கேளும் பிரண்டர்காஸ்டென்னும் ஆங்கிலேயப்படைத்தலைவனே நாங்கள் உங்களுக்கு மூன்றுமாதம்கெடுவுகொடுத்திருக்க அதற்குமுன் நீயிங்குவந்து மனத்துணிவாய் மன்னனேசிம்மாதனத்தை விட்டுயிரங்கச் சொல்லியும் உன்னுடன்கூட இந்தியாவுக்கு வரச்சொல்லியும் வம்பு செய்கிறாய் இதுதகாதகாரியமாயுஞ் அதர்ம்மமாகவும் காணப்படுகிற தேயொழிய நியாயமாய் காணப்படவில்லை பிரன்டர்காஸ்ட் ஜனரலே.

பிரன்டர்காஸ்ட் ஜனரல்சொல் வசனம்.

கேளுமம்மா சூப்பியாலாராணியே என்னுடைய இஷ்டமாய் உங்கள்நாட்டில் வந்தவனல்ல உங்கள்பேரில் ஜனங்கள் எத்தனேயோதரம் பிரியாதுசெய்துக்கொண்டதை என்வாயால் சொல்லமுடியாது அந்தப் பிரியாதுகளெல்லாம் கேள்விப்பட்டமகாகனமும் மேன்மையும் கீர்த்தியும்பெற்ற குயின் விக்டோரியாவென்னும் இந்தியா சக்கிரவர்த்தினியாகிய இராணியம்மாள் உடனே யுத்தஞ்செய்து நாட்டை முத்திரிகைப் போட்டுஅரசனையுங்கையோடே அழைத்துக்கொண்டுவரச்சொன்னாரம்மா சூப்பியாலாராணியே.

சூப்பியாலா புலம்பல் தரு-இம். கண்டா.

ஆ-பரனே விதிவசமோ — ஐயையோபரனே... ...(ஆபர)

பூதலந்தனில் பொல்லாவக்ரமங்கள்
புரிந்தோமோயிந்த புல்லனுக்கடங்கிட... ...(ஆபர)
குருமார்களுக்கென்ன குறையதுசெய்தோமோ
கொற்றவறின்று குலைந்திடலாச்சுதே... ...(ஆபர)
ஆவாதேசம்விடவு மாங்கிலேயன்வந்தின்று
அழைக்கிறானேயிதோ அதட்டியேயெங்களை... ...(ஆபர)
தவத்திலென்னனுங்கள் தாழ்வதுசெய்தோமோ
தனதானியந்தனே சதிகாரன்வசமீய .. ... (ஆபர)
மானிலத்திற்சிறந்த மாண்டலிநாடென
வையகத்தோர்களும் வழங்குஞ்சொல்லும்போச்சே (ஆபர)
மாணிக்கமிழைத்தசிம் மாதனத்தைவிடுத்து
மன்னனையிரங்கிட வழுத்துரானேஐயோ... ...(ஆபர)
இரத்தினமும்புஷ்ப ராகம்பொன்னிறைந்த
நாட்டினைவிட்டெம்மை நடக்கச்சொல்கிறானே... (ஆபர)
இப்படியலைந்திட யெழுதினையோவிதி
யினியெங்களுக்கு ஓ ஈசாநீயேகெதி... ...(ஆபர)

மாமி மருமகளுக்குச்சொல் விருத்தம்.

விதிதனைநினைக்கலுற்ருய் மெல்லியேயந்தநாளில்
மதிகெட்டுப்போச்சோவுந்தன் மன்னனைசண்டை-செய்ய
பதமுடன்சொல்லிபின்னும் பதரியேயழுவதாலே
மிதமிஞ்சிபோனகாரிய மீண்டினிவருமோவம்மா.

வசனம்.

கேளாயம்மா சூப்பியாலாராணியாகிய யென்மருமகளே அந்தநாளில் என்மைந்தன் தீபோராஜனுக்கு யேதேதோ துற்போதனைகள்செய்து ஆங்கிலேயர்மீது சண்டைசெய்ய யேவினவள் நீதானே உன்னால்தான் கடைசியாக மேலானபர்மாவையும் இழக்கக்காலமாச்சுது இப்பொழுது விதிவிதியென்று அழுது அழுது ஒழுகிப்போகிருய் மிதமிஞ்சிபோனகாரியத்துக்கு யாரொன்னசெய்வாரம்மா சூப்பிலாவாகிய யென் மருமகளே.

சூப்பியாலாராணி மாமிக்குச் சொல் வசனம்

அகோகேளுமம்மா வெனதுமாமியே என்துற்போதனையால் நம்முடைய அரசுபோனதென்றும் யானேயிந்த மேலானபர்மாவை யழித்தேனென்றும் பலவாரக யென்மேல் குற்றத்தைச்சாற்றிப் பேசுகிறீர் முன்னொருகாலத்தில் இதோயிங்குநிற்கின்ற ஆங்கிலேயனென்னும் வெள்ளைக்காரன் நம்முடையநாட்டில்வந்து நாட்டை அளவெடுத்தபோது சிறைச்சாலையில்வைத்து பின்பு யிவன் சிரசைதுண்டிக்க இராஜன் எத்தனித்தபோது துண்டிக்காமல் விட்டுவிடும்படி செய்தது தாங்களல்லவா அப்பொழுதே யிவனைகொன்றுவிட்டிருந்தால் இத்தனைகஷ்டம் வாராதே உன்னாலேயே நம்முடைய அரசுபோச்சுதென்றுவீணுகயென்மேல் பழிசுமத்துகிறீர்மாமி.

மாமி மருமகளுக்கு சொல்விருத்தம்.

அனுகூலச்சத்ருவைப்போ லடியம்மாஆங்கிலேய
ஜனமீதுசண்டைசெய்ய சாற்றினவளும்நீதானே
எனதுமைந்தனுக்குவுன்னை யெப்போதுமணஞ்செய்தேனே
சனியனைவலியேகொண்ட சங்கதிபோலேயாச்சே.

வசனம்.

அகோகேளும் என் இளையமருமகளாகிய சூப்பியாலா ராணியே தொட்டிலையுமாட்டி பிள்ளையையும் கிள்ளுகிற அனுகூலச் சத்துருவைப்போலே நீ யிருந்துக்கொண்டு எத்தனையோ நூறுவருஷங்களாக மூன்றுயுகமாய் ஆண்ட யிந்ததேசத்தை கெடுக்கவேண்டுமென்று மனதில் வஞ்சகங்கொண்டு என்மைந்தனை தூண்டி ஆங்கிலேயற்கு நிருபத்தை யெழுதிவிடச்செய்து அனியாயமாய் அரசையிழக்கச்செய்தாய்

உன்னையெப்பொழுது யென்மைந்தனுக்கு விவாகஞ்செய்தேனோ அப்பொழுதே அஷ்டமச்சனியனை வலிய நானேகொண்டது போலாச்சுது அம்மா மருமகளாகிய சூப்பியாலாவே.

சூப்பியாலாசொல்லும் கட்டளை கலிப்பா.

இந்தவிதியெங்கள்தலையினி லீசனேநீயுமெழுதிவிடுத்தாயோ
சிந்தைமெலிந்தேயின்றுயெங்களின் றேசம்விட்டுமருதேசமேகிட
முந்திசெய்தவினையோவறிகிலேன் முன்னோசிட்டசாபமோயிப்போது
வந்தெய்தியெம்மைவருந்திடச்செய்வது மகதேவாயுந்தன்மகிமையோ
(யீதையோ.

வசனம்.

ஓ—ஓ ஜகத்ரட்சகனே இதுவரையிலும் மிகுந்த சிறப்போடும்வாழ்ந்ததும்போய் இப்பொழுது நாங்கள் சிந்தைமெலிந்து மருதேசம்போக முன்னாளில் நாங்கள் செய்தபாதகமோ பெரியோர்களிட்டசாபமோ அல்லது உமது மகிமையோயேது மறிகிலோம் லோகரட்சகனே.

சூப்பியாலா புலம்பல் தரு-இம். சஞ்சுருட்டி-அடதாளம்.

---

ஐயோயெங்களரசிழந்திட லாச்சே ஆ-தெய்வமே.
ஆருக்கென்ன நாங்கள்
அக்ரமஞ்செய்தோமோ
பாருக்குள்ளேயிந்த
பாடுபட்டிடவும் ... ... (ஐயோ)

ஆருமற்றபாவிபோலே ஆனோமே ஆ தெய்வமே
ஆங்கிலேயர்கையில்
அரசனகப்பட்டு
ஏங்கியவர்பின்னால்
ஏகிடலாச்சுதே ... ... (ஐயோ)

எப்போதுந்தீங்குவாராதென் றிருந்தேனே ஆ தெய்வமே
ஏழைகள்போலவே
இன்றுங்கிலேயற்கு
தாழவுஞ்செய்தாயோ
தற்பராயென்செய்வோம் ... (ஐயோ)

காணுதேசமேகிமனங் கலங்கலாச்சே ஆ தெய்வமே
காசினியோர்களுங்
கண்டெங்களைமிக
ஏசிடலாச்சுதே
ஈசாவுன்செயலோ ... ...

---

### ரூப்பியாலாசொல் தேவாரம்.

பத்தியாய்த்தியானிப்போர்கள் பவவினை தன்னை நீக்கி
நித்தியானந்தமீயும் நின்மலாயாங்களின்று
மெத்தவும்நொந்துவாடி மெலியவும்விதித்திட்டாயோ
கர்த்தனேநின்றருள்போற்றி கார்த்தெமைரட்சிப்பீரோ.

### வசனம்.

ஓசர்வலோகத்தை படைத்து கார்க்கவல்ல கர்த்தனே உம்மைபத்தியோடு தியானிக்கும் பக்தர்களுடைய பவவினையை நீக்கிரட்சிக்கும் எமதையனே நாங்களின்று மெத்தவுமெலிந்து விசனங்கொள்ள விடுத்தாய் இனியெங்களை காப்பாற்றும் பாரம் உமதே வும்முடையபாதமே கெதியென்று நம்பினேனையா யீசனே.

### பொது விருத்தம்.

எண்டிசைகீர்த்திப்பெற்ற யிறைவனுந்தீபோராஜன்
பண்டுபண்டாரத்தோடுப் பார்முழுவதையுந்தோர்த்து
ஒண்டியாகித்தயங்கி வொடுங்கியேநிற்கும்போது
பிரன்டர்காஸ்ட்ஜனலேதேதோ பேசுவானேசுவானே.

### வசனம்.

அகோ தெப்படியென்றால் ஆங்கிலேயர்கள் 1885 - ஹ நவம்பர் மாதம் 28-தேதியில் ஆவாவென்னும் மாண்டலிதேசத்தை முத்திரிகையிட்டு அடுத்த 29-தேதியில் படைத்தலைவரான பிரன்டர்காஸ்ட் ஜனரல் இராஜனைவரவேண்டுமென்று அழைக்க மேலான அப்பர்பர்மாவில்மகாகீர்த்தியும்பிரதாபமும்பெற்றதீபோராஜனனவர்தான்படைத்தயெல்லாப்பொருள்களையு மிழந்து மனஞ்சோர்ந்து இந்த ஆங்கிலேயர் நம்மைமப்பிடித்துக்கொண்டுபோய் என்னசெய்வார்களோவென்று மனங்கலங்கி ஒருதொண்டனைப்போல் படைத்தலைவன் முன்னிற்குஞ்சமயத்தில் பிரண்டர்காஸ்ட்ஜனரலானவர் அரசனைப்பார்த்துசொல்லுகிற விதங்காண்க

### பிரன்டர்காஸ்ட் விருத்தம்.

வலிமிகுத்தேயென்னுளும் வனத்திினிலிருக்கும்பொல்லா
புலியதுபெரிதோவேடன் போடும்விற்பெரிதொசொல்வாய்
மெலிவுற்றுவாடலாலே விட்டுனையேகேன்கண்டாய்
கலகமுஞ்செய்யவேண்டாங் கடுகியென்பின்னேவாராய்.

### வசனம்.

கேளும் அப்பர்பர்மாவை யாண்ட அரசே காட்டில் மிகுந்த வலிமையுற்றுவாழுகின்ற புலியானது பெரிதாயிருந்தபோதிலும் வேடனுடைய கையிலிருக்கும் அம்பு சிறியதாக விருந்தாலும் அந்தப்புலியைக்கொல்லும் அவ்வம்பேபெரியதாகும்அதுபோல நீஎவ்வளவு பராக்கிரம

சாலியாகவிருந்தாலும் எப்பொழுது நீ என்னிடத்தில் அகப்பட்டுக் கொண்டாயோ அப்பொழுதே யுன் வீரியம் போய்விட்ட தாகையால் வுன்னை யான் பெவ்விதத்திலுங் கொண்டுபோகாமல் விடமாட்டேன் நீ வீணாய் கலகஞ்செய்யாமல் பேசாமல் என்பின்னால்வருவாய் அரசே.

தீபோராஜன் படைத்தலைவனுக்கு சொல்

வசனம்.

அகோகேளும் படைத்தலைவனே எனக்குவுன்னிடத்தில் கேட்டுகொள்ள வேண்டியகேழ்வியொன்றுண்டு நீர் கேழ்க்கச் சொன்னால் கேழ்க்கிறேன்படைத்தலைவனே. (படைத்தலைவன்) அப்படியே தடையன்றிகேளுமையா அரசே.

அரசன் விருத்தம்.

எந்தகாரியஞ்செய்தாலு மெவர்களையென்செய்தாலும்
உந்தனுக்குனாக்குஞ்சேதி வொன்றுண்டுசொல்லக்கேளாய்
புந்தியிலுயர்ந்தயெந்தன் புங்கியாங்குருக்கள்தன்னை
சிந்தையுங்கலங்காதென்றுஞ் சீருடன்கார்த்திடீரோ.

வசனம்.

கேளும் பிரன்டர்காஸ்ட் படைத்தலைவரோ எந்தகாரியம் எவ்விதமாக நடத்தினாலுஞ் சரியே ஆனால் நான் உம்மிடம் வொன்றைமாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறேன் அது யென்னவெனில் பூர்வீகமாய் எங்களுக்கு குருக்களாயிருக்கும் புங்கியென்பவர்களை மாத்திரம்மனம் வருத்தாமல் வுங்கள் குருக்களை எப்படி பாதுகார்த்து வருகிறீர்களோஅதுபோலவே அவர்களையும் நடத்தவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேனையா படைத்தலைவரே.

பிரன்டர்காஸ்ட் வசனம்.

அப்படியேசெய்வோம் அப்படியேசெய்வோம் தவரமாட்டோம் நீர் சீக்கிரத்தில் புரப்படும் அரசே.

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் இவ்வுலகத்தில் மகாகீர்த்திபெற்ற தீபோராஜன் தனக்குண்டாகிய சகலபொருள்களையும் விட்டு தன்னுடன் வருவோர்களையுமழைத்துக்கொண்டுமிகவும்வருத்தத்துடன் புலம்பிக் கொண்டு நடந்து வருகிற விதங்காண்க.

இராஜன் புலம்பல் தரு-இம். முகாரி அடதாளம்.

---

நாட்டையும் விடலாச்சே ஐயோயென்
னூஞ்சமெலியலாச்சே.

கோட்டையுங்கொத்தளமு மாங்கிலேயர்க்கு
கொடுத்திடநாளாச்சே

சிரும்போச்சுதையோ எங்கள்முழு
செல்வமும்போச்சுதையோ

ஆருந்துணையில்லா பாவிகளானோம்
அண்ணலேயென்னசெய்வோம்.

அருமையாயான்வளர்த்த எந்தனிட
ஐராவதயானையுஞ்

சிறுமைபட்டிடவிட்டேகலாச்சுதே
தெய்வமேநின்செயலோ

பாரினில்கீர்த்திபெற்ற யெந்தனப்பர்
பர்மாவையான்விடுத்து

வேறுதேசத்திற்குயேகியே நாங்கள்
மெலிந்திடவுமாச்சே

வீரியங்குன்றியதே நாளுக்குநாள்
விசனமுமேலிடுதே

தேருதல்செப்பிட யெங்களுக்கின்றொரு
திக்கையுங்காணோமே

பெரியோர்கள்சேர்த்துவைத்த யெந்தனிட
பெருந்தனங்களையெல்லாம்

விருதாவாகவே ஆங்கிலேயர்வசம்
விட்டிடவுமாச்சுதே

பஞ்சவர்னத்தையுற்ற விலைபெற்ற
பரிகளனத்தினையும்

வஞ்சகர்கைக்கொள்ள லாச்சுதையோவிதி
வசமோவரியேனே

அவனியிற்கிடையாத தேக்கின்காட்டை
ஆங்கிலேயர்க்கொப்பிக்க

தவந்தனிலேயென்ன தாழ்ச்சிசெய்திட்டேனோ
தயங்கவிட்டாய்தெய்வமே

சிங்காரமாளிகையுஞ் சிறப்புற்ற
தெய்வஸ்தலங்களையும்

மங்காதசெல்வத்தையும் விட்டேகிட
மகதேவாவுன்செயலோ

என்னாட்டினிற்சிறந்த விலையுயர்ந்த
யெழிலாம்நவரத்தினமும்
பொன்னோடுவெள்ளியும் விளையுந்தேசமென
புகழுவதும்போச்சே
மாணிக்கமுத்திழைத்த நல்லசிம்
மாதனத்தைவிடுத்து
நாணமுற்றுவோர் வாகனமின்றியே
நடந்திடநாளாச்சே

---

பொது விருத்தம்.

ஆண்டெனுமெண்பத்தைந்தை யடுத்ததோர்நவம்பர்மாதம்
மாண்டலிதேசமாண்ட மன்னனைப்பிரன்டர்காஸ்டும்
வேண்டியபெயரைக்கூட்டி வீரர்காவலரைவைத்து
நீண்டதோர்கப்பலேத்தி நீக்கினான்விரைவிற்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் 1885-வருஷம் நவம்பர்மாதத்தின் 29 தேதியில் ஆங்கிலெயப் படைத்தலைவனாகிய பிரன்டர்காஸ்ட் ஜனரலானவர் ஆவாதேசத் தரசனாகிய தீபோராஜனையும் இரண்டு பத்தினிமாரையும் அவர்தாயார் முதலான குடும்பத்தாரையும் காவல்கார்க்கும் வெகுவீரர்களுடன் கப்பலேத்தி இந்தியாவுக்கு அனுப்பிவிட்ட விதங்காண்க.

தீபோ தேவாரம்.

அஞ்சியேபயந்துயெங்கள் அரும்பொருளெல்லாம்பொல்லா
வஞ்சகர்தமக்கொப்பித்து மனம்வருந்திடவிதித்தாய்
தஞ்சமென்றுனையடைந்தோம் தயவதுவைத்துயிந்த
பஞ்சைகள்தமைகாப்பாய்தற் பரனேவுன்பாதம்போற்றி.

இ-ம். சாமா அட-தாளம்.

---

விதிவசமோயெந்தன் பதியையிழந்தின்று
வேறுதேசம்போக வெகுவாக மனம்நோக
விட்டையோ ஓ - வேதனே சகன்னாதனே செக நா-நா-நா.

மாண்டலிமுழுதையும் ஆண்டவரசனென
வழங்கினதும்போச்சே இழிவாச்செ வாழ்வும்போச்சே
மாதேவா என்ன மாயமோயிது ஞாயமோ ஞா-ஞா-ஞா.

இக்குவலயத்தில் திக்கில்லாப்ாவிபோல்
எங்கவிடுத்தாயே இனிநீயே மதிப்பாயே
என்னையாள் எமமீசனே பவநாசனே நா-நா-நா.

முன்னாளிலிருந்து இன்னாள்வரையிலும்
மூதோராண்டநாட்டை சிங்காரக்கோட்டை எந்தன்வீட்டை
முத்திரிகை யிட்டான் மூர்க்கனும் துர் மார்க்கனும் மா-மா-மா

சத்துருக்கள்வந்தென் சொத்தனைத்தினையும்
தந்திரமசய்பரிக்க மனந்துடிக்க ஒப்புக்கொடுக்க
தயாபரா இது தர்மமோபெந்தன் கர்மமோ க-க-க.

அவனியில்நானென்ன பவமதுசெய்தேனோ
ஆங்கிலேயர்கையிற்சிக்கி மனஞ்சொக்கி கலம்புக்கி
அவதியும்பட ஆச்சுதேபெரும் வச்சிதே வ-வ-வ.

## ஆங்கிலேய ஆபீசர்சொல் விருத்தம்.

கம்மியர்தீபோராஜா கமாண்டரிங்சிப்துரையுமிப்போ
உம்மையோர்சிவிகைதன்னி லொருதடையின்றியேத்தி
தம்மிடத்தினிலேகொண்டு தான்வரச்சொன்னாரையா
எம்முடன்கூடநீரு மினிதுடன்வருகுவீரோ.

## வசனம்.

அகோகேளும் மாண்டலிதேசத்தை ஆண்ட அரசே உம்மை எமது கமாண்டரிங்சிப் துரையானவர் அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரையா அரசே. (அப்படியே வருகிறேனையா துரையே.)

## கமாண்டரிங்சிப் சொல்விருத்தம்.

மைடியர்தீபோவென்னும் மகாராஜாசொல்லக்கேளும்
கொயிட்வெல்லோநீருமுந்தன் கூடவேவந்தபேரும்
நயிட்டதுவானதாலே நாளைக்கிபேசுவோம்நாம்
ஒயிட்வாஷெய்தலங்கரித்த உச்சிதவீட்டிற்செல்வாய்.

## வசனம்.

கேளும் இராஜனே நீரும் உன்னுடன் வந்திருப்பவர்களும் சுகமோ? (கடவுள்கிருபையால் சௌக்கியமேதுரையே) இப்பொழுது இராவுகாலம் வந்தெய்தியதால் உன்னிடம் பேசபொழுதில்லை ஆதலால் அதோவெள்ளை அடித்து சுத்தி செய்திருக்கும்படியான பங்களாவிலிருப்பாய்அரசே.(அப்படியேமகாபாக்கியமையா துரையே.)

## பொது விருத்தம்.

அரசனைப்பிடித்தாங்கிலேயர் அனுப்பியேவிட்டானென்ற
உரையதைகேட்டுக்காட்டில் உள்ளதோர்மன்னன்சேனை
சிருவூர்கள்தன்னிலுள்ள ஸ்திரீகளுங்கணவர்மக்கள்
கருகிடதீயைமூட்டி கலகமேசெய்திட்டாரோ.

## வசனம்

அகோதெப்படியென்றால் ஆங்கிலேயர்கள் தீபோ அரசனை கப்பலேத்தி இந்தியாவுக்கு யனுப்பிட்ட சங்கதியை முன்மேலாகோட்டையி

லிருந்து தப்பித்துக்கொண்டு தங்கள்ராஜன் உத்திரவின்படி காட்டினில், ஒளித்திருந்தராஜன்படைகள்கேட்டு தங்கள்துன்மந்திரியின் சொற்படி சிருவூர்களைநெருப்பிட்டுக் கொளுத்தி கொள்ளையடிக்கிற விதங்காண்க.

டாக்காவென்னும் அரசன்படைகள் சிருவூர்களை தீயிட்டு
கொள்ளையடிக்கும் தரு-இம். புன்னாகவராளி அடதாளம்.

---

அனலிட்டுவூரை அரசன்படை அழித்திட்டார்பாரோ

அனலிட்டாரூரார்கள் அனைவருங்கலங்கியே
ஐயோஐயோவென்று அலரியேமடிந்திட ... (அன)
என்னசெம்வோமென்று யேங்கியழுவோரும்
ஈசன்றனைநினைத்து யிறைஞ்சியேதொழுவோரும் ... (அன)
மக்கள்மனையுந்தங்கள் மாதர்களையும்விட்டு
வருத்தப்பட்டேயெரிந்து மண்மேல்விழுவோரும்... (அன)
எதிரிகள்வந்தெம்மை யேதுஞ்செய்யாதிருக்க
இறைவன்படைகளே யெரிப்பதேதென்போரும் ... (அன)
பிள்ளைகள்தனைகீழே போட்டுவோடுவோரும்
பிழைப்பதெவ்விதமென்று பெருங்கூச்சலிடுவோரும். (அன)
சிலையெரிந்தோரும் தீயினிலகப்பட்டு
தெய்வமேயென்றுசெத் தெமபுரஞ்சேர்வோரும். ... (அன)

பொது - விருத்தம்.

கள்ளர்கள்வந்தெம்மூரை கனலிட்டுகொளுத்திவிட்டு
கொள்ளையுமடித்தாரென்று கூக்குரலிட்டுவோடி
வெள்ளம்போற்கண்ணீரோட மெத்தவுமெலிந்துவாடி
உள்ளதைஆங்கிலேயர்க்கு வுரைத்துமேபுலம்புவாரோ.

வசனம்.

அகோதெப்படியென்றால் அரசன்படைகள் சிறுவூர்களில் தீயிட்டு கொள்ளையடிக்கும்பொழுது அந்தவூர்களின் குடிகள் மெத்தவும் பயந்துவோடி புதுராஜாங்கத்தாராகிய ஆங்கிலேயரிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிற விந்தகாண்க.

தரு - இ-ம். நீலாம்பரிஆதிதாளம்.

ஆங்கிலேயர்களெனும் அரசர்களே எங்களரசர்களே — நாங்கள்
அபயமெனவந்தோமையா அரசர்களே.
தீபோவரசன்படை அரசர்களே எங்களரசர்களே — வந்து
தீயால்வூரையெரித்தார் அரசர்களே.

பெண்டுபிள்ளைகள்தம்மை அரசர்களே எங்களரசர்களே—வந்து
பிடித்துக்கொண்டானென்செய்வோம் அரசர்களே.

வாழ்ந்தவாழ்வெல்லாம்விட்டு அரசர்களே எங்களரசர்களே—
மனைகள்விட்டோடிவந்தோம் அரசர்களே. [எங்கள்.

பட்டுச்சீலைகள்முதல் அரசர்களே எங்களரசர்களே - பத்தி
பஷ்பமாய்விடலாச்சே அரசர்களே.

தங்கவுமிடங்காணோம் அரசர்களே எங்களரசர்களே யாரைச்
சார்ந்துபிழைப்போமையா அரசர்களே

சக்தியற்றவராகி அரசர்களே எங்களரசர்களே — உம்மை
சரணடைந்திடலானோம் அரசர்களே.

மட்டிலாபலம்பெற்ற அரசர்களே எங்களரசர்களே — எங்கள்
மானங்காக்கவேண்டும் அரசர்களே.

உங்களைவிடயிப்போ அரசர்களே எங்களரசர்களே — யாரும்
உற்றதுணையுங்காணோம் அரசர்களே.

துன்பமேவிளைத்தார்கள் அரசர்களே எங்களரசர்களே — அந்த
துஷ்டனையடக்குவீர் அரசர்களே.

பாதகனைப்பிடித்து அரசர்களே எங்களரசர்களே — நீங்கள்
பதைக்கப்பதைக்கக்- கொல்வீர் அரசர்களே

குடிகள் விருத்தம்.

அக்கினிதன்னைமூட்டி அழித்திட்டானெங்களூரை
மக்களுமனைவியோடு மாண்டார்களெமக்கின்றுற்ற
துக்கத்தையுங்களோடு சொல்லிடவந்தோமையா
அக்கள்வர்தம்மைக்கொன்று அடியரைகாப்பீர்போற்றி.

வசனம்.

கேளும் புதிய இராஜாங்கத்தாரே யெங்களூரை அக்கினியிட்டுஅரசன்படைகள் கொளுத்தியதால் எங்கள் மனைவிமக்களும் பந்துஜன முதலானவர்களும் வெந்துமாண்டார்கள் இனியெங்களுக்கு வுங்களைவிட வேறுகதியில்லை ஆதலால் நீங்கள் அந்தகொடியர்களை அதமாக்கி யெங்களை காத்து ரட்சிப்பீர்புதிய இராஜாங்கத்தாரே.

பிரண்டர்காஸ்ட் ஜனரல் குடிகளுக்குச்சொல்

விருத்தம்.

வாட்டங்கொண்டோடிவந்து வழுத்தியசனங்காள்கேளீர்
தாட்டிகமாகவூரைத் தணலிட்டுக்கொளுத்திப்போன
கூட்டமாங்கள்வர்தன்னை குண்டுகள்விட்டேயாங்கள்
வேட்டையாடிடுவோமகண்டீர் விசனத்தைவிட்டிடீரே.

வசனம்.

கேளுங்கள்குடிகளே வுங்களுனைநெருப்பிட்டுகொளுத்தி அதமாக்கிவுங்களையும்நோகச்செய்த அந்தகொடியதுஷ்டர்களை குண்டுகளைவிட்டு கொன்று அதோகெதியாக்கி விடுகிறோம் நீங்கள்யாதொன்றுக்கும் அஞ்சாமல் தைரியத்தோடு யிருங்கள் குடிகளே.

பொது விருத்தம்.

குடிகளையனுப்பிமெத்தக் கோபங்கொண்டாங்கிலேயர்
படைகளை பிரண்டர்காஸ்ட்டும் பவின்செய்துகள்வர்மீது
திடமனதுடனடத்த சிப்பாயிமார்கள்தானும்
மடமடவென்றேகுண்டை மாரிபோல்விடுத்திட்டாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அபயமென்றுவந்தடைந்த குடிகளுக்கு இடஞ்சொல்லியபின் பிரண்டர்காஸ்ட் ஜனரலானவர் மெத்தவுங் கோபத்துடன் தன்னுடைய படைகளை வெகுதுரிதமாய் டிக்காசர்களென்னும் காட்டிலுள்ள ராசன்படைமீது சண்டைசெய்ய நடத்தவே சிப்பாய்மார்கள் இடியிடித்தாற்போல் குண்டுகளைவிட்டு சண்டைசெய்யும் விதங்காண்க.

சண்டை தரு—இராகம் தன்னியாசி அடதாளம்.

சிப்பாயிமார்களும் டிக்காசின்மீதினில் செய்தசண்டையைக்கேளீர். (சி)

தப்பாமல்குண்டுகள் தனைவிடுத்தேயவர்கள்
அப்பாயென்செய்வோமென் றலரியேவோடிட. (சி)

மின்னலைப்போலவே மெருகிட்டகத்திகள்
தன்னைக்கொண்டவர்கள் தலைகளைவெட்டியே. (சி)

ஓடிகானகத்தி லொளித்திடும்பெயர்களை
தேடிபிடித்தவரை சிதைத்திடுவோர்களும். (சி)

எதிர்த்துவந்தவரை யெட்டிச்சிகைப்பிடித்து
அதட்டியேயீட்டியால் அங்கம்பிளப்போரும். (சி)

குடல்கள்சரிந்தேமணமேல் குப்புரவிழுவோரும்
திடமற்றுயெங்கெங்குஞ் சிதரியேவோடுவோரும். (சி)

பெருவிருந்திட்டனர் பேய்நாய்நரிகளுக்கு
திரமுடனசிப்பாய்கள் திரும்பினாரிருப்பிடம். (சி)

---

பொது — விருத்தம்.

அதமாக்கிஆங்கிலேயர் அகன்றபின்டிக்காசென்போர்
விதனமேலிட்டுமெத்த மெலிந்துதம்மந்திரிதன்னை

துதிசெய்தேகாலில்வீழ்ந்து சொன்னார்கள்நடந்தசேதி
அதிபதியானமந்திரி அறைகுவான்திடமவர்க்கே.

வசனம்.

இந்தபிரகாரமாக ஆங்கிலேயர் அரசன்படைகளாகிய கானகக் கள்வர்களையடித்து அதமாக்கி திரும்பி தங்களிடம் போனபிறகு ஆங்கிலேயர் அடிபடைக்கி தப்பிவோடிப்போன கள்வர்கள்அவர்களுக்கு அதிபதியாயிருக்கும் தங்கள்மந்திரியோடு முறையிட்டுக் கொண்டார்கள் அதற்கு மந்திரியானவன் அவர்களுக்கு பயப்பட வேண்டாமென்று திடஞ்சொல்லுகிற விதங்காண்க.

காட்டிலுள்ள கள்வர்களுடைய மந்திரிசொல்

விருத்தம்.

ஆங்கிலேயர்களால்மெத்த அடிப்பட்டுவந்தீங்கள்
ஏங்கியேயழுகவேண்டா மின்றையதினமாங்கிலேயர்
தூங்கிடுஞ்சமயம்பார்த்துத் தொல்நதிதனையுடைத்து
தீங்குற்றுவவர்கள்சாகச் செய்திடல்வேண்டுங்கண்டீர்.

வசனம்.

கேளுங்கள் என்படைகளே நீங்கள் இன்றைக்கு ஆங்கிலேயர்கள் தூங்குஞ்சமயம்பார்த்து நம்முடைய ஐராவதிநதியின் கறையையுடைத்துவிட்டால் அந்தஜலம் பெருகிவோடினால் ஆங்கிலேயர்கள் மாண்டுபோவார்கள் இல்லையென்று நாம் ஆங்கிலேயருடன் எதிர்த்தால் வீணாக நாமே சாகவேண்டிவரும் ஆகையால் நான் சொன்னவிஷயத்தில் மாத்திரம் வெகு ஜாக்கிரதையாயிருங்கள் படைகளே.

பொது விருத்தம்.

தந்திரமாகமந்திரி சாற்றியசொல்லைக்கேட்டு
இந்தநல்லுபாயத்தாலே யெதிரிகள்மாள்வாரென்று
அந்தரமாகவந்து ஆற்றிநற்கறையைவெட்டி
சிந்தைபட்டாங்கிலேயர் செத்திடசலம்விட்டாரே.

வசனம்.

அதோதெப்படியென்றால் இந்தபிரகாரமாக மந்திரிசொன்னதை இராஜன்படைகளான கள்ளர்கள்கேட்டு இதுதான்நல்லவுபாயமென்று அர்த்தராத்திரியில் எல்லோரும் பெருங்கூட்டமாகக்கூடி அயிராவதியாற்றின் கறையையுடைத்து தண்ணீரை ஆங்கிலேயர்மீது விட்ட விதங்காண்க.

ஆங்கிலேயப் படைத்தலைவன் வெள்ளம்வருவதைப் பற்றி
குடிகளை விசாரிக்கும் விருத்தம்.

ஜனங்களேகேளீராற்றின் சலமதுசமுத்திரம்போல்
தினம்பொங்கிவந்தேயிந்த தேசத்தையழிப்பதுண்டோ
மனமதில்வஞ்சகத்தை வையாமலுண்மையாக
இனமெனவுரைத்தால்நாங்கள் எதிரிட்டாலோசிப்போமே.

வசனம்.

கேளுங்கள்குடிகளே இந்த ஐராவதியென்னுமாறு பொங்கிவந்து யிந்த தேசத்தையழிப்பதுண்டோ அல்லது வேறு விதமாய்வந்ததோ அதைநான் அறியும்படியாய் யாதொருகளங்கமில்லாமல் சொல்லுவீர்கள் ஜனங்களே.

குடிகள் விருத்தம்.

எங்களாண்டவரேகேளீர் எப்பவுமில்லாவாரு
பொங்கியேவருதல்கண்டால் புதுமைதான்கானகத்தில்
தங்குஞ்சத்துருக்களாற்றின் சலத்தைவிட்டார்களென்று
சங்கையில்லாமல்நாங்கள் சாற்றுவோங்காணுவீரே.

வசனம்.

சரணஞ் சரணமையா ஆங்கிலேயதுரையே இதுவரையிலும் இந்தமாண்டலிதேசத்தில் ஐராவதிஆற்றின் வெள்ளம்புரண்டு வந்ததுமில்லை சனங்கள் சேதப்பட்டதுமில்லை இப்பொழுது சலம்புரண்டுவருவதைப்பார்த்தால் வெகு ஆச்சரியமாகக் காணுகிறது ஆனால் நமது சத்துருக்களாகிய காட்டிலுள்ள அரசன்படைகள் ஆற்றின்கரையை யுடைத்து நம்மை நஷ்டப்படுத்தும்படி ஜலத்தை திருப்பிவிட்டாரென்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை ஐயாபடைத்தலைவரே

படைத்தலைவர் குடிகளுக்குச்சொல் விருத்தம்.

நேமமாய்நீங்கள்சொன்ன நியாயத்தைத்தெரிந்துகொண்டோம்
தாமதமாயிராமல் சடுதியிலாற்றின்கட்டை
பூமியின்மண்ணுங்கற்கள் போட்டுநன்றாய்க்கட்டுங்கள்
பாமரர்தம்மைநாங்கள் பரக்கடித்திடுவோங்காணீர்.

வசனம்.

கேளும் ஜனங்களே நீங்கள் சொன்னவைகளை அறிந்துகொண்டோம் நீங்கள்தாமதமாயிராமல் அதிகசீக்கிரமாக ஐராவதியினருகே சென்று தக்கபடி மண்ணுங்கல்லும் போட்டு ஜலம்பெருகி வரவொட்டாமல் அணைகட்டுங்கள் அந்தபொல்லாத துஷ்டர்களான கள்ளர்களை இதோநாங்கள் அதோகெதியாக்கிவிடுகிறோம் பிரஜைகளே.

ஆங்கிலேயப் படைத்தலைவன் தன்னுடையபடைகளுக்குச் சொல் வசனம்.

அகோகேளுங்கள் வீரமிகுந்த யெனதுபடைகளே இப்பொழுது நடந்தவர்த்தமானத்தை கேட்டீர்களே நாம் இனிசும்மாயிருக்கலாகாது நம்முடைய பிரயத்தினயுக்தியால் எவ்வளவோ பிரயாசையோடு யிந்த மாண்டலிதேசத்தைப் பிடித்தும் இதைநாம் அளவிடக் கூடாதென்ப தாய் ஆற்றையுடைத்துவிட்டதில் நம்மில் எத்தனையோ படைவீரர்களும் இந்ததேசநிவாசிகளில் மிதமற்ற ஜனங்களும் கூட கோபுரம் மாடமாளிகை முதலானதும் வெள்ளத்திற்கிறையாய் விட்டதுகள் ஆதலால்நாம் தாமதமாயிராமல் டாக்காகள் குடியிருக்கும் மலைவனாந்திரங்களுள் சென்று அந்த துஷ்டனை கொல்வோம் வாருங்கள் வீரர்களே.

படைகள் வசனம்.

அப்படியே செல்வோம் அப்படியேசெல்வோம் படைத்தலைவரே.

பொது விருத்தம்.

காக்கைகள்கூட்டம்போலக் கையினிற்கத்தியேந்தி
சீக்கிரமாயெதிர்த்து டிக்காசர்வருகைதன்னை
நோக்கியசிப்பாய்மார்கள் நொடிதனிற்கொல்வோமிஸ்கு
மாக்குமைச்சோதுமென்று மாட்டினார்வெடிகள்கொண்டே.

வசனம்.

இப்படியாக ஆங்கிலேயப்படைகள் டிக்காசர்களான கள்வர்மீது சண்டைக்கேக சகல ஆயுத முஸ்தீபுடன் கத்தியைப்பிடித்துக் கொண்டு வருகையில் காக்கைகள் கூட்டம்புறப்பட்டதுபோல் டிக்காசர்கள்எதிரில்வருவதைசிப்பாய்கள்கண்டு மெத்தவும்வீரங்கொண்டு இஸ்குமாக்குமைச்சோதுமென்று குண்டுகளைவிட்டுசண்டைபோடுகிற விதங்காண்க.

டிக்காசர்மீது ஆங்கிலேயப்படைகள் சண்டைசெய்யும்
தரு-இம். சாவேரி அடதாளம்.

ஆரடாவென்று அதட்டிக்குதிரைவீரர்
சீறிக்குண்டவர்மேல் செலுத்திக்கொன்றனரே.

கொன்றிடடிக்காஸ்கள்கொக்கரித்தேயெதிர்த்து
மண்டிப்போட்டுப்பரியை வாளால்வெட்டினரே.

வாளால்குதிரைகளை வருத்தங்கொளவெட்டவே
பாலாகொண்டுசிப்பாய்கள் பதைக்கக்குத்தினரே.

குத்திடடிக்காசர் குதித்துப்பரிவீரரை
கத்தியினால்வெட்டி காட்டில்வீழ்த்தினரே.

வீரனைக்கொன்றிட மிகுகோபமாகவே
நேரில்துபாக்கியை நீட்டிச்சுட்டனரே.

சுட்டதோர்குண்டினல் துஷ்டகள்வர்கள்மிக
நட்டபடசிப்பாய்கள் நடத்தினர்சண்டை.

ஆங்கிலேயரொதிர்த்து அடித்தகுண்டுகள்தன்னை
தாங்கொணுமலேகள்ளர் தயங்கிவோடினரே.

பொது விருத்தம்.

கள்ளராம்டிக்காஸ்மாரைக் கத்தியுங்குண்டைக்கொண்டு
வெள்ளரிக்காயைப்போல வீசியசிப்பாய்மார்மேல்
உள்ளத்தில்திடமுங்கொண்டு வுங்களைக்கொல்வோமென்று
துள்ளியேடிக்காஸ்மார்கள் சொல்லுவார்வீரந்தானே.

வசனம்.

இப்படியாக ஆங்கிலேயப் போர்ச்சேவுகர்கள் டிக்காசென்னும் கானக கள்ளர்களை அடித்து அதோகதியாக்கிய பின்னும் டிக்காஸ்மார்கள் திடங்கொண்டு ஆங்கிலேயருடன் எதிர்த்து வீரதத்துவங் கூறுகிறவிதங்காண்க.

டிக்காசர்கள் தரு-இம். மோகனம் ஆதிதாளம்.

---

என்னயெண்ணிவந்தீரடா கல்லாக்களே
என்னயெண்ணிவந்தீரடா.

என்னயெண்ணிவந்தீரடா யெங்களை யெதிர்த்தெங்கள்தன்
மன்னனைப்பிடித்துப்பின்னு மனந்திடங்கொண்டுயிங்கு (என்)

கரும்புபோலுங்களையெம் கத்தியினலேவெட்டி
விருந்திடுவோம்நாய்பேய்க்கும் வேகமாயோடிப்போங்கள் ( )

எரும்புபோலவேநீங்கள் எங்களைமொய்த்ததாலே
திரும்புவோமோபயந்து சின்னுபின்னஞ்செய்யாமல் (என்)

அரசுரொன்றெங்களை அரியீரோநீங்களும்
பசியெடுத்தாலும்புலி பசும்புல்லைமேயுமோ (என்)

அடிக்குங்குண்டுகள்தன்னை அட்டிசெய்துதட்டியே
நொடிக்குள்ளேவுங்களை நொருக்கிசாற்றைப்பிழிவோம் (என்)

ஆருங்களை இடங்கொண் டனுப்பினனோஅவனை
கூறுவீர்களிப்போதே கொன்றுபழியைதீர்ப்போம் (என்)

பொது விருத்தம்.

காட்டில்வாழ்டிக்காஸ்மார்கள் கடுங்கோபமாயெதிர்த்து
தாட்டிகமாகவேதான் சாற்றியமொழியைக்கேட்டு

வாட்டிடவேண்டுமென்று வல்வராஞ்சிப்பாய்மார்கள்
ஓட்டினூர்குண்டவர்மேல் ஒருமிக்கச்சாகத்தானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக டிக்காசென்பவர்கள் ஆங்கிலேயப் போர்ச்சேவுகருடன் வீரத்தன்மையான வார்த்தையைச் சொல்லக்கேட்ட சிப்பாய்கள் மெத்தவுங் கோபங்கொண்டு பீரங்கிதுப்பாக்கி முதலானவைகளை அவர்களுக்கு நேராக திருப்பி சுட்டு சண்டைசெய்கிற விதங்காண்க.

தரு-இ-ம். நாதநாமக்கிரிகை ஆதிதாளம்.

---

விட்டார்சிப்பாய்கள்குண்டுகள் பட்டார்டிக்காசுமார்கள் (வி)
விட்டனர்குண்டுகள் மட்டிலாகோபமாய்
துட்டர்களெங்குங் கெட்டலேந்தோடிட ... (வி)
கத்தியைக்கையினில் பத்தியேவந்த
பித்தர்கள்மிகநொந்து சித்தங்கலங்கிட ... (வி)
கண்ணிழந்துசிலர் மண்ணில்விழுபவரும்
திண்ணமற்றுசிலர் எண்ணமிட்டேங்கிட ... (வி)
ஊரில்புகுந்திவர் சூறையடித்துபின்
ஆறையும்வெட்டின பேறைவிடோமென ... (வி)
முண்டங்களுந்தலைகள் துண்டுதுண்டாய்விழ
கண்டித்தெறிந்தனர் எண்டிசைபரவிட ... (வி)
மார்புகிழிந்துசிலர் சோர்வடைந்தலரிட
போர்ச்செய்ததிரமையை யார்சொலவல்லவர் ... (வி)

பொது விருத்தம்.

எதிரிகள்மேல்சிப்பாய்கள் ஏராளமாகபாய்ந்து
பதைத்திடவாளால்வெட்டி பஞ்சுபோற்பரக்கடித்து
மிதமற்றகளிப்பினோடு விடுதிக்கித்திரும்பிவந்து
விதனமற்றிருந்திட்டார்கள் வெற்றியைபெற்றுத்தானே.

வசனம்.

இப்படியாக ஆங்கிலேயப் போர்ச்சேவுகர்கள் குண்டுகள்விட்டும் வாளால்வெட்டியும் டிக்காசுகளை காற்றில் இலவம்பஞ்சு பரப்பதுபோலே பரக்கடித்து யினியெதிர்த்து போர்செய்பவ ரொருவருமில்லையென்று தங்களிருப்பிடமாகிய கூடாரங்களுக்குத் திரும்பிவந்து சந்தோஷத்துடன் இருந்தார்க ளென்றுகாண்க.

ஆங்கிலேயர் வெற்றிபெற்ற பொது தரு
இ-ம். சுருட்டி ஆதிதாளம்.

வெற்றிபெற்றுவந்தாரையா போர்
வீரரானரணசூரர்களளின்று ... (வெற்)

வெற்றிபெற்றுவந்தனர் மேலானபர்மாநாட்டில்
உற்றசேனையையெல்லால் ஒருமிக்கவேமடித்து... (வெற்)

கண்டபகைவர்களை கைப்பிடியாய்ப்பிடித்து
சண்டனைப்போலவெட்டி தரைதனில்வீழ்த்தியே... (வெற்)

ஐந்துநாளாகிலும் அன்னந்தண்ணீரில்லாமல்
மந்தப்படாமலே மாற்றலரையடித்து ... (வெற்)

இரவுபகலென்று யெண்ணுமலேநடந்து
உரங்கொண்டேவொன்னலர் ஓடவாள்கொண்டுவெட்டி ()

குருதியாறுபோலோட கொடியதுஷ்டர்கள்தன்னை
மரித்தாங்கிலேயர்கள் மனமிகக்களிப்புடன் ... (வெற்)

மாண்டலிதனிலுள்ள மட்டிலாபொருள்தன்னை
ஆண்டவன்கிருபையா லாங்கிலேயர்கைக்கொண்டு... (வெற்)

சயபேரிகைகளெங்குந் தாம்தாமென்றுமுழங்க
பயமிலேயென்றுவீரர் பதிதனக்கேதிரும்பி ... (வெற்)

பொது ஆசிரியவிருத்தம்.

ஆயிரத்தெண்ணூத்தியெண்பத்தியேழாவ
தாண்டெனும்பிப்ரவரியில்
சாபலொடுபஷ்டுபிரிகேட்டு மதிராசுக்கு
தடையின்றிதிரும்பவென்றே
நேயமுடன்பார்லிமென்டாருமேமின்தபால்
நீட்டினார்படைகளுக்குள்
நாயகனெனும்பிரன்டர்காஸ்டுதம்சேனைக்கு
நவின்றனனார்டர்தனையே.

வசனம்.

இந்தப்பிகாரமாக ஆங்கிலேயப்படைகள் வெற்றிபெற்று சந்தோஷமாய் இருக்குங்காலத்தில் 1887-வருஷம் பிப்ரவரி மாதத்தில் பஸ்ட்டு பிரிகேட்டு மதிராசுக்கு திரும்பி வரவேணடுமென்று பார்லிமென்டாரால் டெலிகிராப்பென்னும் மின்தபால படைத்தலைவரான பிரன்டர்காஸ்ட் ஜனரலுக்கு வந்தவுடனே அவர்தமது சேனைகளாகிய பஸ்ட்டுபிரிகேட்டுக்கு ஆர்டரை அறிவித்தாரென்றுகாண்க.

பொது விருத்தம்.

உத்தரவதனைக்கேட்டு வுள்ளமுமிகக்களித்து
மெத்தவும்விரைவதாக மேவினர்சென்னைதன்னில்
எத்தலந்தனிலேமுன்பு மிருந்தனரப்பதிக்கே
சித்தமாய்ப்படைகள்யேகச் சிலவதுகொடுத்திட்டாரே.

வசனம்.

இவ்விதமாக படைத்தலைவரான பிரன்டர்காஸ்ட் ஜனரல் அறிவித்த ஆர்டரைக்கேட்ட போர்ச்சேவுகர்கள் மட்டடங்கா சந்தோஷத்துடனே படைத்தலைவரின் உத்திரவின்படி சேனைகளெல்லாம்மதிராசுக்குவந்து சேர்ந்தவுடனே முன்யெங்கெந்த பட்டாளங்கள்எவ்வெவ்வூரிலிருந்தனவோ அந்த வூர்களுக்கே மறுபடியும் போகவேண்டுமென்று பார்லீமென்ட்டாரால் உத்திரவு ஆச்சுதென்றுகாண்க.

பொது விருத்தம்.

சிலவதுபெற்றேயெல்லாச் சேனைகள்முன்னிருந்த
தலமதற்கேகித்தங்கள் தாய்பெண்டுமக்களோடு
கலந்துமேசொல்லவொண்ணா களிப்பிலேயிருக்கும்போது
வலவனுங்கீபோநாட்டின் வளமையைத்தாய்கேட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக ஆர்டரைக்கேட்ட சகலமான கன்துருப்பு பட்டாளங்கள் முதலானதும் முன் அவர்களிருந்த வூர்களுக்குப்போய் தங்கள் தங்கள் தாய்தந்தை மனைவிமக்கள்மார் இஸ்டர்களுடனும் கலந்து சந்தோஷமாயிருக்கும்போது ஒருபோர்ச்சேவுகனுடைய தாய் அப்பர் பர்மாவின் அலங்காரத்தைப்பற்றி மகனை கேட்கும் விதங்காண்க.

போர்ச்சேவுகன் தாய் தன்மகனைக்கேட்கும் கவி.

பாலாஅப்பர் பர்மாவில்கண்ட
மேலானசிறப்பை விளம்புவாய்நீயே.

போர்ச்சேவுகன் அப்பர்பர்மாவின் சிரப்பை தாய்க்குச்சொல்

தரு இ-ம். கமாஸ் அட-தாளம்.

பல்லவி.

பார்க்க பார்க்க வெறுக்குமோ—அப்பர்
பர்மாவெனும்நாட்டை யம்மா ... (பார்)

அநுபல்லவி.

தீர்க்கமாகஅதின் சிறப்பினையாதி
சேடனுலோர்விதஞ் செப்பிடலாகுமோ ... (பார்)

சரணங்கள்.

சத்தியந்தவராதநாடு தர்மமோமிகுந்தநாடு
பத்தியாகபூசையைதினம் பரிவுடன்செய்தேத்தும்நாடு ... (பார்)

கனவிலும்பலபுருஷர்களை கடுவிஷமாயெண்ணிபெண்கள்
இனமும்தம்புருஷர்களை தெய்வமெனத்தொழுவார்கள் ... (பார்)

சாதிபேதமென்பதில்லை சாதாரணமாயவர்க்குள்
நீதியானவழிதனிலே நிலையாகநிற்பவர்கள் ... (பார்)

ஊர்சுற்றுமிருக்கும்வெகு வுன்னதமானசோலையை
பார்ப்பவர்களின்கொடிய பசியைமுழுதும்நீக்கிடும் ... (பார்)

கோட்டையுந்திபோவரசன் கொலுமண்டபசொகுசுமதில்
நாட்டியஞ்செய்பெண்களுக்கு ரதிதேவியுமிணையாவளோ...(பார்)

இரத்தினமும்பொன்வெள்ளியென் ஞளும்விளைந்திடும்நாடு
எத்திசையுங்கீர்த்திபெற்ற யிமையவர்நாடெனச்செப்பலாம் (பார்)

பலவிதமானமணிகள் பதித்திலகுபணிகளுமிவ்
வுலகத்தினில்கிடையாத வுன்னதமாமாடைகளும் ... (பார்)

---

வேறு போர்ச்சேவகனின் மனைவிகேட்கும் கவி.

நாதாமாண்டலி நகரலங்காரம்
ஓதுவீரெங்க ளுளமதுமகிழ.

வேறுபோர்ச்சேவகன் மனைவிக்குச்சொல்

தரு இ-ம். ஆனந்தபைரவி அடதாளம்.

---

பல்லவி.

மங்கையரோகேளாய்--அம்
மாண்டலிசிறப்பை ... ... (மங்)

அநுபல்லவி.

புங்கவர்பதியென புகலுவாரதனில்
தங்குவோர்கள்வெகு சத்தியவான்கள்... (மங்)

சரணங்கள்.

பொய்யுரையவரொரு போதும்பேசார்கள்
மெய்யுரைப்போர்களை மேன்மையாய்க்கொள்வார் ... (மங்)

கோவிலுக்கனுதினங் குணமாகச்சென்று
தேவனைதியானித்து சேவிப்பார்பணிந்து ... (மங்)

பிள்ளைகள்பெண்டுகள் பெருநதிதனிலே
துள்ளுவாரோடத்தை சற்றுமஞ்சாமல் ... (மங்)

நப்பியென்று சொல்லியே காற்றமீன்தனே
சுபதினங்களிலேயும் சொகுசாகதின்பார் ... (மங்)
உறைக்கவொண்ணுவெகு வுச்சிதமான
அரசன்மனையி னழகையென்சொல்வேன் ... (மங்)
மாணிக்கமிழைத்த சிம்மாதனவழகை
காணக்கண்கூசுமே காதலியார்க்கும் ... (மங்)
கொற்றவனுனாநல்ல கொலுமண்டபத்தில்
உற்றதோர்படங்க ளுச்சிதமாகக்காணும் ... (மங்)
அப்பர்பர்மாவி னலங்காரமதனை
எப்படிமுழுமையு மியம்பலாம்பெண்ணே ... (மங

---

வேறுபோர்ச்சேவுகனை சிநேகர் கேட்கும் கவி.

நண்பரோமாண்டலி நாட்டினதிசய[illegible]
அன்புடனெங்களுக் கரைந்[illegible]

போர்ச் சேவுகன் தன்சிநேகருக்[illegible]

தரு இ-ம். தன்னியாசி அட[illegible]

---

அப்பர்பர்மாவிற்கண்ட அதிசயத்திற்[illegible]தை
செப்புவேன்கேளீரோன் சினேகரோமகிழ்வாக ... (அப்பர்)
இப்புவியிலிருக்கும் எத்தேசமுமதற்கு
ஒப்பிடக்கூடாதென வுண்மையாகச்சொல்லுவேன் (அப்பர்)
மழையதுகாலத்தில் மாராமலேபெய்து
செழித்தெங்கும்பயிரது சிறந்தேயிருந்திடும் ... (அப்பர்)
நந்தவனங்களிலே நல்லமலர்களது
எந்தகாலத்தினிலும் ஏகமாய்பூத்திருக்கும் ... (அப்பர்)
அழகாககாட்டினில் அநேகவிதமான
பழங்களதுபழுத்து பாரில்வீழ்ந்தேயிருக்கும் ... (அப்பர்)
காட்டானைகடுவாய் கனத்திரளாகவே
தாட்டீகமாய்காட்டில் தான்திரிந்திடுமே ... (அப்பர்)
பெண்டுகளுமாண்களும் பிசகாதவாக்கியர்
அண்டினபேர்களை யாதரிக்கும்யோக்கியர் ... (அப்பர்)
இரத்தினமும்புட்ப ராகமும்வயிரம்
மெத்தவன்னாட்டில் விளைந்திடுங்கேளீர் ... (அப்பர்)
மன்னனுந்தீபோகொலு மண்டபமனையின்
வுன்னதத்தையா ருரைக்கவல்லவர்கள் ... (அப்பர்)

---

## பொது ஆசிரியவிருத்தம்.

சுந்தரஞ்சேர்மாண்டலியைப்பிடித்தபின்பு
துரைகள்சுபைதார் ஜெமைதார்அவல்தார்நாய
விங்கதசெறிசோள்ஜர்களுஞ் சிப்பாய்மார்கள்
மிகமகிழ்வாய் மீண்டுதங்கள் பதியைச்சார்ந்த
தந்தையுடன்தாய்மனைவி மக்களோடு
சந்தோஷமாயவடம் நடந்தசேதி
சிந்தையுடன் பேசிமன மகிழ்ச்சியாகச்
சேர்ந்திருந்தார் மங்களமாயநிந்திடீரே.

## மங்களம்.

இ-ம். சாவேரி ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம்—நித்தியசுப
மங்களம் மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

மங்களங்கடவுளர்க்கும் வல்லியெம்ப்ரஸ்ராணியர்க்கும்
எங்கினும்கீர்த்திகொள் ஜனரல்பிரன்டர்காஸ்ட் து...

சரணங்கள்.

மன்னவர்க்குமன்னவனு மாண்டலிநகரமாண்டு
சென்னைபுரிவந்தடைந்த தீபோமகராஜனுக்கும் ... ம...
வீரராமாங்கிலேயர்படை வெற்றிகொள்ளிண்டியாப...
சார்புகொள்பார்லிமென்டாராஞ் சத்தியசந்தனர்களு...
இங்கிதபர்மாவிலாச மெழுதினோர்படிப்போர்சிராய்
பங்கமின்றியாடுவோர்க்கும் பாவலர்குழாந்தனக்கும்...

பர்மா-யுத்தவிலாசம் முற்றிற்று.

